விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

Registered as a Newspaper in Srilanka

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 மாசி 14 புதன்கிழமை (26.02.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 069

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## தனி ஈழம் அமைக்க தமிழர்களிடம் வாக்கெடுப்பு

### தேர்தல் அறிக்கையில் அ.தி.மு.க உறுதியளிப்பு

(சென்னை)

**தனி ஈழம் அமைந்திட இலங்கை வாழ் தமிழர்கள் மற்றும் உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் இடம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களிடையே பொது வாக்கெடுப்பு நடத்தவும் அதிமுக உறுதிபூண்டுள்ளது.**



தனி ஈழம் அமைந்திட இலங்கை வாழ் தமிழர்கள் மற்றும் உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் இடம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்களிடையே பொது வாக்கெடுப்பு நடத்தவும் அதிமுக உறுதிபூண்டுள்ளது.

மக்களவைத் தேர்தலுக்கான அதிமுக தேர்தல் அறிக்கையை அக்கட்சியின் பொதுச் செயலாளரும், தமிழக முதல்வருமான ஜெயலலிதா நேற்று வெளியிட்டார்.

அந்த அறிக்கையில் இலங்கை தொடர்பில் அடங்கியுள்ள அம்சங்கள் பின்வருமாறு,

01.இலங்கைத் தமிழர் பிரச்சினை:-

இலங்கை உள்நாட்டுப் போரின் போது,

19 ஆம் பக்கம் பார்க்க..

## இந்திய தடையை மீறி
## போர்க்குற்ற காணொளி இணையத்தில் வெளியானது

(சென்னை)

திரையரங்குகளில் திரையிட இந்தியத் தணிக்கைச் சபை அனுமதி மறுத்ததை அடுத்து, "போர் தவிர்ப்பு வலயம் :இலங்கையின் கொலைக்களங்கள் ஆவணப படம், நேற்று முன்தினம் இணையத்தில் வெளியிடப் பட்டது.

கெலும் மக்ரே தயாரித்த இந்த 94 நிமிட ஆவணப் படத்தை, இந்தியாவில் திரையரங்குகளில் திரையிடுவதற்கு இந்திய தணிக்கைச் சபை அனுமதி மறுத்திருந்தது.

இலங்கையினுடனான உறவுகளை பாதிக்கும் என்று காரணம் காட்டியே இந்த ஆவணப்படத்துக்கு இந்திய தணிக்கைச்சபையால் அனுமதி மறுக்கப்பட்டது.

20 ஆம் பக்கம் பார்க்க..

## இனப்பிளவை ஏற்படுத்த மேலைத்தேய நாடுகள் சதி

### அறிவுரைக்கிறார் பிரதியமைச்சர் சந்திரசிறி



(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற போர்வையில் மேலைத்தேய நாடுகள் இலங்கையிலுள்ள இனங்களுக்கிடையில் பிளவினை ஏற்படுத்தும் சதி முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக ...ம் தேவையற்ற சர்வதேச நாடுகளின் தலையீடுகளை தடுக்க நமக்குள் ஒற்றுமை வேண்டுமென புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் பிரதி அமைச்சர் சந்திரசிறி முத்துக்குமாரன யாழ்ப்பாணத்தில் வைத்து அறிவுரை வழங்கியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சிற்கு அமைவாக, யாழ்.மாவட்டத்தில் போரினால் பாதிக்கபட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதம

20 ஆம் பக்கம் பார்க்க..

## வடக்கு மக்களுக்கான வீடுகளை நிர்மாணிக்க நிதி இல்லை

### இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தெரிவிப்பு

வட மாகாண மக்களுக்கான வீடமைப்பு திட்டங்களுக்கு போதிய நிதி கிடைக்கவில்லை என்று இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் தலைவர் ஜகத் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கில் யுத்தம் நிறைவடைந்த பின்னர் 1,38,651 வீடுகள் நிர்மாணிக்கப்பட வேண்டி இருந்தது. அவற்றில் 32 சதவீதமானவர்கள் சொந்தமான வீடுகளை

19 ஆம் பக்கம் பார்க்க..

## துணை உயர்ஸ்தானிகரகம் கேரளாவில் இன்று திறப்பு

தமிழ் நாட்டில் உள்ள உயர்ஸ்தானிகரகத்தை மூடும் முதல் கட்டமாக இலங்கை, கேரளாவில் தமது துணை உயர்ஸ்தானி கரகத்தை இன்று திறக்கவுள்ளது.

கேரளாவின் முதலமைச்சர் ஒமன் சாண்டியால் இது திறந்து வைக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கும் - கேரளாவுக்கும் இடையிலான வர்த்தக தொடர்புகளை அதிகரித்துக் கொள்ளும் நோக்கிலேயே இந்த புதிய துணை உயர்ஸ்தானிகரகம் திறக்கப்படுவதாக அரசாங்கதரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் தமிழகத்தில் உள்ள இலங்கையின் துணை உயர்ஸ்தானிகரகத்தை மூடுவதற்கான முதல் கட்டமாக இந்த துணை உயர்ஸ்தானிகரகம் திறக்கப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக தமிழகத்தில் எதிர்ப்புகள் அதிகரி

20 ஆம் பக்கம் பார்க்க..

## அனைத்துலக விசாரணைக்கு நவநீதம்பிள்ளை பரிந்துரை

(ஜெனிவா)

இலங்கை தொடர்பில் சுதந்திரமான அனைத்துலக விசாரணைக்கு ஐ.நா மனித உரிமைகள்சபையின்ஆணையாளர் நவநீதம்பிள்ளை பரிந்துரைத்துள்ளார். இந்தப் பரிந்துரை தொடர்பான அறிக்கை நேறறு முன்தினம் இரவு வெளியாகி உள்ளது.

சிலநாட்களுக்கு முன்னர் குறித்த அறிக்கையின் உள்ளடக்கத்தின் சில தரவுகள் ஊடகங்களில் வெளிவந்திருந்த நிலையில், தற்போது



அறிக்கையின் முழுவடிவம் வெளிவந்துள்ளது.

18 பக்கங்கள் கொண்டுள்ள இந்த அறிக்கையின் முன்னுரையில், உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைகள் இலங்கையில் தோல்வி

19 ஆம் பக்கம் பார்க்க..

## அமெரிக்க தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கும்



ஐ.நா. மனித உரிமை கவுன்சிலில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கும் என்று மத்திய இணையமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் நேற்று

20 ஆம் பக்கம் பார்க்க..

## நவநீதம்பிள்ளையின் அறிக்கை துல்லியமானது - கூட்டமைப்பு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநதம்பிள்ளையின் அறிக்கை துல்லியமானது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் ஆகிய விடயங்களை மையப்படுத்தி நவநதம்பிள்ளை அறிக்கை தயாரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர பிலான துல்லியமான விபரங்கள் மற்றும் முழு அளவிலான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் அண்மையில் மேற்கொண்ட விஜயத்தின் மூலம் பெற்றுக் கொண்ட தரவுகளின் அடிப்படையில் அவர் இந்த அறிக்கையை தயாரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பிலான பல விடயங்களை சுட்டிக் காட்டியுளளதாகக்

19 ஆம் பக்கம் பார்க்க..

## நீதி கேட்கும் வாய்ப்பை தமிழர்களே பயன்படுத்துங்கள்

### வேண்டுகிறார் கருணாநிதி



(சென்னை)

ஈழத் தமிழர்கள் நீதி கேட்கும் நாள் இன்று நெருங்கி வருகின்றது. அப்போது அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு திமுக தலைவர் கலைஞர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

2012-ம் ஆண்டு பிரித்தானியப் பாராளுமன்றத்தில் கூடிய, தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உலகளாவிய பல தமிழ் அமைப்புகளாலும், அரசியல் கட்சிகளினாலும் தொண்டு நிறுவனங்களாலும் இலங்கை அரசினால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பற்றி ஒரு முழுமையான சர்வதேச சுதந்திரமான விசாரணையை ஐ.நா. வில் அங்

19 ஆம் பக்கம் பார்க்க..

## பாணின் நிறையில் கவனம் செலுத்துங்கள்

யாழ்.மாவட்டத்திலுள்ள வெதுப்பகங்களில் உற்பத்தி செய்யப்படும் பாணின் நிறையில் கவனம் செலுத்துமாறு வெதுப்பக உரிமையாளர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் யாழ்.மாவட்ட அதிகாரி தனசேகரம் வசந்தசேகரன் நேற்று தெரிவித்தார்.

மல்லாகம் மற்றும் பருத்தித்துறை பகுதிகளிலுள்ள இரண்டு விற்பனை நிலையங்களில் விற்பனை

19 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இன்றிலிருந்து உணவகங்களுக்கு தரச்சான்றிதழ் வழங்கப்படும்

## யாழ் மாநகரசபை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உணவு கையாளும் நிலையங்களுக்கான 2014 ஆம் ஆண்டுக்குரிய தரச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்றிலிருந்து யாழ் மாநகர சபையால் முன்னெடுக்கப்படுகிறது நேற்றைய தினம் மாநகரசபை வளாகத்தில் அமைந்த மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோ.பற்குணராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் தீர்மானத்திற்கு ஏற்ப இத்தரச் சான்றிதழ் வழங்கப்படுவதாக தீர்மானிக்கப் பட்டுள்ளது.

யாழ் மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேச ங்களில் காணப்படும் உணவகங்கள், தேநீர் சாலைகள், உணவு உற்பத்தி, விற்பனை நிலையங்களிற்கான தரச்சான்றிதழ்கள் இன்றி லிருந்து ஒரு வார காலத்திற்குள் வழங்குவத ற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன. சுகாதார அமைச்சின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் உணவு கையாளும் நிலையங்களின் தரத்தினை மதிப்பீடு செய்து அதற்கு அமை வாக முறையே A (பச்சை நிறச்சான்றிதழ்), B (நீல நிறச்சான்றிதழ்), C (றோஸ் நிறச்சான்றி தழ்) என்ற அடிப்படையில் தரச்சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. இச்சான்றிதழ் வழமை போல் இல்லாது இந்த வருடம் இலவசமாக வழங்குவதற்கு மாநகரசபை தீர்மானித்துள்ளது.

மாநகரசபைக்குட்பட்ட உணவகங்களின் சுகாதாரத் தன்மையை மேம்படுத்தவே இத் தரச் சான்றிதழ்கள் வருடந்தோறும் வழங்கப்படுகி ன்றன. பொதுமக்களின் நன்மை கருதி வழ ங்கப்படும் இச்சான்றிதழ்கள் மக்கள் சுத்தமான, தரமான உணவகங்களை தெரிவு செய்து ஆரோக்கியமான உணவை பெற்றுக்கொள்ள வழிவகுக்கும். இச்சான்றிதழ் வழங்கப்பட்ட பின் அவ்வுணவகங்களின் சுகாதாரத்தில் குறைபாடுகள் காணப்படுவதாக மாநகரசபை யினால் மதிப்பிடப்படுமாயின் அத் தரச்சான் றிதழ்கள் பறிமுதல் செய்யப்படும் என மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைவாக இன்றிலிருந்து சுகாதார பரிசோதகர்கள் உணவகங்களுக்கு சென்று பார்வையிட்டு, உணவகம் தொடர்பான தரவுகளை சேகரித்து மதிப்பீடு செய்வதனூ டாக இத்தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும் என மாநகரசபை அறிவித்துள்ளது. (செ)

# முன்னாள் போராளிகளை வைத்து அரசியல் செய்யாதீர்கள்

## சந்திரகுமார் எம்.பி சாடல்



தமிழ் மக்களின் அவலங்களையும், முன்னாள் போராளிகளின் அவல நிலையி னையும் வைத்து அரசியல் செய்வதை விடு த்து அவர்களை முன்னேற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினரை சாடிய நாடாளுமன்ற குழுக்க ளின் பிரதித் தலைவரும் ஆளும் கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரு மான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள் ளார்.

இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப் பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சிற்கு அமைவாக, யாழ்.மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.மாவட்ட செயலக கேட் போர் கூடத்தில் இடம்பெற்றது.இதில் விருந் தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் போராளிகளின் மறுவாழ்வு க்காக அரசாங்கம் பல்வேறு உதவிகளை செய்து வருகின்றது. இதற்கென வெளிநாடு களிலிருந்து நிதியுதவிகளை அரசாங்கம் பெற்றுக்கொள்ளவில்லை. வெளிநாடுகளில் கொடிபிடித்துக்கொண்டும், கோசமிட்டுக் கொண்டும் இருப்பவர்கள் மக்களுக்காக உதவிசெய்ய முன்வருவதில்லை.

அதேபோன்று போரால் பாதிக்கப்பட்ட மக் களின் அவலங்களையும், முன்னாள் போராளிகளின் அவலங்களையும் வைத்து அரசியல் நடத்துபவர்கள் மக்களை முன்னே ற்றவும் முன்னாள் போராளிகளுக்கு உதவி வழங்கவும் முன்வர வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# இலங்.வெளியுறவுக் கொள்கைகளை பாதுகாப்பு அமைச்சே தீர்மானிக்கிறது

## தயான் ஜயத்திலக்க விசனம்

இலங்கையின் வெளியுறவுக் கொள்கை களை பாதுகாப்பு அமைச்சே தீர்மானித்து வருவதாக முன்னாள் சிரேஷ்ட ராஜதந்திரி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார். கொழு ம்பு நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற புத்திஜீவிகள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்,

பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டில் நாட்டின் வெளிவிவகாரக் கொள்கை அமுலா க்கம் காணப்பட்டால் சர்வதேச சமூகத்தை வெற்றிகொள்ள முடியாது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அமரர் லக்ஸ்மன் கதிர்காமர் மிகச் சிறந்த முறையில் வெளியுறவுக் கொள்கைகளை அமுல்படுத்தியிருந்தார்.

லக்ஸ்மன் கதிர்காமர் பதவி வகித்திருந் தால் இவ்வாறான நெருக்கடி நிலைமைகள் ஏற்பட்டிருக்காது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக நிறை வேற்றப்பட உள்ள தீர்மானம் நியாயமற்றது.

எனினும், தீர்மானம் நிறைவேற்றுவதற் கான பின்னணியை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அத னால் ஏற்படக் கூடிய பாதக விளைவுகளினால் ஒட்டுமொத்த நாடே இழப்புக்களை எதிர் நோக்கும்.

தற்போதைய வெளிவிவகார அமைச்சின இயலாமையே பல்வேறு நெருக்கடிகளுக்கான காரணம்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவிவ காரதுறை தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகராக பிரட்மன் வீரக்கோன் என்ற அனுபவம் மிக்க அரசாங்க அதிகாரி கடமை யையாற்றியிருந்தார். ஆனால் தற்போது அதே பதவியை சர்வதேச விவகாரம் பற்றிய எவ் வித அனுபவமும் இல்லாத சஜின் வாஸ் குண வர்தன வகித்து வருகின்றார் என்றார்.

மேலும், தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் இலங்கைக்கு பாதக விளைவுகள் ஏற்படக் கூடும் என தயான் ஜயதிலக்க எச்சரிக்கை விடுத்துள்ளார். (செ-11)

## தமிழ் அரசியல் கைதி மரணம்

# இலங்கை அரசிடம் பிரிட்டன் கேள்வி எழுப்ப வேண்டும்-மனோ

(கொழும்பு)

தமிழ் அரசியல் தடுப்பு கைதி விஸ்வலிங்கம கோபிதாஸ் மரணத்துக்கு இலங்கை, பிரிட்டன அரசுகள் இரண்டும் பொறுப்பு கூற வேண்டும என ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர மனோ கணேசன் தெரிவித்தார்.

அரசியல் கைதியின் மரணம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது,

2007 ஆம் வருடம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்ட இவர் ஒரு பிரித்தானிய பிரஜை. கடந்த ஏழு வருடங்களாக சிறையில் தடுத்து வைக்கப் பட்ட நிலையில் 2009 ஆம் வருடமும், 2011 ஆம் வருடமும் சிறைக்குள்ளே தாக்குதல்க ளுக்கு உள்ளாகியுள்ளார்.

இதனால் இவர் தொடர்ச்சியாக உடல் உபாதையால் அவதிப்பட்டுள்ளார். அதேவேளை லண்டனில் வசிக்கும் இவரது மனைவியை யும், பிள்ளைகளையும் பிரிந்து வாழ்ந்ததும் இவருக்கு பாரிய மன உளைச்சலை தந்துள்ளது.

இந்நிலையில் இவர் தற்போது கழிவறை யில் இறந்து கிடக்க காணப்பட்டுள்ளார். இவ ரது மரணத்துக்கு உடனடி காரணம் எது வாக இனிமேல் சொல்லப்பட்டாலும்கூட, இந்த மரணம் ஒரு அரசியல் கொலை என்பதை இலங்கை அரசு மறுக்க முடியாது.

இந்த விவகாரம் தொடர்பில் பிரித்தானிய அரசாங்கமும் பொறுப்பு கூற கடமைப்பட்டுள் ளது. இது தொடர்பாக பிரித்தானிய அரசு இல ங்கை அரசிடம் இப்போதாவது கேள்வி எழு ப்ப வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தை முடிவுக்கு கொண்டுவர இந்த அரசு பிடிவாத மாக மறுத்து வருகிறது. இந்த விவகாரத்தை விரைவில் முடிவுக்கு கொண்டு வரும்படி இலங்கை அரசின் கற்றுக்கொண்ட ஆணை க் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதையும் செய்ய இந்த அரசு தவறியுள் ளது. தமிழ் கைதிகள் ஒன்றில் உடல், உள உபாதைகளால் கொல்லப்படுகிறார்கள். அல்லது அடித்து கொல்லப்படுகிறார்கள்.

தமது பிரஜையின் மரணம் தொடர்பாக வும், அவர் மீது கடந்த காலங்களில் நிகழ்த் தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாகவும், இவ[illegible] தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்ட விசாரணை விவகாரங்கள் தொடர்பாகவும் பிரித்தானிய அரசு இலங்கை அரசிடம் இப்போதாவது கேள்வி எழுப்ப வேண்டும் என கேட்டுகொள் கிறேன் என மனோ தெரிவித்துள்ளார்.(செ-11)

# காணாமல்போனோரின் உறவுகளின் கண்ணீருக்கு பதில் கூற வேண்டும்

## அரசுசார் அமைப்புக்கள் மீது கஜதீபன் சாடல்

(யாழ்ப்பாணம்)

யாழில் காணாமற்போனவர்களின் உறவினர்களின் கண்ணீருக்கு அரசாங்கத் துடன் சேர்ந்து இயங்கிக்கொண்டிருக்கும் அமைப்புக்களின் தலைமைகள் பதில்கூற வேண்டும் என அனலைதீவில் வட மாகாண சபையின் ஆளும்கட்சி உறுப்பினர் பா.கஜ தீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் கடந்த காலங்களில் இனந்தெரியாதோர் என்ற போர்வையில் கடத்திக்காணாமற்போகச்செய்யப்பட்டவர்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. அவர் களின் உறவினர்கள் இன்றும் கூட கண்ணீ ரும், கம்பலையுமாக வாழ்ந்து வருகின்ற னர். கடந்த வாரங்களில் காணாமற்போரு க்கான ஜனாதிபதி ஆணைக்குழு முன் சாட் சியமளித்தவர்களிற் சிலர் ,தமது உறவுகளை அரசபடைகளுடன் இணைந்து அவர்களுடன் இயங்கிவரும் தமிழ்க்கட்சி அமைப்பினரே தமது கண்முன்னே வீடுபுகுந்து கடத்தியதாக சாட்சியமளித்துள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை ஊர்காவற்று றைத்தொகுதி, அனலைதீவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அனலைதீவு அருணோதயா சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற மக்களு டனான சந்திப்பில் யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினரும், தமிழ்த்தேசியக்கூட்ட மைப்பின் பொதுச்செயலாளருமாகிய மாவை. சோ.சேனாதிராசா, வட மாகாணசபை உறுப் பினர் பா.கஜதீபன், இலங்கைத்தமிழரசுக் கட்சி இளைஞரணியின் யாழ்.மாவட்டச்செய லாளர் ப.தர்சானந், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ஞா.கிஷோர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த மக்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்., நான் இந்த ஊருக்குப் புதி யவன் இல்லை. இதே ஊரில் எட்டு ஆண்டு களாக ஆசிரியராகக் கடமையாற்றியவர். இவ்வூரிலுள்ள பலரும் என் மாணவர்களே. என்னிடம் படித்த பல மாணவர்களின் பிள் ளைகள் கூட என்னிடம் கல்வி கற்றுள்ளனர். இவ்வூரின் ஒவ்வொரு அங்குலமும் எனக்கு அத்துப்படி. எமது இளைஞரணியின் யாழ். மாவட்டசெயலாளர் தர்சானந், கடந்த மாகாண சபைத்தேர்தலில் ஊர்காவற்றுறைத்தொகுதி க்கான வாக்கெண்ணும் முகவராகச்சென்ற போது, அனலைதீவு வாக்களிப்பு நிலைய பெட்டிகள் உடைத்து எண்ணப்பட்ட போது , சுமார் 95 வீதமான வாக்குகள் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளதைக் கண்டு எனக்கு கூறியிருந்தார்.

தேர்தல் இடம்பெற்று ஒருவாரத்தின் பின் இங்கு வந்து உங்களுக்கு நன்றி கூறிச்சென்றபோது ஊர்காவற்றுறைப்பகுதி யில் நான் தேர்தலில் தோல்வியடைந்த கட்சியினரால் கல்வீசித்தாக்கப்பட்டேன். ஆனாலும் எமது மக்களுக்கான எமது பணி என்றும் ஓயப்போவதில்லை. எமது மாகாண சபைக்குரிய அதிகாரங்கள் வழங்கப்படாமல் இருக்கின்றன. இங்கு பேசியவர்கள் தமது பல தேவைப்பாடுகள் பற்றியும், ஆசிரியர் பற் றாக்குறை குறித்தும் வலியுறுத்தினர். நான் எமது மாகாண கல்வி அமைச்சருடன் இது குறித்து கட்டாயம் பேசி குறைபாடுகளை நிவ ர்த்தி செய்து தர முயற்சிக்கிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ- 6)

# இல்லமெய்வல்லுநர் போட்டி

(மானிப்பாய்)

கட்டுடை சைவ வித்தியசாலையின் வருடா ந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை பி.ப ஒரு மணி க்கு கோபாலன் பாலர் பாடசாலை மைதானத் தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் து.சிவஞானம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தின ராக வட மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், சிறப்பு விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், கௌரவ விருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் வெலிச் சோர் அன்ரன் ஜோன்சன் ஆகியோர் கல ந்து கொள்ளவுள்ளனர். (அ-9-23)


# வீடு வாடகைக்கு

நல்லூர் அரசடி வீதியில்
14-ம் இலக்க வீடு
வாடகைக்கு விடப்படும்.

(அ-6587)

தொடர்புகளுக்கு : 0770711521


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## வெற்றியின் இரகசியம்

கிரேக்க அறிஞர் சாக்ரடீஸிடம், ஓர் இளைஞன் ''உங்கள் வெற்றியின் இரகசியம் என்ன?'' என்று கேட்டான். அதற்கு நேரடியாக பதில் சொல்லாத சாக்ரடீஸ், ''என் சுவட சிறிது தூரம் வா நான் ஓர் இடத்துக்குச் செல்கிறேன். அங்கே சென்ற உடன் அதற்கு விளக்கம் அளிக்கிறேன்'' என்றார். அந்த இளைஞனும் சாக்ரடீஸ் உடன் சென்றான். அவர்கள் சென்ற இடம் ஒரு குளம்.

''வா என் சுவட... இந்த குளத்தில் இறங்கு'' என்றார் சாக்ரடீஸ். இளைஞனும் இறங்கி விட்டான். கழுத்தளவு தண்ணீருக்கு வந்தவுடன் சாக்ரடீஸ், அந்த இளைஞனின் தலையைப் பிடித்து அப்படியே தண்ணீருக்குள் அமுக்கினார். அவன் மூச்சு விட முடியாமல் திணறினான். இருந்தாலும் சாக்ரடீஸ் உடனே கையை எடுக்கவில்லை. சிறிது நேரம் சென்ற பின் கையை எடுத்தார். அப்போது அவன் மூச்சு திணறி வெளியே வந்தான். அப்படியே பெருமூச்சு விட்டான்.

இப்போது அவனிடம் சாக்ரடீஸ். ''நான் தண்ணீ ருக்குள் உன்னை அழுத்தி வைத்திருந்தேனே, அப்போது உன் நினைவெல்லாம் என்னவாக இருந்தது?'' என்று கேட்டார்.

அதற்கு அந்த இளைஞன் ''எப்படியாவது மூச்சு விட்டு விட மாட்டோமா, மூச்சுத் திணறுதே என்று நான் மூச்சு விடுவதற்காக தவித்தேன்'' எனச் சொன்னான்.

அப்போது தான் சாக்ரடீஸ் சொல்கிறார், ''எப்படியாவது சுவாசிக்க வேண்டும் என்று நீ எப்படித் தவித்தாயோ, அப்படி வெற்றி அடைய வேண்டும் என்பதில் நீ முனைப்பாகச் செயற்பட்டால் வெற்றியை அடையலாம். என் வெற்றியின் இரகசியம் இதுதான்'' என்று சொன்னார். அது தான் வெற்றியின் இரகசியம்.

மனிதர்களை பார்த்து இன்னொரு அறிஞர் சொல்கிறார்: ''ஓ மனிதனே! நீ இந்த உலகத்திற்கு வெறும் வெள்ளைத் தாளாகத்தான் வருகிறாய். அதில் நீதான் உன்னை எழுதிக் கொள்ள வேண்டும்'' என்று.

ஆனால் சில பேர் அந்தத் தாளில் கிறுக்கி விடுகிறார்கள். எவ்வளவு உற்றுப் பார்த்தாலும் அதில் எழுதியிருப்பது என்னவென்றே தெரியாது. அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை அப்படித்தான் கிறுக்குத்தனமாயிருக்கும். சில பேர் எப்படி இருக்கிறார்கள். படிக்கப்பட்ட பின் குப்பைக் கூடையிலே போடுகிற கடிதம் மாதிரி ஆகிவிடுகிறார்கள்.

இன்னும் சில பேர் அந்த தாள் ஒன்றுக்குமே ஆகாது என்பது போல தூக்கி எறிந்து விடுகிறார்கள். உபயோகமற்றவர்களின் வாழ்க்கை இப்படித்தான் இருக்கும். இப்படிப்பட்டவர்கள் வாழ்க்கையில் சாதனை படைக்க முடியாது. அந்த தாளை ஒரு காவியமாக மாற்றுகிறவர்கள்தான் உண்மையிலே வாழ்க்கையில் வெற்றி அடைந்திருக்கிறார்கள் என்று அர்த்தம் என்கிறார்.

அத்தோடு இன்னொன்றையும் மிகவும் நுட்பமாக சொல்கிறார். ''நமக்கு அப்பா அம்மா பெயர் வைக்கிறார்களே, அந்தப் பெயர் வெறும் அடையாளம் தான். அது உங்களுக்கு உண்மையான பெயர் அல்ல. உண்மையான பெயரை உங்களுக்கு சமூகம் தான் கொடுக்க வேண்டும். அதாவது நல்லவனா கெட்டவனா,பண்புள்ளவனா இல்லாதவனா, மனிதநேயம் மிக்கவனா இல்லாதவனா என்பதையெல்லாம் சமூகம் என்ன வரையறை செய்து கொடுக்கிறதோ அந்தப் பெயர்தான் வாழ்க்கையில் உங்களுக்கு நிலைத்த பெயர்.

பண்பாளன் என்று பெயர் எடுக்க வேண்டுமென்றால் அதற்குத் தக்கபடி வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ள வேண்டும். அது தான்உண்மையிலேயேநமக்குச்சமூகம்வைக்கிறபெயர்என்கிறார்.

இதற்கு ஓர் இலகுவான வழி இருக்கிறது. அதாவது நம்மைச் சுற்றி எப்போதும் நல்ல மனிதர்கள் இருப்பது போல் பார்த்துக் கொள்ள வேண்டும். சாதனை படைத்தவர்களாக இருப்பது போலவும் பார்த்துக் கொள்ள வேண்டும். கெட்டவர்களையும் சோம்பேறிகளையும் நம்மைச் சுற்றி வைத்துக்கொண்டால் அது தான் நம்மை பாதிக்கும்.

ஆகவே நம்மைச் சுற்றி நல்ல மனிதர்கள் பண்பாளர்கள் வெற்றியாளர்கள் சூழ்ந்து இருப்பது போல பார்த்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் இரும்புதான் இன்னொரு இரும்பை கூர்மையாக்கும். நாம் எந்தச் சூழ்நிலையில் இருக்கிறோமோ அதுவே நம்மை உருவாக்கும்.

''உருளுகிற கற்கள்தான் உருண்டையாகும்'' என்றொரு பழமொழி உண்டு.

எந்தத் துறையாக இருந்தாலும் மருத்துவமா, வக்கீல் தொழிலா, ஆசிரியர் பணியா எந்தத் துறையாக இருந்தாலும் சில பேர் சாதனை படைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதற்கு அவர்களின் முயற்சியும் உழைப்பும் தான் காரணம். இல்லையென்றால் என்ன ஆகும் தெரியுமா?

ஒரு மூத்த வக்கீலிடம் ஒரு ஜூனியர் ''ஐயா! நாம் எடுக்கப்போகிற இந்த வழக்கு வெற்றியடைந்தாலும் தோல்வியடைந்தாலும் நாம் விழா கொண்டாடியாக வேண்டும்'' என்று சொன்னார்.

''எதற்காக அப்படி?'' என்று கேட்டார் வக்கீல்.

''ஒன்றுமில்லை தோல்வி அடைந்தால் இது நூறாவது தோல்வி. வெற்றி அடைந்தால் இதுதான் நமது முதல் வெற்றி'' என்றார் ஜூனியர்.

இளசை சுந்தரம்

# ஆங்கிலம் பேசும் பாடசாலை நிகழ்ச்சித் திட்டம் அறிமுகம்

ஆங்கிலம் பேசும் பாடசாலை என்னும் நிகழ்ச்சித் திட்டத்திற்கூடாக மாணவர்களுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் உதவியுடன் ஆங்கிலம் கற்பிக்கும் முறை இலங்கையில் அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளது.

இதற்கான உத்தியோகபூர்வ நிகழ்வு எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

நடைமுறையிலிருக்கும் வாழ்க்கை திறனாக ஆங்கிலம் எனும் செயற்றிட்டத்தின் புதியதொரு அம்சமாகவே ஆங்கிலம் பேசும் பாடசாலை நிகழ்ச்சித் திட்டம் அறிமுகம் செய்து வைக்கப்படுகிறது.

முதற் கட்டமாக இந்நிகழ்ச்சித் திட்டம் மூன்று பாடசாலைகளில் ஆரம்பிக்கப்படும். இதன்மூலம் சுமார் 4 ஆயிரத்து 500 மாணவர்கள் நேரடியாக பயனடைவரெனவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் நாட்டின் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட அனைத்து மாகாணங்களுக்கும் பொருந்தக் கூடிய விதத்தில் தொழில்நுட்பத்திற்கூடான ஆங்கில பாடத்திட்டம் தனித்தனியாக வடிவமைக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் 2015 ஆம் ஆண்டு முதல் ஆங்கிலம் பேசுதல் மற்றும் செவிமடுத்தலுக்கான பிரத்தியேக புள்ளிகள் உள்வாங்கப்பட வேண்டுமென்பது தொடர்பிலான அறிக்கையினை கல்வி அமைச்சர் அமைச்சரவைக்கு முன்வைத்துள்ளார். இதற்கேற்ற வகையில் நாட்டின் அனைத்து பகுதிகளையும சேர்ந்த மாணவர்கள் தயக்கமின்றி தமது நாட்டிற்குரிய பாணியில் ஆங்கிலம் பேச வேண்டுமெனும் நோக்கிலேயே தகவல் தொழில் நுட்பத்தி னூடாக ஆங்கிலம் கற் பிக்கும் முறைமை இலங் கையில் அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றதெனவும் அவர் தெரிவித்தார்.

எமது மாணவர்கள் தமது தாய் மொழியில் சுயமாக சிந்திக்க வேண்டிய அதேநேரம் ஆங்கிலத்தில் தயக்கமின்றி பேசவும் பிழையற எழுதவும் வேண்டுமென்பதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரதான குறிக்கோளாகும். அதற்கு ஏற்ற வகையில் கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆயிரம் பாடசாலைகளிலும் மேற்படி ஆங்கிலம் கற்பிக்கும் முறை நடைமுறைக்கு கொணடு வரப்படும்.

இதற்கென விசேட மொழி மற்றும் கணனி ஆய்வுகூடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

# விமான சேவை ஆரம்பிப்பது தொடர்பில் உடன்படிக்கை

(கொழும்பு)

இலங்கையும் தென்னாபிரிக்காவும் இருதரப்பு விமான சேவைகளை ஆரம்பிப்பது தொடர்பில் உடன்படிக கையில் கைச்சாத்திட்டுள்ளன.

இலங்கையின் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் தலைமை யிலான அமைச்சர்கள் குழு அண் மையில் தென்னாபிரிக்காவுக்கு சென்றிருந்தபோதே அந்த உடன் படிக்கை கைச்சாத்தானது.

இலங்கையின் சார்பில் அமைச்சர் சில்வாவும் தென்னாபிரிக்காவின் சார்பில் அந்த நாட்டின் போக்குவரத்து அமைச்சர் டிப்பூ பீட்டர்ஸூம் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

தென்னாபிரிக்காவின் பிரச்சினைக்கு காணப்பட்டுள்ள உள்நாட்டு தீர்வை அறிந்து கொள்ளும் முக மாக அமைச்சர்கள் குழு கடந்த 20, 21 ஆம் திகதிகளில் தென்னாபிரிக்கா சென்று திரும்பியது. (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 80 |
| தக்காளி | 10 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 30 | 40 |
| கோவா | 20 | 40 | 50 |
| கரட் | 60 | 70 | 80 |
| பூசணி | 20 | 40 | 40 |
| புடோல் | 30 | 50 | 60 |
| வாழைக்காய் | 30 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 30-90 | 80 | 60 |
| பெரிய வெங்காயம் | 50-70 | 60 | 60 |
| பாகற்காய் | 50-90 | 100 | 140 |
| வெண்டிக்காய் | 50-80 | 70 | 100 |
| கருணைக் கிழங்கு | 20 | 50 | 50 |
| பயற்றங்காய் | 70 | 90 | 80 |
| லீக்ஸ் | 40 | 80 | 80 |
| பீற்றூட் | 35 | 40 | 50 |
| கறிமிளகாய் | 90 | 70 | 100 |
| முருங்கைக்காய் | 400 | — | — |
| போஞ்சி | 30 | 60 | 80 |
| கத்தரிதம்புள்ள | 20 | — | — |
| கீரை - 1 பிடி | 5-10 | 15 | 15 |
| தேசிக்காய் | 20-35 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 20-60 | 40 | 40-50 |
| இராசவள்ளி | 50-80 | 90 | 100 |

# இராசி பலன்

26.02.2014
(மாசி 14, புதன்கிழமை )
சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு
துவாதசி முன்னிரவு 9.24 மணிவரை
உத்தராடம் பின்னிரவு 12.54 மணிவரை
இராகுகாலம் 12.29-1.59 மணிவரை
சுபநேரம் 4.59-6.29 மணிவரை
அமிர்தசித்தம்

**மேடம்** நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், செவிகுளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், ஆரோக்கியம் சீராகும், கடின உழைப்பில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** பிரியமான சிலரோடு ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறலாம், அலைச்சல்கள் குறைந்து ஆதாயம் பெறுவீர்கள்.

**மிதுனம்** சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு, முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**கடகம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிங்கம்** இனிமையான நாள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும்.

**கன்னி** உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கலாம், வியாபாரத்தை விரிவுபடுத்த எடுத்த முயற்சி வெற்றி தரும், சொல்லை செயலாக்கி காட்ட முற்படுவீர்கள், சிறு சிறு வருமானங்கள் வந்து சேரலாம்.

**துலாம்** நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள்,வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பயந்த சுபாவமுண்டு, ரோக பயமுண்டு.

**விருச்சிகம்** உடன் பிறந்தவர் உதவிக் கரம் நீட்டுவர், அந்நியர் சந்திப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, முயற்சிகள் எளிதில் கைகூடும்,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், உயரதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்,- பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**மகரம்** பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் இடம்பெறலாம், தொழில் ரீதியான பயணங்கள் கைகூடும், சிந்தனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்** உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், தொழிலில் சில மாற்றங்கள் செய்வது பற்றி சிந்திப்பீர்கள், அலைச்சல்களால் மனச் சோர்வு ஏற்படலாம்.

**மீனம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், நண்பர்கள் சந்திப்புண்டு, முயற்சிகள் எளிதில் கைகூடும், உறவினர்கள் வருகையுண்டு, உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையை விட்டு இடைவிலகிய பத்து மாணவர்கள் மீள இணைப்பு

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட் பட்ட பிரான்பற்றுப் பகுதியில் பாடசாலைக்கு ஒழுங்கீனமான வரவு இடைவிலகல், துர் நடத்தை போன்றனவற்றுடன் தொடர்புபட்ட 13 மாணவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மற்றும் உதவிப் பிரதேச செயலரின் ஆலோசனைக் கேற்ப பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம் பாட்டு உத்தியோகத்தர் தலைமையில் சென்ற குழுவினரே மேற்படி மாணவர்களை இனங் கண்டுள்ளனர்.

பிரான்பற்றுப் பகுதியில் பாடசாலைக்கு ஒழுங்கின்மை, துர்நடத்தைகளில் ஈடுபடல், கற்றலில் கவனயீனமான மாணவர்கள் சம் பந்தமாக கிடைத்த தகவல்களைத் தொடர்ந்தே மேற்படி குழுவினரால் இந்நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

இந்நிலையில், குறித்த மாணவர்கள் பாட சாலை செல்லாத நிலையில் வீடுகளிலும் வீதிகளிலும் வைத்து இனங்காணப்பட்டுள்ள துடன் உடனடியாக 10 பேர் பாடசாலைகளில் இணைக்கப்பட்டனர்.

இவர்களில் 15 வயதிற்கு குறைந்த சிறு வன் ஒருவன் துர்நடத்தையில் ஈடுபட்டு வந்த மையால் அவருக்கான ஆற்றுப்படுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் வீட்டு வறுமை காரணமாக இவ் வருட ஆரம்பத்திலிருந்தே பாடசாலைக்கு செல்ல வில்லை. குறித்த 3 மாணவர்களினால் சீருடை இன்மை, கற்றல் உபகரணங்களின்மை ஆகிய காரணங்கள் முன்வைக்கப்பட்டன.

இத்தேடுதல் நடவடிக்கையில் பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தி யோகத்தர் என்.பத்மராஜ், வலிகாமம் வலய கல்வித்திணைக்கள செயற்றிட்ட அலுவலர் அ.சிவகுமாரன், இளவாலைப் பொலிஸ் நிலை யத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர், கிராம சேவகர் உட்பட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (அ-9-23)




நன்றி:-மிரர்

# அடிதடி சம்பவங்களுடன் தொடர்பு; சந்தேகநபர் பொலிஸாரால் கைது

அடிதடி சம்பவங்களுடன் தொடர்புடை யவர் என்ற சந்தேகத்தின்பேரில் இளை ஞனொருவரை மானிப்பாய் பொலிஸார் நேற்றுக் காலை அவரது வீட்டி ற்கு முன்பாக வைத்து கைது செய்துள்ளனர்.

இச்சந்தேக நபர் நேற்று முன்தினம் திங் கட்கிழமை இரவு இடம்பெற்ற தாக்குதல் மற்றும் வாள்வெட்டுச் சம்பவங்களுடன தொடர்புடைய தனாலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

சம்பவதினம் குறித்த இளைஞனும் அவரது குழுவினரும் ஆனைக்கோட்டை பிரதேசத்தைச சேர்ந்த இளைஞன் ஒருவரைத் தாக்கியுள் ளனர். இதனால் தாக்குதலுக்கிலக்கான இளை ஞனின் கை முறிந்துள்ளதுடன் தலையும் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத் தியசாலையில் அனுமதிககப்பட்டுள்ளார்.

அன்றையதினம் இவ் இளைஞர் கும்பல் பெற்றோல் செற் பகுதியைச் சேர்ந்த வேறு சில இளைஞர்களுடனும முரண்பட்டு அவர்களை யும் தாக்க முற்பட்டுள்ளனர்.

இம் முரண்பாடு முற்றவே இரவு மோதல் ஆரம்பித்துள்ளது.

இம்மோதலில் மற்றைய குழுவினரைத் தாக்குவதற்காக பொல்லுகள் வாள்களுடன் இவ் இளைஞர்கள் இரவு வேளையிலும் சாதார ணமாக நடமாடித் திரிந்துள்ளனர். இதன் காரணமாகவே இவ் இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் முன்பு பல குற்றச் சாட்டுகளில் கைது செய்யப்பட்டு இறுதியாக கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கடுமை யாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்ததாக தெரிய வருகின்றது. (அ-9-23)

# தென்மராட்சி இலக்கிய அணியின் ஏற்பாட்டில் வள்ளுவர் விழா

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி இலக்கிய அணி முன்னெ டுக்கும் வள்ளுவர் விழா எதிர்வரும் மார்ச் மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் யா/ சாவகச்சேரி இந்துக் கல் லூரி அதிபா அ.கைலாயபிள்ளை தலைமை யில் நடைபெறும்.

இதன்போது வள்ளுவரின் வழி நடப் போம் எனும் நூல் வெளியீடு இடம்பெறும்.

நூலின் வெளியீட்டுரையை க.வேலாயுத பிள்ளை ஆற்றுவார்.

அதனைத் தொடர்ந்து வள்ளுவர் வகுத்த இல்லறவியலில் தமிழர் தம் தனித்துவப் பண் பாய் மேல் நிற்பது எனும் தொனிப்பொ ருளில் சுழலும் சொற்போர் ஸ்ரீ.பிரசாந்தன் தலைமையில் இடம்பெறும்.

மாலை அமர்வு பிற்பகல் 2.30 மணிக்கு யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி லலிதா முகுந்தன் தலைமையில் நடைபெ றும்.

இந்நிகழ்வின் தொடக்கவுரையை தென் மராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் நிகழ்த்துவார். அதன் பின் ஆன்றோர் கௌரவம் இடம் பெறும்.

தொடர்ந்து வள்ளுவர் வகுத்த வாழ்க்கைத் துணை நலத்தின் வழிநின்று பெரும் புகழ் கொண்டவன் எனும் தொனிப் பொருளிலான பட்டிமன்றம் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலை மையில் இடம்பெறும். (அ-2)

# கலாசார அலுவல்கள் திணைக்கள தேசிய கலை இலக்கிய போட்டிகள்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தேசிய கலை இலக்கியப் போட் டிகள் பிரதேச, மாவட்ட, தேசிய மட்டங்களில் நடைபெறவுள்ளதாக யாழ்.பிரதேச செய லாளர் திருமதி.எஸ்.தெய்வேந்திரம் அறிவித் துள்ளார்.

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளாக கட்டு ரைப்போட்டி (கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவு), கவி தைப்போட்டி (கனிஷ்ட,சிரேஷ்ட), கவிதை பாடல் போட்டி (கனிஷ்ட, சிரேஷ்ட ,பாலர் பிரிவு), கையெழுத்துப்போட்டி (பாலர் பிரிவு), பாடல் நயத்தல் போட்டி (சிரேஷ்ட பிரிவு) என்பன நடைபெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள் ளார்.

இந்தப்போட்டிகள் யாவும் பாடசாலை மாண வர்களுக்கு மட்டுமே உரித்தானதாகும். பாலர் பிரிவு 6 தொடக்கம் 10 வயது வரையுள்ள மாணவர்களுக்கும் கனிஷ்ட பிரிவு 11 தொட க்கம் 15 வயது வரையுள்ள மாணவர்களு க்கும் சிரேஷ்ட பிரிவு 16 தொடக்கம் 19 வயது வரையுள்ள மாணவர்களுக்கும் 19 வயதின் மேல் திறந்த பிரிவிலும் பங்குபற்றலாம்.

கவிதை பாடல் போட்டி மற்றும் கையெழு த்துப் போட்டி என்பன பிரதேச செயலர் பிரி வில் தெரிவு செய்யப்பட்ட நிலையத்தில் நடத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பப் படிவத்தை யாழ்ப் பாண பிரதேச செயலகத்தில் பெற்று எதிர் வரும் மார்ச் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

இந்தப் போட்டிகளில் 10 வயதுக்கு மேற் பட்ட அனைத்து தனிநபர்களும் சுயமாக அல்லது பொது நிறுவனங்களான சன சமூக நிலையங்கள், கலாமன்றங்கள், கிராம அபிவி ருத்திச் சங்கங்கள் மூலமாகப் பங்கு கொள் ளலாம். போட்டிகள் திறந்த போட்டிகளாக நடைபெறும். பாடல் ஆக்கப் போட்டி, நாட்டார் கலை, கற்றல் போட்டி இலக்கிய விவரணப் போட்டி, சிறுகதைப் போட்டி, கவிதைப் போட்டி, சிறுவர் கதை ஆக்கப் போட்டி என்பன நடை பெறும்.

போட்டிகளில் பிரதேச மட்டத்தில் வெற்றி பெறும் மூன்று பேருக்குப் புத்தகப் பொதி களும் சான்றிதழ்களும் வழங்கப்படும். பிர தேச மட்டத்தில் தெரிவு செய்யப்படும் ஆக் கங்கள் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப் பட்டு தேசிய மட்டத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

இந்தப் போட்டிகளுக்கான பொது நிபந் தனை பற்றிய விபரங்களை அறிய விரும் புவர்கள் யாழ்ப்பாண பிரதேச செயலக கலா சார பிரிவுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும். அல்லது தொலைபேசி இலக் கம் 021 222 2209 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி அறிய முடியுமென அவர் அறிவித்துள்ளார். (அ-2)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்திற்கு உயர்தேசிய பொறியியல் டிப்ளோமா கற்கை நெறியினைப் போதிப் பதற்கு குடியியல் மற்றும் இலத்திரனியல் வருகைதரு விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரிகள் சுயமாக தயாரிக் கப்பட்ட சுயவிபரக் கோவையினை எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் பணிப் பாளர், உயர்தொழில்நுட்பவியல் நிறுவனம், இல. 665/2, கடற்கரை வீதி, குருநகர், யாழ் ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மேலதிக விபரங்களை www.atijaf.com எனும் இணையத்தள முகவரியை பார்வை யிடுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)

# சிவராத்திரியை முன்னிட்டு இ.போ.ச. பேருந்து சேவை

(பருத்தித்துறை)

மகா சிவராத்திரியை முன்னிட்டு பருத்தித் துறை இ.போ.ச சாலையிலிருந்து திருக்கேதீ ஸ்வரத்திற்கு பேருந்து சேவை நாளை வியாழ க்கிழமை இடம்பெறவுள்ளது.

இதன்படி வியாழக்கிழமை காலை 6 மணி க்கு முதலாவது பேருந்து சேவை ஆரம்பிக் கவுள்ளது.

பின்னர் பக்தர்களின் எண்ணிக்கை அடிப்ப டையில் பிற்பகல் 2 மணிவரை பேருந்து சேவைகள் இடம்பெறுமென சாலை முகாமை யாளர் கந்தசாமி தெரிவித்துள்ளார். (அ-9-10)



நெல்லியடி பொலிஸ் நிலையத்தினரின் வருடாந்த அணிவகுப்பு மரியாதை நிகழ்வு அண்மையில் நிலையப் பொறுப்பதிகாரி கங்காரா தலைமையில் இடம்பெற்றபோது....
(... கரணவாய் செய்தியாளர்)




# நலன்புரிச்சங்க பொதுக்கூட்டம்

(தும்பளை)

பருத்தித்துறை ஆரம்ப மருத்துவ பரா மரிப்பு பிரிவு நோயாளர் நலன்புரிச் சங்கத் தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வைத்திய அதிகாரி திருமதி ஜெய சாந்தி திருலிங்கநாதன் தலைமையில் நடை பெறவுள்ளது.

தும்பளை வீதி பருத்தித்துறையில் அமைந் துள்ள ஆரம்ப மருத்துவ பராமரிப்பு வைத்திய சாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ள இக் கூட்டத்தில் இவ்வாண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவு நடைபெறவுள்ளமையால் அங்கத்த வர்கள், நலன்விரும்பிகள், சமூக ஆர்வலர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (அ-9-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். இந்து சமய பேரவையால் சித்திரா பௌர்ணமி தினம் நிர்ணயிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இந்து சமயப் பேரவையின் யாழ்ப்பாண சைவ உயர்பீடத்தினால் சித்திரா பௌர்ணமி தினம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக இப்பேரவையின் யாழ்ப்பாணச் செயலாளர் அறிவித்துள்ளார். இதன்படி சித்திரா பௌர்ணமி சம்பந் தமாக வாக்கிய பஞ்சாங்கம் சித்திரை முத லாம் திகதியை சித்திரா பௌர்ணமி என அறிவித்துள்ளது. இரண்டாம் நாளை சித்திரைச் சித்திரையாக அறிவித்துள்ளது.

31 ஆம் நாளை பௌர்ணமி சிராத்த தினமாக அறிவித்துள்ளது. திருக்கணித பஞ்சாங்கம் சித்திரை முதலாம் திகதியை சித்திரா பௌர்ணமி என அறிவிக்கவில்லை.

சித்திரை 2 ஆம் நாளை சித்திரைச் சித்திரையாகவும் 31 ஆம் நாளை சித்திரா பௌர்ணமியாகவும் சிராத்த தினமாகவும் அறிவித்துள்ளனர். இவை இவ்வாறு இருக்க வாக்கிய பஞ்சாங்கத்தினர் அனுப்பியுள்ள நான்காவது அதிகத் திதிக்கு அமைவாகவும் திருக்கணித பஞ்சாங்கத்தினர் அனுப்பியுள்ள பின்வரும் காமிக ஆகமத்திற்கு அமைவாகவும் ஒரு மாதத்தில் இரண்டு நட்சத்திரம் அல்லது திதிவரின் பிந்தியது கொள்ள வேண்டும். பிந்தியதில் சங்கிரமண தோஷம் வந்தால் முந்திய தினத்தைக் கொள்ள வேண்டும். உற்சவ முடிவில் வரும் தீர்த்தத்திலும் சங்கிரமண தோஷம் வரு மாகில் ஒருபோதும் செய்யக் கூடாது. சங் கிரமண தோஷத்தில் சகல கருமங்களும் விலக்கப்பட வேண்டும். மேலும் ஒரு திதி காலையில் இருந்து நடுநிசி வரை சங்கிர மணம் (மாதப்பிறப்பு) வந்தால் அன்றைய திதி தோஷமடையும். ஆலயங்களின் உற்சவம் இரண்டு வருடத்திற்கு பங்கு பெறக் கூடாது. யாக கருமங்கள் இரண்டாவது வருடத்திற்குச் செல்லக் கூடாது என்பது தெளிவு.

இவற்றிற்கு அமைவாக சித்திரைச் சித்திரையை 2 ஆம் நாள் கொண்டாடுவதற்கும் (சித்திர புத்திரர் படிப்பு) சித்திரா பௌர்ணமியை அந்தமாக நடைபெறும் உற்சவங்களை சித்திரை மாதத்தில் 31 ஆம் திகதி பௌர்ணமி தினத்தில் நிகழ்த்த வேண்டும் என்றும் அதே பூரணையைத் சிராத்த தினமாகக் கொள்ள வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் சைவ உயர் பீடம் வாக்கிய, திருக் கணித பஞ்சாங்கத் தினருக்கான கருத்தறிதல் சம்பந்தமான கூட்டம் கடந்த 23 ஆம் திகதி இந்து சமயப் பேரவை தலை மைச் செயலகத்தில் சைவ உயர்பீடத்தின் தலைவர்களில் ஒரு வரான பிரதிஷ்டா பூஷ ணம் சிவஸ்ரீ சச்சிதா னந்தக் குருக்கள், சோமாஸ்கந்தக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது சைவ உயர் பீடத்தின் தலைவர்களுள் ஒருவரான சிவ ஸ்ரீ சச்சிதானந்தக் குருக்கள், சோமாஸ்கந்தக் குருக்கள் தலைமை யுரை நிகழ்த்துகையில்,

இன்று எம்முன் வேறுபட்ட பிரச்சினைகள் எழத் தொடங்கியுள்ளன. ஆலய கிரியைகளில் முரண்பாடுகள், பஞ்சாங்கங்களில் மாறுபட்ட நிர்ணயங்கள் காணப்படுகின்றன.

இவற்றைத் தீர்ப்பதற்கு சிதம்பர மஹா சேத்திரத்தின் பிரதம சிவாச்சாரியாரான சிவாகம வித்தியா பூஷணம் சிவஸ்ரீ கணேச பரமேஸ்வர தீக்ஷிதரை பெரும் தலைவராகக் கொண்டு சைவஉயர்பீடம்ஒன்றை நிறுவியுள்ளமை வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியாக அமைந்துள்ளது. அண்மையில் வரவுள்ள சித்திரா பௌர்ணமி நிர்ணயம் தொடர்பாக தீர்த்துவைக்குமாறு சிவஸ்ரீ கணேச பரமேஸ்வர தீக்ஷிதர் ஆசி வழங்கி செயற்படுமாறு பணித்துள்ளார். இந்தப் பணியைத் தொடர்வதற்கு எமக்குப் பரிபூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும். தொடர்ந்து பேரவைத் தலைவர் பேராசிரியர் நா. ஞான குமாரன் தொடக்கவுரையில், பஞ்சாங்கங் களின் கணிப் புக்களில் சித்திரா பௌர்ணமி தினம் தொடர் பாக வெவ்வேறு தினங்களை அறிவித்துள் ளமையை வைத் துக் கொண்டு பஞ்சாங்கங்களை கொச்சைப் படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளும் படி கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாங்கங்கள் தங்கள் தங்கள் பாரம்பரிய கணிப்பிற்கு அமைவாக இந் நிர்ணயங்களைச் செய் கின்றன. அவற்றில் இவ்விதம் தெளிவீனம் ஏற்படுகின்றபோது ஆகமங்கள் என்ன கூறுகின்றன என்பதைப் பார்த்து முடிவுகளை வெளியிடுவதே சைவ உயர் பீடத்தின் பணியாக இருக்கின்றது என்றார்.

திருக்கணித பஞ் சாங்க ஆசிரியர் சிவா கம கலாபூஷணம் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குரு க்கள் உரை நிகழ்த்துகையில், எமது பஞ்சாங்கம் ஒருவகையான கணிப்பைவைத் திருக்கின்றது. அதே போல் வாக்கிய பஞ் சாங்கம் இன்னோர் வகையான கணிப்பை வைத்திருக் கின்றது. இப்படி இருக்கும் போது இரு பஞ்சாங்கமும் ஒரே மாதிரி அமையுமென எதிர்பார்ப்பது முடியாத காரியமாகும். அப்படியிருக்க ஒரு பஞ்சாங் கம் மட்டும் வெளிவர வேண்டும் என்று கேட் பது தர்மத் திற்கு விரோதமானது ஆகும்.

நாங்கள் பஞ்சாங்கத்தைக் கணித்துவிட்டோம். இதில் சரி , பிழை கூறும் உரிமை சிவாகமங்களுக்கு மட்டுமே உண்டு என்றார். எமது கணிப்புச் சம்பந்தமாக ஆகமங்கள் கூறுவதை இப்பெருஞ்சபையில் இப்பீடத்திடம் ஒப்படைப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன் என்றார்.

தொடர்ந்து வாக்கிய பஞ்சாங்க ஆசிரியர் பிரம்ம ஸ்ரீ வெங்கடேஸ்வர ஐயர் இரகுநாததையரால் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்ட கருத்துக்கள் சபையில் ச.பாலசண்முகனால் வாசிக்கப்பட்டது. (அ-2)




## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்**
**புதிய அறங்காவலர் சபைத் தெரிவு**
**27.02.2014**

**மேற்படி விடயம் தொடர்பாக 17.02.2014 திகதிய நாளிதழில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்கு மேலாக பின்வருவனவற்றை அறியத் தருகின்றேன்.**

**வாக்கெடுப்பு: 27.02.2014 மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணிவரை நடைபெறும்.**

**வாக்காளர்கள் தமது தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.**

(சி-6584)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு- 24.02.2014

ந.மோகனரூபன்
செயலாளர்
அறங்காவலர் சபை.



## அறிவித்தல்

**மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)**
**வட்டாரம்:-14 .ஆதன இலக்கம்:-151 (புதிய பதிவு) , கல்வளை றோட்**

வட்டாரம் 14 கல்வளை றோட் ஆதன இலக்கம் 151 (புதிய பதிவு) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவில்பற்று சண்டிலிப்பாய் இறை "காஞ்சூரந் தோட்டம்") என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு இரண்டு (நி.பர.02) கொண்ட இவ் ஆதனமானது சண்டிலிப்பாய் ஆலங்குழாயைச் சேர்ந்த கஜேந்திரன் கைம்பெண் பத்மலோஜினி, கஜேந்திரன் மகள் துக்சியா, கஜேந்திரன் துசிந்தன், கஜேந்திரன் மகள் துர்மிதா ஆகிய இவர்களால் அறுதி உறுதி மூலம் சண்டிலிப்பாய் வடக்கில் வசிக்கும் இரத்தினம் சுசிதன் பெண் கனகேஸ்வரி என்பவருக்கு குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் பொன்னம்பலம் சுந்தரலிங்கம் முகதாவில் நிறைவேறிய 2994 ஆம் இலக்க 2010.10.03 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆத னமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். இவ் "காஞ்சூரந் தோட்டம்" நிலப்பரப்பு இரண்டு (நி.பர.02) இவ்வாதனத்திற்கு உரிமை கோருப வர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு யாராவது எவ்வித உரிமையும் 14 நாட்களுக்குள் கோரப்படாத விடத்து இவ்வாதனம் சுசிதன் பெண் கனகேஸ்வரி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

(சி-5689) **தவிசாளர் , வலி, தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**



## முடிவுத்திகதி மாற்றம்

புதுக்குடியிருப்புபிரதேசசபையின்
அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை
நிரப்புதல்-2013

25.02.2014 ஆம் திகதி பத்திரிகையில் பிரசுரமாகிய மேற்படி காவலாளி பதவி வெற்றிடம் நிரப்புவதற்கான விளம்பரத்தில் முடிவுத்திகதி 10.03.2014 என மாற்றம் செய்ய ப்பட்டுள்ளது.

கு.மிதிலைநாதன்,
செயலாளர், (சி-6591) பிரதேச சபை புதுக்குடியிருப்பு



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 1<br>கி.பா: 58 செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L / DC வயறிங்<br>தொ.இ: B/2851 | பிறப்பு: 1966 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 15 சூரி செவ் 11 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L, Dip. in Agriculture / Ass. Pharmacist<br>எதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்றவரும் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ: G/2876 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>கி.பா: 53 சூரி செவ் 7 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: O/L / பெயின்ரிங் மற்றும் சிறு தொழில்கள்<br>தொ.இ: B/2853 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 2<br>கி.பா: 43.5 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: HNDIT, BIT (Following)<br>தொ.இ: G/2878 |
| பிறப்பு: 1983 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா: 23.25 உயரம்: 178 cm<br>தகைமை/தொழில்: A/L / தனியார் கம்பனி வேலை (ஜேர்மன் PR)<br>தொ.இ: B/2855 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>கி.பா: 32<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/2881 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா: 24 சூரி செவ் 4 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: MSc, PHD (Following) கனடா<br>தொ.இ: B/2856 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1<br>கி.பா: 92 செவ் 7 ல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/2882 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைப்பிரியாவின் படப்பிடிப்பில் இயக்குநருக்கு பலத்த காயம்

இசைப்பிரியாவின் வாழ்க்கை வரலாறு தொடர்பான படப்பிடிப்பின் போது இயக்குநர் கணேசன் படுகாயமடைந்தார்.

எனினும் அந்த படப்பிடிப்பை முடித்துக்கொண்ட பின்னரே அவர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளின் தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர் இசைப்பிரியா இறுதிப்போரின்போது கொடுமையுடன் கொல்லப்பட்ட சம்பவத்தை மையப்படுத்தி அவரின் வாழ்க்கை வரலாறு தமிழகத்தில் திரைப்படமாக்கப்பட்டு வருகிறது.

இளையராஜா இந்த திரைப்படத்துக்கு இசையமைக்கிறார்.

இந்நிலையில் படப்பிடிப்பு வேதாரணியத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது முள்ளிவாய்க்காலில் இலங்கைப்படையினர் குண்டு வீசி மக்களை கொலைசெய்யும் வகையிலான காட்சிகள் படமாக்கப்பட்டு கொண்டிருந்தன. இதில் பெருமளவான மக்களை வைத்து படப்பிடிப்பு இடம்பெற்றது

இதன்போதே இயக்குநர் கணேசனுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. எனினும் இரத்தம் தோய்ந்த நிலையிலும் அவர் படப்பிடிப்பை தொடர்ந்தார். இதனையடுத்தே அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக தமிழக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# ஐரோ.ஒன்றியம் புலிகளை தடைசெய்தது பெரும் தவறு

## கண்காணிப்பு தலைவர் ஹென்றிக்சன்

விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்தது மிகப்பெரிய தவறு என்று இலங்கையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவராகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் தெரிவித்துள்ளார்.

2006ஆம் ஆண்டு காலப் பகுதியில், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவராகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன், கடந்த சனிக்கிழமை, சுவீடனில் வைத்து, தமிழ்நெற் இணையத் தளத்துக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்வதற்கு அமெரிக்கா மற்றும் இலங்கையின் அழுத்தங்கள் இருந்தன.

அது ஒரு மிகப் பெரிய தவறு என்கிறேன். ஏனென்றால், அமைதித் தீர்வு மற்றும் பேச்சுக்களுக்கான வாய்ப்புகளை அது தடுத்து நிறுத்தி விட்டது.

தீர்வு காணும் விடயத்தில், பொஸ்னியாவுடன் ஒப்பிடும் போது, மேற்குலகம் குறைந்தளவு அக்கறையையே காட்டுகிறது.

இந்தியாவினது அக்கறை முக்கியமானது. ஆனால், இந்தியாவும் இதில் ஈடுபட ஆர்வம் காட்டவில்லை.

இலங்கை அரசாங்கத்துக்கு ஒரு தீர்வு தேவைப்படவில்லை.

இலங்கையில் நான் விரும்புபவர்களில் ஒருவர், கோத்தபாய ராஜபக்ச. அவர் நாட்டின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருக்கும் வரை, உங்களுக்கு ஒரு தீர்வும் கிடைக்காது.

அந்த மனிதருக்கு எந்தவொரு அமைதி தீர்வும் தேவையில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# பரதத்தில் இலங்கையின் முதலாவது கலாநிதி திருமதி கிருஷாந்தி இரவீந்திரா



கலாநிதி திருமதி கிருஷாந்தி இரவீந்திரா

தமிழர்களுடைய பிரதான கலைகளிலே தனிச்சிறப்பு வாய்ந்து விளங்குவது பரத நாட்டியமாகும். இக் கலை சைவசமயத்துடன் ஒன்றிணைந்து வளர்ந்துவந்துள்ளது. சைவசமய முழுமுதற் கடவுளாகிய நடராஜப்பெருமானே இதனைத் தோற்றுவித்தாரெனமரபுவழியாக அறியப்படுகின்றது.

1973-2006 ஆம் ஆண்டுவரை இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் பரதநாட்டியம் கற்பித்தவர்களில் ஒருவரான திருமதி கிருஷாந்தி இரவீந்திரா நன்கு குறிப்பிடற்பாலர். இவர் கலைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரின் தந்தையார் ஆர். சேனாதிராஜா நடனத்திலும் குறிப்பாக நாடகத்திலும் நன்கு தேர்ச்சி பெற்றவர். தந்தையாரின் வழிகாட்டலில் மகளும் மிக இளம் பராயத்திலேயே நடனத்தில் ஈடுபாடு கொண்டு தொடக்கத்தில் தந்தையாரிடமும் பின்னர் சமகாலப் பரத நடன வித்தகர்களான பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயா, திருமதி லீலா செல்வராஜா, குறிப்பாக ஏரம்பு சுப்பையா முதலியோரிடமும் பரதத்தை நன்கு கற்று 1970 இல் பிரபல நடன ஆசான் கொக்குவில் கலாபவனம் ஏரம்பு சுப்பையாவின்வழிகாட்டலில் இவரின் அரங்கேற்றம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அவ்வேளையில் இவர் ஆடல் புரிந்த சிறப்பை மெச்சி நாட்டியக் கலாஜோதி என்ற பட்டம் கலை அரசு சொர்ணலிங்கத்தால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். அவர் மாணவராக இலங்கையின் பல்வேறிடங்களிலும் நடைபெற்ற நடன நாட்டிய நாடக நிகழ்ச்சிகளில் பங்குபற்றி விருதுகளும் பட்டங்களும் பாராட்டுக்களும் பெற்றார். நாட்டியக் கலாராணி, நாட்டியப் பேரொளி, பரதக் கலாபமணி என்ற பல்வேறு பட்டங்கள் இவரின் நாட்டியச் சிறப்புக்கான சான்றுகளாகும்.

பரதக் கலையை மேலும் நன்கு கற்கும் நோக்குடன் தமிழகத்துக்குச் சென்று பரத சூடாமணி அடையாறு கி.லஷ்மணனிடம் சில ஆண்டுகள் கற்றுப் பட்டமும் பெற்றார்.

மேலும் பிரபல பரதக் கலைஞர்களான பரதக்கலாஞ்சலி ஸ்ரீ.வி.பி. தனஞ்சயன்-சாந்தா தம்பதிகளிடம் மோகினி ஆட்டம், நாட்டுப்புற நடனங்கள் என்பவற்றையும் கற்று அங்கும் சில நடன ஆற்றுகைகளிலே பங்குபற்றி தாய் நாட்டுக்குத் திரும்பினார்.

1973 ஆம் ஆண்டு தொடக்கத்தில் நாட்டியக் கலைமணி பட்டப்படிப்புக்கும் பின்னர் நாட்டியக் கலைமாணிப் பட்டத்துக்கான வகுப்புக்களையும் குறிப்பாகப் பயிற்சிகளையும் சிறப்பாக நடத்திப் பல நூற்றுக்கணக்கான நடனமணிகளை உருவாக்கிய பெருமை இவருக்கு உரியதாகும். பல்கலைக்கழக விதிகளுக்கேற்ப இவர் பரதநாட்டியத்திலே முதுதத்துவமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளார். இலங்கையில் பரத நாட்டிய முதுதத்துவமாணிப் பட்த் தைப் பெற்ற முதலாவது இலங்கைத் தமிழ் கலைஞர் இவரே. மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே முதன்முதலாக இப் பட்டத்தைப் பெற்றவரும் இவரே.

பின்னர் தமது பரத நாட்டிய ஆய்வுகளை மேற்கொள்ளும் நோக்குடன் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்திலே இசை நடன வித்தகரான முனைவர் மாதவி நடராஜா அவர்களின் திறமையான வழிகாட்டலிலே பரத நாட்டியத்தில் **இறையியல் ஓர் ஆய்வு** எனும் தலைப்பில் பரதநாட்டியத்தில் இறையியல் பற்றி நன்கு ஆய்வு செய்து 28. 01.2014 இல் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளார். பரதநாட்டியத்திலே கலாநிதிப் பட்டம் பெற்ற முதலாவது இலங்கைத் தமிழ் கலைஞர் என்றவகையிலும் இவர் நன்கு பாராட்டுக்குரியவர்.

இவ்வாறு பரதநாட்டியத்துக்கும் இலங்கைத் திருநாட்டுக்கும் குறிப்பாக தமிழ் மண்ணுக்கும் முன்மாதிரியானகலைப்பணியைசெய்துள்ளார். இவரது சிறந்த கலைப்பணிகளுக்கு உறுதுணையாக இருந்து வரும் இவரது கணவரான சரவணபவன் இரவீந்திராவும் மகள் திருமதி துஸ்யந்தி சுகுணனும் குடும்பத்தவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

**பா.தனபாலன்,**
**இணைப்பாளர்,**
**யாழ். தே. க. கல்லூரி.**

# அரசியல் கைதியின் மர்ம மரணம் குறித்து சுயாதீன விசாரணை தேவை

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வலியுறுத்து

மகசின் சிறைச்சாலையில் மர்மமான முறையில் மரணமடைந்து சடலமாக மீட்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதி தொடரபிலான சுயாதீன விசாரணைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ப. அரியநேத்திரன வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

யாழ்ப்பாணம் மந்திகையைப் பிறப்பிடமாகக் கொண்ட விஸ்வலிங்கம் என்ற நபர் பிரித்தானிய குடியுரிமையை பெற்றவராவார். பிரித்தானியாவில் புலிகளுக்கு உதவும் செயற்பாடுகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் 2007ஆம் ஆண்டு மார்ச் மாதம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டு சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இவருடைய மனைவியும் இரு புதல்விகளும் பிரித்தானியாவில் வசித்து வருகின்றனர்.

அவ்வாறான நிலையில் நேற்று முன்தினம் காலை மகசின் சிறைச்சாலையின் C பிரிவிலுள்ள மலசல கூடத்தினுள் மர்மமான முறையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நீண்ட காலமாக விசாரணையின்றி சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர் இவ்வாறு மரணமடைந்தமை வேதனைக்குரியதாகும். அத்துடன் இவரின் மர்மம் தொடர்பாக பலத்த சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன.

குறிப்பாக இவருடைய உறவினர்கள் என்னுடன் தொலைபேசி வாயிலாக உரையாடிய போது பிரித்தானிய குடியுரிமை பெற்றவர் என்பதால் அவருக்கு ஆரம்பத்திலேயிருந்து அச்சுறுத்தல்கள் காணப்பட்டதாகவும் அதன் விளைவாகவே இவ்வாறான நிலைமை ஏற்பட்டிருக்கலாமெனவும் சந்தேகிக்கின்றனர்.

எவ்வாறாயினும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கைதி திடீரென மர்மமான முறையல்மரணமடைந்துள்ளமை எமக்கும் பாரிய ஐயப்பாடுகளை தோற்றுவித்துள்ளது. எத்தனையோ தமிழ் அரசியல் கைதிகள் விசாரணைகள இன்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும நிலையில்மரணமேற்படுவது பாரிய அச்சத்தினையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே குறித்த மரணம் தொடரபில் சிறைச்சாலை நிர்வாகம் அரச தரப்பினர் சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு மர்மமான முறையில் மரணமடைந்த தமிழ் அரசியல் கைதி பிறிதொரு நாட்டின் பிரஜை என்பதையும் இங்கு சுட்டிக்காட்டுவதோடு அக்கைதியின் மரணம் தொடர்பில் விசாரணை அறிக்கையும் பகிரங்கபடுத்த வேண்டும் என கேட்டுக் கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஐ.நாவை நோக்கிய பயணம் 27 நாட்களாக தொடர்கிறது

ஐ.நா. நோக்கிய நீதிக்கான நடைபயணமானது வெற்றிகரமாக தொடர்கின்றது.

நோர்வே நாட்டினுடைய பாராளுமன்றத்தில் இருந்து நேற்று முன்தினம் தமிழ் சிற்றூர்ந்து பரப்புரை போராட்டம் ஆரம்பமாகியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக்கோரி Luxembourgகில் அமைந்துள்ள ஐரோப்பாவினுடைய உச்ச நீதிமன்றத்திலதொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு இனறு எடுக்கப்படவுள்ளது.

நடையபணத்தை முன்னெடுக்கும் மனிதநேயப் பணியாளர்கள் தமது ஐந்தம்சக் கோரிக்கையில், மூன்று தசாப்தகாலமாக எமது மக்களையும் எமது மரபுவழித் தாயகத்தையும் பாதுகாத்து, அனைத்துலகச் சட்டங்களை மதித்து, நடைமுறை அரசை நிறுவிய எமது விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் மட்டுமே தொடர்ந்தும எமது மக்களையும் எமது நிலத்தையும் பாதுகாக்க முடியும்.

ஆகவே இவ்வமைப்பை எமது விடுதலை இயக்கமாக அனைத்துலக சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டும். என்று ஐந்தாவது கோரிக்கையாக முன்வைத்துள்ளார்கள். ஆகையால் நடை பயணத்தை முன்னெடுக்கின்ற மனிதநேயப் பணியாளர்களும் ஐரோப்பாவினுடைய உச்ச நீதிமன்றத்திற்கு சமுகமளிக்கவுள்ளனர்.

தமிழின அழிப்பை பல்லின மக்களுக்கு எடுத்துரைக்கும் முகமாக பல்வேறு மொழிகளில் துண்டுப் பிரசுராங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (அ-2)

# தொழில்நுட்ப மாற்றீட்டு இலவச பயிற்சி நெறிகள்

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சினால் தொழில்நுட்ப மாற்றீட்டுப் பயிற்சி நெறிகள் நல்லூர் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் இலவசமாக நடைபெற வுள்ளதாக நல்லூர் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.


இதற்கமைய Hand wash, Dish Liquid soap, Car wash தயாரித்தல், அலங்கார மெழுகுதிரி தயாரித்தல், ஊதுவர்த்தி தயாரித்தல், யோக்கட் தயாரித்தல், கணனி வலையமைப்பு (LAN, WAN), Computer Graphic Designing, (Photo shop), வாழ்த்து அட்டைகள் வடிவமைத்தல், பேக்கரி தயாரிப்புகள், ஜாம், கோடியல் தயாரிப்புகள், Web Designing programme, ஊறுகாய் உற்பத்தி செய்தல், அரிசிமாவினாலான தயாரிப்புக்கள், Printer Technology & Toner Refill, Edible fruit waxing, How to promote the business & project management ஆகிய பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயிற்சிநெறியினை ... விரும்புபவர்கள் தமது சுயவிபரக் கோவை, சான்றிதழ்கள் பங்கீட்டு அட்டைகள் ஆகியவற்றுடன் எதிர் வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக இல. 63, பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி எனும் முகவரியில் அமைந்துள்ள விதாதா வள நிலையத்திற்கு நேரில் வருகை தந்து பதிவை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

மேலதிக தகவல்களை 021 222 1034 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு பெற முடியுமென அவர் அறிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் மஹிந்த அமரவீரவின் கருத்திற்கு ரவிகரன் ஆட்சேபம்



புனர்வாழ்வுக்கு பதிலாக 12 ஆயிரம் தோட்டாக்களே செல வழிந்து இருக்கும் என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர கூறிய கருத்திற்கு வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் கண்டனம் தெரிவித்ததுடன் மந்தகதியில் நடைபெற்று வரும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் பற்றியும் விசனம் தெரிவித்துள்ளார்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் முல்லைத்தீவில் புனர்வாழ்வு அமைச்சினால் இழப்பீடுகளுக்கான சில கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர், புனர்வாழ்வு அதிகார சபை தலைவர் , புனர்வாழ்வு அதிகார சபை பணிப்பாளர், முல்லைத்தீவு அரசாங்க அதிபர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்ட இந்த நிகழ்வின் முதற் கட்டம் முள்ளியவளையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுகளின் 2ஆவது கட்ட நிகழ்வு செல்வபுரத்தில் நடைபெற்ற பொழுது அங்கு ரவிகரன் தொடுத்த மூன்று கேள்வியும் அவர்களை நிலை தவற செய்ததுடன், அவர்களால் பதிலளிக்க முடியாத சூழ்நிலையையும் உருவாக்கியது.

புனர்வாழ்வுக்கு பதிலாக 12 ஆயிரம் தோட்டாக்களே செலவழிந்து இருக்கும் என்று மேற்படி அமைச்சர் கூறிய கருத்தை சுட்டிக்காட்டிய அவர், பொறுப்பு வாய்ந்த ஒருவர் இப்படிக் கூறினால் மக்களுடன் எங்ஙனம் நல்லிணக்கம் ஏற்படும் என்றும் அப்படி ஒருவரால் மக்களுக்கு எப்படி சேவை ஆற்ற முடியும் என்றும் கேள்வி எழுப்பினார்.

மேலும் இது தொடர்பில் அவர் மாற்று சிந்தனையை கொண்டிருத்தல் அவசியம் எனவும் அவரால் கூறப்பட்ட அக்கூற்று வாபஸ் பெறப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்கள் என்று சொல்லப்படுபவர்களுக்கு தொழில் வாய்ப்பு வசதிகள் இனனும் பூரணமாக செய்து கொடுக்கப்படவில்லை.

வீட்டு அழிவுகளுக்கான கொடுப்பனவுகள் 4 வருட காலம் கடந்தும் இன்னும் அதிக மானவர்களுக்கு வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கையில் சபையில் சலசலப்பு ஏற்பட்டது.

அதன் பின்னர் ரவிகரனின் கேள்விக்கு பதில் அளிக்கும் வகையில் கருத்து தெரிவித்த புனர்வாழ்வு அமைச்சரின் ஆலோசகர், குறித்த அமைச்சர் அவ்வாறு கூறியிருந்தால் அது பிழையே என்று தெரிவித்து, பிற்பகல் நடைபெறும் கூட்டத்தில் மேற்படி கேள்விகளுக்கு புனர்வாழ்வு அமைச்சர் பதிலளிப்பார் என்றும் கூறினார்.

இதைத் தொடர்ந்து பிற்பகல் கரைதுறைப்பற்று பிரதேச செயலக மக்கள் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பதிலளித்த புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, சென்ற முறை புனர்வாழ்வுக்கென 300 மில்லியன் ஒதுக்கப்பட்டதாகவும் இம்முறை 500 மில்லியன் ஒதுக்கப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்களுக்கான தொழில் வாய்ப்பு வசதிகளும் வீட்டு அழிவுகளுக்கான கொடுப்பனவுகளும் நிறைவேற்றப்படும் என்று கூறிய போதிலும் அமைச்சர் அமரவீரவின் கூற்று தொடர்பில் கருத்து தெரிவிப்பதை தவிர்த்து கொண்டார். (அ-9-250)

## மோ.சைக்கிள் விபத்தில் ஒருவர் காயம்!


(பூந்தோட்டம்)

வவுனியா ஓயார்சின்னக்குளம் பாலையடி பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வானொன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, வவுனியாவிலிருந்து புதுக்குளம் பகுதி நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் தாண்டிக்குளம் நோக்கி வந்து கொண்டிருந்த வான் ஒன்றுடன் நேருக்கு நேர் மோதியே விபத்துச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் மோட்டார் வண்டியில் பயணித்த நபரொருவர் கை, கால்கள் முறிவடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-9-266)



தாயகத்தில் வாழும் தம் உறவுகளின் கல்வி மேம்பாட்டுக்கு உதவும் நோக்குடன் நோர்வே அஸ்கர் பாறும் இணையம் மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளை வழங்கும் நிகழ்வு பூநகரி செம்பன்குன்று முன்பள்ளியில் இடம்பெற்றது. இக் கொப்பிகள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் ஆலோசனையின் படி கிளிநொச்சி மண்ணின் மூத்த சேவையாளர்களின் திருவுருவப்படங்கள் பொறிக்கப்பட்ட அப்பியாசக் கொப்பிகளை பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சியின் செயலாளருமான மாவை சேனாதிராஜா வழங்கி வைப்பதை படத்தில் காணலாம். (படம்:- மானிப்பாய் செய்தியாளர்)

## பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும்

### விவசாயிகள் கோரிக்கை

(குருமன்காடு)

கடந்த ஆண்டு மாரி மழை பொய்த்துப் போனதால் 2013 - 2014 காலபோக வேளாண்மை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் விவசாயச் செய்கை மிக மோசமான நிலையை அடைந்துள்ளது.

மழையை மட்டும் நம்பிய விவசாயச் செய்கை முழுமையாக அழிந்துள்ளதோடு, சிறுதானிய மேட்டுநில பயிர்ச் செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளதால் அரசு நிவாரணம் வழங்கவேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னாரில் சிறு குளங்களை நம்பிய நெற்செய்கை முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் மாகாண நீர்ப்பாசன குளங்களுக்குட்பட்ட சில பகுதிகள் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் கட்டுக்கரைக் குளத்தில் உள்ள தறபோதைய நீர் மட்டத்தை வைத்து சிறுபோகப் பங்கீடு நடைபெறுகின்றது.

ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் முதல் நடந்தது போன்று எல்லை மீறிய செய்கை தொடர்ந்தால் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு விவசாயச் செய்கை பாதிக்கப்படக் கூடிய வாய்ப்புள்ளதாக விவசாயிகள் அச்சம் வெளியிட்டுள்ளதோடு, கட்டுக்கரை நீர் பகிர்ந்து வழங்குவதில் சீரான முறையில் நீர் முகாமைத்துவம் ஒரு காலமும் பேணப்படுவதில்லை என்றும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதனால் வங்கிகளில் பெற்ற கடனை மீளச் செலுத்துவதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் குடும்ப வாழ்விலும் வறுமை நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-250)

## சுகாதார சேவையின் தரவுத்தளங்களை நவீனமயப்படுத்த வேண்டியது அவசியம்

### வடமாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(பூந்தோட்டம்)

வடமாகாண சுகாதார சேவையின் தரவுத்தளங்களை நவீனமயப் படுத்தவேண்டிய தேவையுள்ளது என வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சுகாதார அமைச்சின் வவுனியா உப அலுவலகத்தில் ஐ.நா.சிறுவர் நிதியப்பிரதிநிதிகளுடனான சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளதாக அமைச்சின் ஊடகப்பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

இச் சந்திப்பில் மேலும் அமைச்சர் கருத்து வெளியிடுகையில்,

யுத்தத்திற்கு பின்னரான சூழ்நிலையில் வடமாகாணத்தின் சுகாதாரத்துறையை மேலும் அபிவிருத்தி செய்யவேண்டிய தேவையுள்ளது. குறிப்பாக மாகாணத்தின் பல மாவட்டங்களிலும் வைத்தியர்களுக்கான தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதனை நிவர்த்தி செய்ய மத்திய சுகாதார அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

அத்துடன் எமது மாகாணத்தின் வைத்தியசாலைகளில் தரவுகள் தற்போதும் கையேடுகளிலேயே பாதுகாக்கப்படுகின்றன.

இவ்வாறான நடைமுறையால் நேரம் விரயமாகிறது. எனவே, இவற்றை நவீன முறையில் இலத்திரனியல் தொழில்நுட்பமுறையை அறிமுகப்படுத்தவுள்ளோம்.

இதற்கு வளப்பற்றாக்குறை நிலவுகிறது. எனவே, ஐ.நா.சிறுவர் நிதியம் இதற்கு அமைச்சினூடாக உதவி செய்ய முன்வரவேண்டும்.

அத்துடன் தற்போது மாகாண சுகாதார அமைச்சினால் 5 ஆண்டு உபாயத்திட்டம் தயாரிக்கப்படுகின்றது. இத்திட்ட வரைபு தயாரிக்கப்பட்டதும் அனைவரது பார்வைக்கும் அனுப்பப்படவுள்ளது.

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழுகின்ற தொழில்சார் நிபுணர்களின் பெறுமதியான கருத்துக்கள் வரவேற்கப்படும் என்றார்.

இதையடுத்து பதிலளித்த ஐ.நா. சிறுவர் நிதிய பிரதிநிதி கோரிக்கைகளை சாதகமாக பரிசீலிப்பதாகவும் மாகாண சுகாதாரத்துறை மேம்பாட்டிற்கு உதவிகள் வழங்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பில் ஐ.நா.சிறுவர் நிதியத்தின் சுகாதாரம்,போஷாக்கு பிரிவுக்கான பிரதானி வைத்திய கலாநிதி [illegible] மற்றும் ஐ.நா. சிறுவர் நிதியத்தின் வவுனியா மாவட்ட பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (அ-9-266)

## கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகள் மீளப்பெறப்பட்டு வருகின்றன

(மல்லாவி)

மாங்குளத்தின் ஏ 9 வீதிக்கரு கில் அரச திணைக்களங்களுக்கு ஒதுக்கப்பட்ட காணிகளை தனியார் சிலர் கையகப்படுத்தியுள்ள நிலையில், அவற்றை குறித்த அரச திணைக்களங்கள் மீளவும் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளை காணக்கூடியதாகவுள்ளன.

வடக்கு மாகாண சபையின் தலைமையகம் மற்றும் அதன் கீழுள்ள அனைத்துப் பிரிவுச் செயலகங்களும் மாங்குளத்திற்கு நகர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் கருத்து வெளியிட்டிருந்த நிலையிலேயே மேற்படி காணிகள் அரசாங்கத்தால் 1952, 1972 ஆம் ஆண்டுகாலப் பகுதிகளில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு, மாவட்ட நீதிமன்றம் உட்பட பிரதேச சபை யின் கீழ் நகரமையத்தில் பேருந்து தரிப்பிடம் அமைப்பதற்காகவென பல ஏக்கர் காணிகளை ஒதுக்கீடு செய்திருந்தன.

இக் காணிகளை போர் நடைபெற்ற காலங்களிலும் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட 2009 ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் வசதிபடைத்த சிலர் ஆக்கிரமிப்பு செய்திருந்தனர்.

கடந்த 21 ஆம் திகதி வெள் ளிக்கிழமை வட இலங்கை போக்கு வரத்துச் சபையின் அதிகாரிகள் ஏ 9 வீதிக்கும் புகையிரத நிலையத்திற்கும் இடைப்பட்ட தமக்குரிய 8 ஏக்கர் காணியை வரைபடங்களுடாக உறுதிப்படுத்தியுள்ளதுடன், காணிகளை அத்துமீறி அபகரித்துள்ளவர்கள் மீது நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ளனர். அத்தோடு, நேற்று முன்தினம் திங்கட்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர் தலைமையிலான அதிகாரிகள் மாங்குளம் நகரப் பகுதியிலுள்ள தமக்குரிய காணியில் பேருந்து தரிப்பிடத்தை அமைப்பதற்கு பார்வையிட்டுள்ளனர்.

இதைவிட நீதிமன்றக்காணி, சித்தி விநாயகர் ஆலயக் காணி, அமைச்சுகளுக்கான காணிகளையும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வட மாகாண காணித்திணைக்கள அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார். (அ-9-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வீரதீர பராக்கிரமன் யார்?

...நமது ராஜ்யத்தில் இவ்வாறு தீயசக்திகள் உருவாவதைப் பொறுக்க முடியாமல், இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சியளித்து அவர்களைத் தவறான



வழியில் ஈடுபடுத்த முயன்ற பயிற்சியாளனை அம்பெய்திக் கொன்றுவிட்டேன்.

என்னுடைய கடமையை நிறைவேற்றியதற்காகப் பெருமைப்படுகிறேன்" என்றான்.

அடுத்து வந்த விஜயன், "நான் தென்திசை நோக்கிப் பயணம் சென்றேன்.

தென்திசைப் பகுதிகளில் சட்டம், ஒழுங்கு சரியான முறையில் இல்லை என்பதை அறிந்தேன்.

அங்குள்ள அரசாங்க அதிகாரிகள் மெத்தனமாக இருப்பதே இதற்குக் காரணம் என்று அறிந்தேன்.

எங்கு பார்த்தாலும் வழிப்பறி கொள்ளைகள் நடந்து கொண்டிருந்தன.

அங்கிருந்த இளைஞர்களுக்குக் கொள்ளைக்காரர்களை எதிர்த்துப் போரிட தைரியம் இல்லை.

அந்த நிலைமையை மாற்ற எண்ணிய நான் அங்கிருந்த இளைஞர்களைத் திரட்டி அவர்களுக்கு வாற்சண்டை கற்றுக் கொடுத்தேன்.

இப்போது அங்குள்ள இளைஞர்கள் எனது முயற்சியினால் வீரம் மிகுந்தவர்களாக மாறிவிட்டனர்." என்றான்

அடுத்து, மூன்றாமவன் கௌதமன் முன் வந்து, "நான் கிழக்கு திசையில் பயணம் சென்றேன்.

ராஜ்யத்தின் கிழக்குப் பகுதி சுபிட்சமாகவும், அமைதியாகவும் இருந்தது.


அதனால் என்னுடைய போர்க்கலைகளைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

ஒருநாள் அங்குள்ள கோயில் ஒன்றில் வடித்திருந்த சிற்பத்தின் விரல்களுக்குள் ஒரு பல்லி சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது.

எப்படி சிக்கியது என்று தெரியவில்லை.

ஆனால், அந்த இடத்தை விட்டு மீள முடியாமல் தவித்ததைக் கண்டேன்.

அப்போது ஓர் அதிசயக் காட்சி



யைக் கண்டேன். மற்ற பல்லிகள் தங்கள் வாயில் உணவைக் கவ்விக் கொண்டு வந்து சிக்கிக் கொண்டிருந்த பல்லிக்கு அளித்துக் கொண்டிருந்தன.

ஓரறிவு படைத்த சாதாரண பல்லிகளுக்குள் நிலவிய அந்த நல்லிணக்கத்தைக் கண்டு வியந்த நான், ஒரு சிற்பியை வரவழைத்து, சிற்பங்களின் விரல்களை உடைத்து, அது தப்பிக்க வழி செய்தேன்.

திரும்பி வரும் வழியில், ஒரு காட்டில் கிணற்றினுள் ஒரு யானைக்குட்டி விழுந்திருந்ததைக் கண்டேன்.

நான் காட்டுவாசி மக்களை அங்கு அழைத்து வந்து, அந்த யானைக் குட்டியை கிணற்றிலிருந்து வெளியே மீட்க ஏற்பாடு செய்தேன்.

பிறகு, அந்த ஆட்களிடம் பல்லிகள், யானைகள்போன்ற மிருகங்கள் தங்களுக்குள் உதவி செய்து கொள்வதை சுட்டிக்காட்டி, மனிதர்களாகிய நாமும் அதிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று உபதேசம் செய்தேன்.

பொறாமை, பேராசை ஆகியவற்றின் காரணமாக, மக்கள் ஒருவருக்கொருவர் சண்டையிடுவது எத்தகைய அறிவீனம் என்பதை எடுத்துரைத்தேன்" என்றான்.

உடனே, மன்னரும், மந்திரியும் தனியே சென்று தங்களுக்குள் கலந்து ஆலோசித்தனர்.

தாங்கள் தேடிக் கொண்டிருந்த வீரமும், பராக்கிரமும் ஜெயனிடமும், விஜயனிடமும் பரிபூரணமாக இருந்ததைக் கண்டு, அவர்களில் ஒருவனையே இளவரசனாகத் தேர்வு செய்ய வேணடுமெனத் தீர்மானித்தபின், குரு வித்யாசாகரின் கருத்தினை அறிய அவரிடம் சென்றனர்.

வித்யாசாகர் மன்னரை நோக்கி, "மகாராஜா! என்னுடைய அபிப்பிராயப்படி மூவரில் கௌதமன் தான் உங்களுடைய வாரிசாகத் தகுதியானவன்.

அவனிடம் வீரம், பராக்கிரமம் ஆகியவற்றுடன், மனித குலத்திற்குத் தேவையான ஜீவகாருண்யமும் நிரம்பியுள்ளது. அத்தகைய ஜீவகாருண்யச் சிந்தனை உள்ளவனே எதிர்கால மன்னனாகத் தகுதியானவன்" என்றார்.

குருவின் கருத்தினைக் கேட்ட மன்னரும், மந்திரியும் மிகுந்த ஆச்சரியப்பட்டனர். நீண்ட நேரம் யோசித்த பிறகு மன்னர், "குரு தேவரே! உங்கள் கருத்தினை ஏற்கிறேன்" என்று சொல்லிவிட்டு, மந்திரியுடன் திரும்பிச் சென்றார்.

(முற்றும்)

## 02.2014 26 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1606 - டச்சு நாடுகாண்பயணி வில்லெம் ஜான்சூன் ஆஸ்திரேலியாவைக் கண்ட முதலாவது ஐரோப்பியர்.
- 1658 - வடக்குப் போர்களில் (1655-1661) ஏற்பட்ட பெரும் தோல்வியைத் தொடர்ந்து டென்மார்க்-நோர்வே அரசன் கிட்டத்தட்ட அரை பகுதி நிலத்தை சுவீடனுக்கு வழங்கினான்.
- 1748 - "ஜேக்கப் டி ஜொங்" (Jacob de Jong. Jnr) யாழ்ப்பாணத்தின் டச்சுக் கமாண்டராக நியமிக்கப்பட்டான்.
- 1794 - கோப்பன்ஹேகன் நகரில் கிறிஸ்டியன்போர்க் அரண்மனை தீயில் எரிந்து அழிந்தது.
- 1815 - நெப்போலியன் பொனபார்ட் எல்பாவில் இருந்து தப்பினான்.
- 1848 - இரண்டாவது பிரெஞ்சு குடியரசு அறிவிக்கப்பட்டது.
- 1936 - இராணுவத்தினர் ஜப்பான் அரசைக் கவிழ்க்க இடம்பெற்ற புரட்சி தோல்வியில் முடிந்தது.
- 1952 - ஐக்கிய இராச்சியப் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் தனது நாட்டிடம் அணுகுண்டு உள்ளதாக அறிவித்தார்.
- 1984 - பெய்ரூட்டில் இருந்து ஐக்கிய அமெரிக்கப் படைகள் வெளியேறின.
- 1991 - உலகம் பரவிய வலையை (WWW) அறிமுகப்படுத்திய டிம் பெர்னேர்ஸ்-லீ நெக்சஸ் என்ற உலகின் முதலாவது இணைய உலாவியை அறிமுகப்படுத்தினார்.
- 1991 - வளைகுடாப் போர்: குவெய்த்தில் இருந்து ஈராக்கியப் படைகள் வெளியேறுவதாக ஜனாதிபதி சதாம் குசேன் அறிவித்தார்.
- 2001 - ஆப்கானிஸ்தானில் தலிபான் அரசு மிகப்பழமையான இரண்டு புத்தர் சிலைகளை அழித்தது.
- 2004 - மக்கெடோனியாவின் ஜனாதிபதி போரிஸ் டிராஜ் கோவ்ஸ்கி பொஸ்னியா, ஹெர்சகோவனாவில் விமான விபத்தில் கொல்லப்பட்டார்.

### பிறப்புகள்

- 1903 - குயிலியோ நாட்டா, நோபல் பரிசு பெற்ற இத்தாலிய வேதியியலாளர் (இ. 1979)
- 1946 - அகமது செவாயில், நோபல் பரிசு பெற்ற எகிப்திய வேதியியலாளர்
- 1947 - தாராபாரதி தமிழ்க்கவிஞர் (இ.2000)

### இறப்புகள்

- 1931 - ஓட்டோ வல்லாக், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானிய வேதியியலாளர், (பி. 1847)
- 1998 - தியோடர் ஷூல்ட்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க பொருளியலாளர், (பி. 1902)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

...அப்போது இராமதேவர் அந்த இரட்டை லிங்கங்களைப் பூசித்துக் கொண்டிருந்தார்.

கல்லின் மீது பால் கொட்டியிருந்தும் அதனை அறியாது தியானத்தில் இருக்கும் இராமதேவரைக் கண்டு ஆச்சரியமுற்ற இடையர்கள் அவரை உற்றுநோக்கி, ஓகோ, இவர் ஒரு சித்தர்போல் தெரிகிறார். நமது சந்தேகத்தை இவரிடமே கேட்டுத் தெளிந்து கொள்வோம் என்று கருதியவர்களாய் அவர் கண் விழிக்குமளவு அங்கே காத்திருந்தனர்.

தன் தவ மோன பூசை முடித்து கண்களைத் திறந்த இராமதேவர் தன் முன்னே பால் செம்புகளுடன் நிற்கும் இடையர்களை நோக்க இருவரும் அவரை வணங்கினர்.


தன் முன்னே வணங்கி நிற்கும் இருவரையும் பார்த்த இராமதேவர், மைந்தர்களே! நீங்கள் யார்? உங்கள் குறை என்ன என்று கேட்டார்.

அவர்களும், ஐயா நாங்கள் இம் மலையில் இருக்கிற பசுக்கிடைக் காரர்கள். தினந்தோறும் பாலைக் கறந்து வீட்டுக்குக் கொண்டு போகும் போது இந்த இரண்டு கல்லிருக்கிற, இடத்திற்கு வந்தவுடன் தெய்வாதீனமாகப் ப்ால் முழுவதும் கொட்டிப் போகிறது. அதற்கான காரணம் தெரியாமல்தான் குழம்பி நிற்கிறோம் என்றனர்.

இடையர்களின் குறையைக் கேட்ட இராமதேவரும் குறுநகை புரிந்து, மைந்தர்களே, நீங்கள் நினைப்பது போல் இவை இரண்டும் சாதாரணக் கல் அல்ல, இரட்டை லிங்க மூர்த்திகளாகும்.

இந்த இரட்டை லிங்கமூர்த்தியே ஆனந்த சுந்தரனென்கிற வணிகனுக்கும் அவர் மனைவியாகிய ஆண்டாள் என்பவளுக்கும் சங்கரநாராயண வடிவமாகக் காட்சியளித்த சிறப்புக் குரியது என்று ஆனந்தசுந்தரன், ஆண்டாள் கதை முழுமையும் தெரிவித்தார்.

மேலும், நீங்கள் அநேக நாட்களாக இந்த லிங்கங்களின் மேல் பாலை அபிஷேகம் செய்து வந்தமையால் நீங்கள் இந்தப் பூவுலகில் நீடுழி கால்ம் தேவேந்திர போகங்களை அனுபவித்து முடிவில் மேலான சிவபதவியை அடை வீர்கள் என்று வாழ்த்தி அவர்களைத் தம் ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்றார்.


இரட்டை லிங்கம்

ஊருக்குத் திரும்பிய அவ்விருவரும் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் மற்ற இடையர்களுக்குத் தெரிவிக்க, ஆச்சரியமுற்ற அனைவரும் ஒன்று சேர்ந்து அம்மூர்த்திகளைக் க்ண்டு வணங்கி, அன்று முதல் நாளுக்கு ஒருவர் வீதம் முறை வைத்து அனுதினமும் அந்த இரட்டை லிங்கமூர்த்திகளுக்குப் பாலாபிஷேகம் செய்து பூசித்து வணங்கி, எந்தவிதக் குறையும் இல்

## ஆன்மீகம் 45

லாமல் வளமாக வாழ்ந்து வந்தார்கள்.

இவ்வளவு பெருமையும்கொண்ட இரட்டை மகாலிங்கங்க்ளை மனமுருகி வணங்குகிறோம். மெய்மறந்து வ்ணங்கிய எங்களைக் கணீரென்று ஒலித்த லிங்காஷ்டகம் சுய உணர்வுக்குக் கொண்டு வந்தது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த லிங்கேஸ்வரன் என்ற இளைஞர்தான் அந்த லிங்காஷ்டகத்தைப் பிசிறு தட்டாமல் அப்படி சுருதி சுத்தமாக கணீரென்ற குரலில் பாடிக் கொண்டிருந்தார்.


கரடுமுரடான படியாத பாமரன் போல் தோற்றமளிக்கும் இவரா இப்படிப் பாடுகின்றார்? ஆச்சரியமான ஆச்சரியம்! அவரைப் பார்க்கும் போதெல்லாம் திருவிளையாடல் படத்தில் விறகு வெட்டி வேடத்தில் வருகின்ற சிவாஜிகணேசனை நினைவு படுத்தியது.

சுலோகம் முடியும் வரை யாரும் அப்படி இப்படி அசையவில்லை. எல்லோரும் மெய்மறந்து அந்தச் சுலோகத்தின் நாதத்தில் கட்டுண்டிருந்தனர். எங்களைப் போலவே அந்த இளைஞரின் இசையில் கட்டுண்டிருந்தார் ஓர் இளந்துறவி.

(தொடரும்)




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



## 57 நான் தவறிவிட்டால்

பதவியேற்ற பின் ஹாலைவிட்டு வெளியே வந்தார் செம்மல். நாலு லட்சம் பேர் நின்றிருப்பார்கள். எல் லோரும் கைகளில் மாலை யுடன் நின்றிருந்தார்கள். முட்டி மோதி கழுத்தில் போட்டனர். போட முடியாதவர்கள் சர்க்கஸ் ரிங்போல் தூக்கி எறிந்தனர். அன்று மூன்று லாரிகள் மாலைகளைப் பார்த்திருக்கும். இதனைக் கண்ட வித்வான் லட்சும ணன் அவர்கள் தலைவருக்கு ஏற் கனவே ஏழு பெயர். இன்னிக்கு முதல் வருன்னு ஒரு பெயர். நவநாயகர் என்றும் சேர்க்கலாம். ஏன்னா இவர் தமிழகத்துக்கு 9 ஆவது முதல்வர். அதோடு கோடி மாலை கண்டவர் என்றும் சேர்த்துக் கொள்ளலாம் என்றார்.

செம்மல் மாலையில் வீடு வந்தார். வீட்டிலும் பலர் காத்து இருந்தனர். அனைவருக்கும் கைகூப்பி வணக்கம் சொன்னார். அவர்களைப் பார்த்த தும் வழக்கமான கேள்வியைத்தான் கேட்டார்.

"எல்லோரும் சாப்பிட்டீங் களா?" என்று.

"உட்காருங்க. சும்மா உட்காருங்க. எப்பவும் உள்ள எம்.ஜி.ஆர் தான்" என்றார்.

சி.எம். இரண்டு எழுத்து எம்.ஜி. ஆர் மூணு எழுத்து. அதுக்குத்தான் ஒண்ணு கூட "எம்"கிறது. தமிழிலே "நம்" என்றும் ஆகும். எப்படியோ அதிலே முதல்லே இருப்பது இதுலே இரண்டாவதா இருக்குது. அதனாலே எம்.ஜி. ஆரை மனசிலே வச்சு யாரும் வரலாம். போகலாம். சிபாரிசுக்கு மட்டும் வராதீங்க.

என்னை இழக்கணும்னா அதைக்கொண்டு வாங்க. என் பொறுப்பிலேந்து நான் தவறிட்டா ரொம்ப கேவலம் வந்திடும். அதுக்கு என்னை ஆளாக்காம நீங்களே


ஹிந்தி நடிகர் சசி கபூருடன் எம்.ஜி.ஆர்

நண்பர் ராமலிங்கம் "இல்லை என்னை பொறுத்துக்கங்க" என் சி.எம்." என்றார்.

"இப்ப என்ன வித்தியாசம்?

அப்போது இந்தி நடிகை ஷபனா ஆஸ்மியின் தந்தை கைஃபி ஆஸ்மி இருந்தார். என் நண்பர், பெரும் கவிஞர். அவர் செம்மலுக்கு ஒரு கவிதையை உரு துவில் எழுதிக் கொடுத்தார்.

கோடி மாலை கண்டவன் நீ-
கோடானு
கோடி பேரை ப் பின்னால்
கொண்டவன்நீ-
கோடிக்கு பூஜ் யங்கள் ஏழு-
புரட்சி
தேடிக் கொ டுத்த ராஜ்யங்
கள் ஏழு.
மக்கள் மனமாள ஒரு ராஜ்யம்
மகேசன் அருளாள 'ஒரு
ராஜ்யம்
திரையாள ஒரு ராஜ்யம்
திகட்டாக் கலையாள ஒரு
ராஜ்யம்
வற்றாக் கொடையாள ஒரு
ராஜ்யம்- பெரும்
புகழ் ஆள ஒரு ராஜ்யம்-
தமிழ்
மண்ணாள மகத்துவ ராஜ்யம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூலை தடைசெய்யோம்

அரசு முகநூலை (Face book) நாட்டில் தடைசெய்வது தொடர்பாக ஊடகங்களில் வெளியிட்டுள்ள செய்திகளில் எவ்வித உண்மையுமில்லை என்றும் இதனை தடைசெய்வது குறித்து அரசாங்கம் எவ்வித தீர்மானங்களையும் மேற்கொள்ளவில்லை என்றும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட தெரிவித்துள்ளார்.

பொது மக்களிடையே பிழையான கருத்துக்களை புகுத்துவதற்கு ஒரு சிலர் முயற்சிக்கின்றனர். முகநூல் (Face book) சமூக வலைத்தளமாகும்.

அரசாங்கம் இந்த வலைத்தளத்தை தடைசெய்ய எவ்வித தீர்மானமும் எடுக்கவில்லை என்றும் பொய்யான தகவல்களை பரப்புவோர் குறித்து தாம் வருத்தம் தெரிவிப்ப தாகவும் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட குறிப்பிட்டுள்ளார். (அ)

# வடக்கு மாகாண சபையின் தீர்மானம் கெஹலியவுக்கு விளங்கவில்லை

## சீ.வீ.கே.சிவஞானம்

பலாலி மற்றும் திருகோணமலையில் இருந்து இந்தியாவுக்கு நேரடி விமான சேவைகளை ஆரம்பிக்குமாறு கோரி வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒரு கோரிக்கை மாத்திரமே.

எனவே இலங்கை-இந்திய அரசாங்கங்களிடம் கோரிக் கையை முன்வைப்பதற்கு வடக்கு மாகாண சபைக்கு அதிகாரம் உண்டு என்று மாகாணசபை தவிசாளர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நிறை வேற்றப்பட்ட இந்த தீர்மானம் தொடர்பில் இலங்கையின் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் ஐக்கிய நாடுகளின் முன்னாள் இராஜதந்திரி தயான் ஜயதிலக்க ஆகியோர் மாற்றுக்கருத்துக்களை வெளியிட்டிருந்தனர்.

அதிலும் அமைச்சர் கெஹலிய வட மாகாண சபைக்கு இவ்வாறான கோரிக்கையை கூட முன் வைக்க முடியாது என்று குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு பதில் வழங்கும் வகையில் சிவஞானம் கடிதம் ஒன்றை அமைச்சருக்கு அனுப்பியுள்ளார்.

அதில் மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து அறிந்து கொள்ளாமலேயே கருத்துக்கூறுவது பொருத்தமல்ல என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



1960 ஆம் ஆண்டுக்காலப் பகுதிகளில் பலாலிக்கும் திருச்சிக்கும் இடையில் விமான சேவைகள் நடைபெற்றன.

இந்த சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பதன் மூலம் வடக்கு கிழக்கு மக்களுக்கு நன்மை ஏற்படும் என்று கருதியே மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எனினும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் கருத்து வடக்கு கிழக்கு மக்கள் தொடர்பில் தென்னிலங்கை மக்கள் மத்தியில் இனவாத விதையை விதைக்கும் வகையில் அமைந்துள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

13ஆவது அரசியல் அமைப்பு சட்டப் படி மாத்திரம் அல்ல. சாதாரண சட்டப்படி பொதுமகன் ஒருவருக்கு கோரிக்கை ஒன்றை முன்வைக்க உரிமையுண்டு என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# தமிழினத்தின் எச்சங்களாக மனித புதைகுழிகளே உள்ளன

## மாவை.எம்.பி.தெரிவிப்பு



தமிழினத்தின் எச்சங்களாக மண்ணில் புதைக்கப்பட்ட மனித புதை குழிகளேயுள்ளன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

தீவகப்பகுதிக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மற்றும் வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் பா.கஜதீபன் உள்ளிட்டவர்கள் மக்கள் சந்திப்பில் ஈடுபட்டனர்.

இந்தச் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு-கிழக்கில் தமிழர் தாயகப் பூமிகளில் மனித புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டுவருகின்றன.

இங்குள்ள மனிதபுதைகுழிகளில் தமிழர்களே புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற காரணத்திற்காக விசாரணைகளை நாம் கோரிநிற்கிறோம்.

தமிழினத்தின் எச்சங்களாக வடக்கு கிழக்கில் மிஞ்சியிருப்பது போரால் ஏற்பட்ட பாதிப்புகளும் மனித புதைகுழிகளுமேயுள்ளன.

மேலும், தமிழர்களுக்கு நிரந்தரத்தீர்வை இந்த அரசாங்கம் தரும் என்ற நம்பிக்கையும் இல்லை. இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உள்நாட்டில் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் அதனைசெய்ய இந்த அரசாங்கம் தவறியதால் தான் ஐ.நா. மனிதவுரிமை பேரவையில் சர்வதேச விசாரணை கோருகின் றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# இராணுவத்தினரின் தேவைக்காக 600 ஏக்கர் காணி வழங்கப்பட்டது

## காணி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கிலுள்ள இராணுவ முகாம்களை பலப்படுத்தும் நோக்கில் இராணுவம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் அரசாங்கம், இராணுவத்திற்கு புதிதாக 600 ஏக்கர் நிலத்தை வழங்கியுள்ளதாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இராணுவம் தற்போது வைத்துள்ள காணிகளுக்கு மேலதிகமாக இந்த காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

தேசிய பாதுகாப்பை இரண்டாம் பட்சமாக கருத முடியாது என்பதால், இராணுவத்தின் கோரிக்கைக்கு அமைய அரசாங்கம் இந்த 600 ஏக்கர் காணியை இராணுவத்திற்கு வழங்கியுள்ளது.

இராணுவ முகாம்களுக்கு தனியார் காணிகளை சுவிகரிப்பதை கொள்கையளவில் அரசாங்கம் குறைத்து கொண்டுள்ளது. இதற்கு பதிலாக அரச காணிகளை பயன்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாடசாலையில் இளைஞர் கழகம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு பாடசாலையும் அதன் சுற்றுப்புறமும் சிரமதானம் செய்யப்பட்டது. இதன் போது மாணவர்கள் சிரமதானத்திலீடுபடுவதைப் படத்தில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

# நளினியின் பரோல் வழக்கு ஒத்திவைப்பு

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நளினி விவகாரத்தில் தற்போதைய சூழ்நிலை மாறியுள்ளதாக தமிழக அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தந்தையை உடனிருந்து கவனிக்க ஒரு மாதம் பரோல் கேட்டு நளினி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த மனுவிற்கு ஏற்கனவே பதில் அளித்த தமிழக அரசு, நளினியை பரோலில் விட்டால் சட்டம்-ஒழுங்கு சீரழியும் என்று கூறியிருந்தது.

இதனிடையே, நளினி உட்பட ஏழு பேர் விடுதலை செய்யப்படுவார்கள் என்று தமிழக அரசு சமீபத்தில் அறிவித்தது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு வழக்குத் தாக்கல் செய்தது.

இந்நிலையில், நளினி பரோல் கேட்ட வழக்கு உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழக அரசு சார்பில் ஆஜரான மாநில குற்றவியல் தலைமை வழக்கறிஞர் சண்முக வேலாயுதம், நளினி விவகாரத்தில் தற்போதைய சூழ்நிலை மாறியுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், நளினி உட்பட 7 பேரின் விடுதலைக்கு எதிரான மனு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றும், விடுதலை தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளதால் பரோல் வழக்கை தள்ளி வைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இதையடுத்து, வழக்கு விசாரணையை எதிர்வரும் மார்ச் 17ஆம் திகதிக்கு உயர் நீதிமன்றம் ஒத்திவைத்தது. (அ-2)

# பாகிஸ்தானின் பக்கம் சாரும் இலங். ஏற்றுமதி வர்த்தகர்கள்

## வர்த்தக ஆய்வில் சுட்டிக்காட்டு

இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகர்கள் பாகிஸ்தானை நோக்கி திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளமை இந்தியாவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று வர்த்தக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசாங்கத்தின் யுத்தக் குற்றங்களை காரணம் காட்டி, ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்க மறுத்தது.

இந் நிலையில் இலங்கையின் ஆடைத் தொழில்த்துறை கடும் வீழ்ச்சியை சந்தித்ததுடன், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு ஏற்றுமதியாளர்களும் பாதிப்படைந்தனர்.

இந்த நிலையில் அவர்கள் இந்தியாவின் சந்தை பக்கம் சார்ந்திருக்க வேண்டிய நிலை காணப்பட்டது.

ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை கொண்டுள்ள பாகிஸ்தான், இலங்கை வர்த்தகர்களுக்கு கை கொடுக்க முன் வந்திருக்கிறது.

கொழும்பில் ஊடக சந்திப்பு ஒன்றை நடத்திய பாகிஸ்தானின் உயர்ஸ்தானிகர், பாகிஸ்தானுக்கு இருக்கின்ற ஜீ.எஸ். பி.பிளஸ் வரிச்சலுகையை பயன்படுத்தி, இலங்கையின் ஏற்றுமதியாளர்கள் தங்களின் பொருட்களை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு ஏற்றுமதி செய்யலாம் என்று அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பினால் இந்தியாவின் பக்கம் இருந்த வர்த்தகர்கள், பாகிஸ்தான் பக்கம் சரியக் கூடிய சூழல ஏற்பட்டுள்ளதால் இந்தியாவுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என்று கருதப்படுகிறது.

ஏற்கனவே வருகைக்கு பின்னரான வசா வழங்கும் திட்டத்தில் இலங்கையை உள்ளடக்காமை, அமெரிக்காவின் பிரேரணைக்கு ஆதரவளிக்கின்றமை போன்றவிடயங்களும், இலங்கை வர்த்தகர்களை பாகிஸ்தான் பக்கம் போகச் செய்யும் என்று தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவியின் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ள முடியாது

## அரசாங்கம் திட்டவட்டம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

போர் இடம்பெற்ற காலத்தில் சர்வதேச மனிதவுரிமைச் சட்டங்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும், உள்நாட்டு ரீதியான விசாரணைகளை சர்வதேச சமூகம் கண்காணிக்க வேண்டுமெனவும் நவநீதம்பிள்ளை பரிந் துரை செய்துள்ளார்.

எனினும், இந்த பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஒரு பக்கச் சார்பாக செயற்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நவநீதமபிள்ளையின் பரிந்துரைகள் அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தண்டனை விதிக்கும் நோக்கில் செயற்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மாநாட்டில் நவநீதம்பிள்ளையினால் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கை தொடர்பான ஆவணம் வெளியாகியுள்ளதனைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கம் இந்த கருத்துக்களை முன்வைத்துள்ளது.

(அ-2)

# மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் நாம் முடிவெடுக்கோம்

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேசத்தை திருப்திப்படுத்தும் நோக்கில் நாட்டுக்கு பாதகமான தீர்மானங்கள் எடுக்கப்பட மாட்டாது என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மஹரகமவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

சர்வதேச சமூகத்தின் ஒரு சிலரை திருப்திப்படுத்தும் நோக்கில் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பாதிப்பு ஏற்படக் கூடிய தீர்மானங்கள் எடுக்கப்பட மாட்டாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப பேரவை மாநாட்டில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

இந்த தீர்மானம் நிறைவேற்றப்படுவதனை ஒரே இரவில் தடுத்து நிறுத்த முடியும்.

எனினும், அவ்வாறு செய்வதனால் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பாதிப்பு ஏற்படும். அரசாங்கம் இவ்வாறு செய்யத் தயாரில்லை.

பல வெளிநாடுகள் இலங்கையின் வெளியுறவுக் கொள்கை குறித்து திருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

நாடு எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் மற்றும் சவால்களை எதிர்நோக்கக் கூடிய அளவிற்கு சக்தியும் ஆற்றலும் அரசாங்கத்திற்கு காணப்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## புளியாக்கீரை

Botanical Name- Oxalis corniculata
Family-Geronaceae
Engl-Indian sorrel

செடி இனத்தைச் சேர்ந்தது. தரையோடு படர்ந்து வளரும் இயல்புடையது. மென்மையான தண்டைக் கொண்டது. பசுமையானது. இலைகள் மெல்லிய நீண்ட இலைக் காம்பின் நுனியில் மூன்று மூன்றாக சிற்றிலைகளாக அமைந்திருக்கும். பூக்கள் சிறியவை. கொத்தாக காணப்படும். மஞ்சள் நிறம் கொண்டது. விதைகள் நுன்னியவை.

இச்செடி ஈரப்பசையுள்ள இடங்களில் தானாக வளரும். சதுப்புநிலப் பகுதி, வாய்க்கால்கள் வயல்களில் தானாக முளைத்து வளரும். விதைகள் மூலம் இன விருத்தி அடையும். வீட்டுத் தோட்டங்களில் சாடிகளிலோ அல்லது வாய்க்கால் நீர் ஓடும் இடங்களிலோ பயிரிடலாம். இதனால் கீரையாக எமது உணவில் சேர்த்துக் கொள்ளமுடியும்.

### மருத்துவப் பயன்கள்

✦ இந்தக் கீரையை துவையல் செய்தோ பருப்புடன் இலைகளை வேகவைத்தோ உண்ணலாம். இதனைத் தொடர்ந்து பயன்படுத்திவர உடலுக்கு எதிர்ப்புச் சக்தி உண்டாவதுடன் வயிற்றுப்புண் குணமாக இது உதவும். உடல் வெப்பத்தை சமப்படுத்தும்.பசியைத்தூண்டும் தன்மையுடையது.

✦ புளியாரைக் கீரையை சிறு பருப்பு சேர்த்து அவித்து தனியாகக் கடைந்து வெள்ளைப்பூடும் சேர்த்துச் சாப்பிட்டால் உடற்சூடு குறையும்.

✦ புளியாரைக்கீரையுடன் வேப்பம்துளிர், மிளகு (3), மஞ்சள்தூள் (1 கிராம்) ஆகியவற்றை சேர்த்து அரைத்து தூதுவளைக்காய் (2 கிராம்) உருண்டை 3 சாப்பிட்டுவர இரத்தம் தூய்மையாகி நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.

✦ புளியாரைக்கீரையுடன்மிளகு, சீரகம், பூண்டு, மஞ்சள் ஆகியவற்றை சேர்த்து குடிநீர் செய்து 30-60 மில்லி குடித்துவந்தால் நன்றாக பசி எடுக்கும்.

✦ புளியாரைக் கீரையுடன் (4 பங்கிற்கு) ஒரு பங்கு மிளகு சேர்த்து குடிநீர் காய்ச்சி 30 மில்லி அருந்த வைரஸ் காய்ச்சலை தணிக்கும்.

✦ புளியாரைக் கீரையைச் சாறு எடுத்து அதில் உப்புச் சேர்த்து காய்ச்சவும். மீண்டும் மீண்டும் காய்ச்சினால் பாத்திரத்தின் அடியில் உப்பு படியும். உப்புப் படிவத்தை பொடியாக்கி தினமும் ஒரு கிராம் எலுமிச்சம் பழச்சாற்றில் கலந்து குடித்தால் வயிற்றுவலி உடனே மறையும். குடற்புண்களும் குணமாகும்.

✦ புளியாரைக் கீரைச் சாறு எடுத்து அதில்மாதுளம்பழத் தோலை அரைத்து தயிரில் குழைத்து 5 கிராம் அளவு காலை, மாலை சாப்பிட வயிற்றுக்கடுப்பு, சீதபேதி குணமாகும்.

✦ புளியாரைக்கீரைச்சாற்றில் சின்னசீரகத்தை ஊறவைத்து உலர்த்தி பொடித்து அரைத்து 2 கிராம் அளவு சாப்பிட்டுவர பித்த நோய்கள் குணமாகும்.

✦ புளியாரைக்கீரைச் சாற்றில் துத்தி இலையை சேர்த்து அரைத்து 2 கிராம் அளவு சாப்பிட்டுவர இரத்த மூலம் குணமாகும்.

✦ புளியாரைச்சாற்றில் ஓமத்தை ஊறவைத்து உலர்த்தி பொடித்து 2 கிராம் அளவு சாப்பிட்டுவரத்து ஜீரணசக்தி அதிகரிக்கும்.

✦ புளியாரைக்கீரையை நன்கு கழுவி சுத்தம் செய்து மைபோல அரைத்து 25 கிராம் அளவு 100 மில்லி மோரில் கலக்கி குடிக்க மூலநோய் நீங்கும்.

✦ புளியாரைக்கீரை 25 கிராம் எடுத்து 400 மில்லி நீர்விட்டு 100 மில்லியாக குடிநீர் காய்ச்சி 30 மில்லி காலை, மாலை அருந்த சிறுநீர் எரிச்சல், முரசிலிருந்து இரத்தம் கசிதல் தீரும்.

✦ புளியாரைக்கீரையை சுத்தம் செய்து பன்னீர்விட்டு அம்மியில் வைத்து மைபோல அரைத்து முகத்தில் தடிப்பாக பூசிவர முகப்பரு, கொப்புளங்கள் மறையும்.

✦ மஞ்சளையும் இக்கீரையையும் அம்மியில் வைத்து மைபோல அரைத்த இப்பசையை பழுக்காத கடினமான கட்டிகள், வேதனையுள்ள கட்டி, வீக்கம் இவற்றின் மீது பூசிக் கட்டவேண்டும். அக்கட்டிகள் குளிர்ச்சியடைந்து கரைந்து குணமாகும்.

### புளிச்சக்கீரை சட்னி

✦ ஒரு கப் புளிச்சக்கீரை, மிளகாய் வற்றல் -4, பச்சை மிளகாய்-6, வெந்தயம்-1/2 தேக்கரண்டி, பெருங்காயம் -சிறுதுண்டு, கடுகு -1/2 தேக்கரண்டி, மஞ்சள் சிறு துண்டு, நல்லெண்ணெய்- 5 மேசைக்கரண்டி, உப்பு- சிறிதளவு

✦ வெறு வாணலியில் வெந்தயத்தை வறுத்துக்கொள்ளவும். அதன் பின்னர் 2 மேசைக்கரண்டியளவு எண்ணெய்விட்டு பெருங்காயத்தை பொரித்து எடுத்துக்கொள்ளவும். அதன் பின்னர் மேசைக்கரண்டியளவு எண்ணெய்விட்டு அதன்பின்னர் கீரையைக் கழுவி வடியவைத்து போட்டு வதக்கி எடுத்துக்கொள்ளவும். கல்லுரலை துப்புரவு செய்து வெந்தயம், மஞ்சள், பெருங்காயம் இவைகளை மசிய இடித்துக்கொண்டு அதன் பின்னர் வறுத்த மிளகாய், வதக்கிய பச்சை மிளகாய், உப்பு இவற்றை போட்டு நன்றாக மசியும் வரை சேர்த்து இடித்துக்கொள்ளவும்.

✦ வதக்கிய கீரையையும் மசிய இடித்துக்கொள்ளவும். கற்சட்டியை அடுப்பில் வைத்து 2 மேசைக்கரண்டி அளவு எண்ணெய் விட்டு கடுகைத் தாளித்து இடித்து எடுத்த சட்னியை போட்டு வதக்கி எடுத்துக்கொள்ளவும். இந்தக் கீரையில் புளிப்பு இருக்குமாதலால் புளி தேவையில்லை. இரும்புச்சத்துள்ளது. தாராளமாக மலம் கழியும். உடலுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும்.

### புளியாரைக்கீரை சாதப்பொடி

புளியாரைக்கீரை- 200 கிராம்
துவரம்பருப்பு-100 கிராம்
மிளகு- 10
மிளகாய் வற்றல்-10
உள்ளி -10 பல்
உப்பு- தேவையானளவு

முதலில் வாணலியில் மிளகாய் போட்டு எண்ணெய்விட்டு வறுக்கவும். பின்பு பெருங்காயத்தை பொரிக்கவும்.பின்பு மிளகை பொரித்து கடைசியாக புளியாக்கீரையை சிறுதீயிலிட்டு வறுக்கவும்.

✦ அம்மியை கழுவிதுடைத்து மிளகாய், இலை இவற்றைப் பொடித்து இறுதியாக பூண்டை வைத்து பொடியாக்கவும்.

✦ இந்தப் பொடியுடன் வாணலியில் நெய் 3 தேக்கரண்டி விட்டு கடுகு 10 கிராம் போட்டு வெடித்ததும் பொடியுடன் கலக்கவும். முழு நிலக்கடலையை இரண்டாக உடைத்து வறுத்துப்போட்டு கலந்து வைத்துக் கொள்ளவும். இக்கலவையில் ஒரு தேக்கரண்டியளவு சாதத்தில் கலந்துநெய்விட்டுபிசைந்துஉண்ணவும். உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். உணவு நன்கு ஜீரணமாகும். மலம் நன்கு இளகி வெளியேறும். உடலுக்கு குளிர்ச்சியை கொடுக்கும்.

புளியாக்கீரையை சமைத்து தினமும் உண்டுவர காயம் (உடல்) கற்பமாவதோடு, வாதநோய்கள், மாந்தம் போன்ற நோய்கள் தீரும். உடல் பலத்தை உண்டாக்கும். இந்தக்கீரைக்கு புளிப்புத் தன்மை அதிகம் இருப்பதால் புளியாரைக் கீரை என்று அழைக்கப்படுகின்றது. இதில் உயிர்ச்சத்து C யும் அதிகமுண்டு.



திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்.யை பிணையெடுக்குமா தென்னாபிரிக்கா?

ஐ.நா.மனித உரிமைகள், பேரவைக் கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு இன்னும் ஒரு வாரமே உள்ள நிலையில், அமைச்சர் நிமால்சிறிபாலடிசில்வாதலைமையிலான அரசாங்க உயர்மட்டக் குழுவொன்று கடந்த வாரம் பிற்பகுதியில் தென்னாபிரிக்காவுக்குச் சென்று பேச்சுக்களை நடத்தியுள்ளது. இந்தக் குழுவினது பேச்சுக்களின் அடிப்படையாக இருந்த விடயம், உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை அமைப்பது தொடர்பானதாகவே இருந்தது.

அரசாங்க உயர்மட்டக் குழு தென்னாபிரிக்கா செல்வதற்கு முன்னர், வெளிவிவகார அமைச்சு இதனை, உறுதிப்படுத்தியிருந்தது. பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமா கொழும்புவந்திருந்தபோது, இந்தஉண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பது குறித்து, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பேச்சு நடத்தியிருந்தார். இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும், தென்னாபிரிக்க ஜனாதிபதி பேச்சு நடத்தியிருந்தார். அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிடிகொடுக்கவில்லை. இதுபற்றி, இந்தியாவுடன் கலந்தாலோசித்தே முடிவெடுக்க வேண்டும் என்று கூட்டமைப்பு கூறிவிட்டது. அதற்குப் பின்னர், புதுடெல்லியில் இந்திய அரசாங்கத்துடன் சந்திப்பதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முயற்சிகளை மேற்கொண்டிருந்த போதிலும் இது இன்னமும் வெற்றி பெறவில்லை. இந்தியச் சந்திப்புக்களில் இழுபறி ஏற்பட்டதால், கூட்டமைப்பின் தென்னாபிரிக்கப் பயணமும் தடைப்பட்டுப் போனது. இந்த விடயத்தில் கூட்டமைப்பு சற்றே விலகி நிற்பதற்கு ஒரு காரணம், இதனைப் பயன்படுத்தி அரசாங்கம், சர்வதேச அழுத்தங்களில் இருந்து தப்பிவிடுமோ என்ற பயம்.

வெண்ணெய் திரளும் போது தாழியை உடைத்துவிட்டோம் என்ற அவப்பழி வந்து சேர்ந்துவிடக் கூடாது என்பதிலும், அரசாங்கத்துக்கு சர்வதேச அழுத்தங்களைக் கொடுக்கக் கூடியதொரு சூழல் வாய்த்துள்ள போது அதனை நழுவவிட்டுவிடக் கூடாது என்பதிலும் கூட்டமைப்பு உறுதியாக உள்ளது.

தென்னாபிரிக்கா பிரதி அமைச்சர் எப்ராகிம் உள்ளிட்ட பலர் கடந்த நவம்பர் மாதத்துக்குப் பின்னர் இலங்கை அரசாங்கத்துடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் தொடர்ச்சியாக கலந்துரையாடிய நிலையில்தான், இலங்கைக்கான சிறப்புத் தூதுவர் ஒருவரை நியமிக்கும் அறிவிப்பு கடந்த வாரம் வெளியானது.



சிறில் ரமபோசா ஜேக்கப் சூமா

தென்னாபிரிக்க அதிபர் ஜேக்கப் சூமா, கேப்டனில் உள்ள நாடாளுமன்றத்தில், கடந்த 13 ஆம் திகதி நிகழ்த்திய தேசத்துக்கான ஆறாவது உரையில், இலங்கை மற்றும் தென்சூடானுக்கான சிறப்புத் தூதுவராக, சிறில் ரமபோசாவை நியமிப்பதாக அறிவித்திருந்தார். இந்த இரண்டு நாடுகளும் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு தென்னாபிரிக்காவின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு உதவுமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்கவே, சிறப்புத் தூதுவர் ஒருவரை நியமிக்க முடிபு செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டிருந்தார். அத்துடன், இந்த சிறப்புத் தூதுவரின் பணி எல்லை குறித்தும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

மோதல்களுக்குத் தீர்வு காணுதல் மற்றும் இணக்கப் பேச்சுக்களில், குறிப்பாக, தென்னாபிரிக்காவின் அனுபவங்களின் அடிப்படையில் இந்த இரண்டு நாடுகளும் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள இவர் தனது நிபுணத்துவ உதவிகளை வழங்குவார் என்று அவர் தெளிவாக கூறியிருந்தார். அதாவது இரண்டு நாடுகளினதும் உள்விவகாரங்களில் தலையீடு செய்யாமல்- தாமே தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான நிபுணத்துவ உதவிகளை மட்டும் வழங்குவார் என்பதே இதன் மறைபொருள்.

இலங்கைக்கான சிறப்புத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள சிறில் ரமபோசா, ஒரு சட்டநிபுணர். தென்னாபிரிக்காவில் சுரங்கத் தொழிலாளர்களுக்கான பலம் வாய்ந்த தொழிற்சங்கத்தை நிறுவியவர். இப்போது தென்னாபிரிக்காவை ஆளும் ஆபிரிக்கத் தேசிய காங்கிரசின் பிரதித் தலைவர். தென்னாபிரிக்காவில் நிறவெறியை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பான பேச்சுக்களிலும் 1994 இல் முதலாவது தேர்தலை ஜனநாயக ரீதியில் நடத்துவதிலும் பெரும் பங்கு வகித்தவர்.

இலங். விவகாரத்தை கையாள்வதற்கு, தென்னாபிரிக்கா நியமித்துள்ள சிறப்புத் தூதுவர் வலுவானதொருவராக இருப்பதைக் கொண்டே, இந்த விவகாரத்தில் தென்னாபிரிக்கா கொண்டுள்ள கரிசனையை புரிந்துகொள்ளலாம். இலங்கைக்கான சிறப்புத் தூதுவர் ஒருவரை நியமிக்க தென்னாபிரிக்க அதிபர் எடுத்த முடிபு, இலங்கை விவகாரத்தில் முக்கியமானதொரு திருப்பம் என்று கூட சொல்லலாம். ஆனாலும், இதுபற்றிய செய்திகள் இலங்கை ஊடகங்களை எட்ட சுமார் மூன்று நாட்கள் பிடித்தன என்பது ஆச்சரியமானதே.

முதலில், சிறில் ரமபோசா தென்சூடானுக்கான சிறப்புத்' தூதுவராக நியமிக்கப்படவுள்ளதான தகவலை தென்னாபிரிக்க அமைச்சர் ஒருவர் வெளியிட்டிருந்தார். அப்போது அதை அமெரிக்கா வரவேற்றிருந்தது. ஆனால், அவர் இலங்கைக்கான சிறப்புத் தூதுவராகவும் நியமிக்கப்பட்டதை அமெரிக்கா வரவேற்கவோ அல்லது அதுபற்றிக் கருத்து வெளியிடவோ இல்லை. ஏனென்றால், அமெரிக்காவின் மூன்றாவது தீர்மானத்துக்கு தென்னாபிரிக்காவைக்கொண்டு பாதுகாப்புக் கவசம் அமைப்பதே. இலங்கை அரசாங்கத்தின் இப்போதைய நகர்வாகத் தெரிகிறது.

அதற்காக தென்னாபிரிக்க பாணியிலான உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை, இலங்கை அரசாங்கம் அமைப்பதை அமெரிக்கா விரும்பவில்லை என்று அர்த்தம் கொள்ள முடியாது. ஏனென்றால், இப்போது சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் நிலைக்கு நெருங்கி வந்துள்ள, அமெரிக்காவும், பிரித்தானியாவும் சுதந்திரமான, நம்பகமான உள்ளக விசாரணை ஒன்றையே வலியுறுத்தி வந்துள்ளது. அத்தகைய முயற்சிகள் ஏதும் நடக்காத நிலையில்தான், அடுத்தகட்டம் பற்றிச் சிந்திக்கத் தலைப்பட்டன. எனவே, இறுதிக்கட்டத்திலாவது உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை அமைக்க அரசாங்கம் முன்வந்தால், அதற்கு இந்த நாடுகள் குறுக்கே நிற்பதற்கு வாய்ப்பில்லை. என்றாலும் இலங்கை அரசாங்கத்தினால், நம்பகமான- சுதந்திரமான விசாரணை ஒன்றை நடத்த முடியுமா என்ற சந்தேகம் இந்த நாடுகளிடம் வலுவாக உள்ளதை மறுக்க முடியாது.

ஐ.நா.மனித உரிமை ஆணையாளரின் அறிக்கைகளும் அதையே சார்ந்துள்ளன். இந்த நிலையில் தென்னாபிரிக்காவின் உதவியுடன், உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை அரசாங்கம் அமைக்க முன்வந்தாலும்கூட, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஊடான நகர்வுகளை அமெரிக்கா தலைமையிலான நாடுகள் கைவிட்டு விடும் என்று எதிர்பார்த்தால் அது தவறானது. ஏனென்றால், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையில், இலங்கையில் இடம்பெற்ற சர்வதேச மனித உரிமை மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்கள் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கும், எந்தவொரு உள்நாட்டு செயன்முறைகளை கண்காணிப்பதற்கும், சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. இதன்படி, எந்தவொரு உள்நாட்டு பொறிமுறை அமைக்கப்பட்டாலும்கூட, அதைக் கண்காணிக்கும் வகையிலான சர்வதேசப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே, தென்னாபிரிக்காவின் உதவியுடன் உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்து தடுப்புக் கவசத்தை அரசாங்கம் அமைத்தாலும்கூட இதனை அடிப்படையாக வைத்துக்கொண்டு சர்வதேச பொறிமுறை ஒன்றை அமெரிக்கா வலியுறுத்த முனையலாம்.

அதேவேளை, இலங்கை அரசாங்கம், உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பது குறித்து ஆராய்வதற்காக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான குழுவை தென்னாபிரிக்கா அனுப்பியது.

ஜெனிவா நகர்வுகளை முறியடிக்கின்ற திட்டங்களில் ஒன்றாகவே இருக்கலாம் என்ற சந்தேகம் வலுவாக உள்ளது. ஏனென்றால், தென்னாபிரிக்காவின் முன்னாள் நீதிபதியான ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஜெனிவாவில் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ள சர்வதேச விசாரணைப் பொறிமுறையைப் பரிந்துரையை பலவீனப்படுத்த உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவொன்றே ஒரே அஸ்திபாரமாக உள்ளது. அதனால்தான் அரசாங்கம் இதனை இறுதி நேரத்தில் கையில் எடுத்துள்ளதாகத் தெரிகிறது.

ஏற்கனவே, அரசாங்கம், தென்னாபிரிக்காவின் உதவியுடன் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் ஆபிரிக்க நாடுகளை தமக்குச் சாதகமாகத் திருப்பும் முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

அதேவேளை, தென்னாபிரிக்காவை தமக்கு ஆதரவாகத் திருப்புவதற்கு அமெரிக்காவும் அழுத்தங்களை கொடுப்பதாகவும் கூறப்பட்டது. இந்தச் சூழலில் இந்தக் களத்துக்கு தென்னாபிரிக்காவை இழுத்து வருவதன் மூலம், இலங்கைக்கு எதிராக தென்னாபிரிக்கா வாக்களிப்பதை தடுக்க முடியும்.

ஏனென்றால் அமைதி நல்லிணக்க முயற்சியில் தொடர்புபட்ட நிலையில் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக வாக்களிப்பதற்கு தென்னாபிரிக்கா முன்வராது. அத்துடன் தென்னாபிரிக்காவின் முன்னுதாரணத்தை ஏனைய ஒரு சில ஆபிரிக்க நாடுகளாவது பின்பற்ற முனையலாம்.

எவ்வாறாயினும், அமெரிக்கத் தீர்மானத்துக்கு ஆதரவாக கிடைக்கக் கூடிய ஓரிரண்டு வாக்குகளையாவது இதன்மூலம் தடுக்கலாம் என்று அரசாங்கம் நினைக்கக்கூடும். இருந்தாலும், உடனடியாக- அதாவது அடுத்த மாத இறுதிக்குள் உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பது சாத்தியப்படுமா என்று தெரியவில்லை.

எவ்வாறாயினும் உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பதால் மட்டும் இலங்கையின் பிரச்சினைகள் தீர்ந்துவிடப் போவதில்லை. அது நம்பகத்தன்மை வாய்ந்ததாக- சுதந்திரமானதாக இருக்க வேண்டும் என்பதே முக்கியமானது.

அதனைஉறுதிப்படுத்தும்நிலையில், தென்னாபிரிக்க சிறப்புத் தூதுவரால் பங்களிக்க முடியாது. ஏனென்றால் அதற்கு வெளியில் இருந்து தமது அனுபவங்களின் மூலம் நிபுணத்துவ ஆலோசனை வழங்கும் ஒருவராகவே இருக்கப்போகிறார். இதனால் தென்னாபிரிக்காவின் உதவியுடன் உண்மை நல்லிணக்க ஆணைக் குழு அமைக்கப்பட்டாலும் அதை நம்பகத்தன்மை வாய்ந்ததாக தமிழ்மக்கள் எந்தளவுக்கு ஏற்றுக் கொள்வார்கள்- சர்வதேச சமூகம் எந்தளவுக்கு அதை அங்கீகரிக்கும் என்பதைப் பொறுத்தே ஜெனிவா அழுத்தங்களின் தன்மை தீர்மானிக்கப்படும்.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அமைதி காக்கும் படையினர் தொடர்பில் ஆராய நடவடிக்கை

(சென்னை)

இந்திய அமைதி காக்கும் படையினரின் நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய அமைதி காக்கும் படையினர் கடமையாற்றிய காலத்தில் பதிவான காணாமற் போதல்கள், கடத்தல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பில் விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்படவுள்ளது. 1987 ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டு வரையில் இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கையில் கடமையாற்றி வந்தனர்.

இந்த காலப்பகுதியில் கடத்தல்கள், காணாமற்போதல்கள் இடம்பெற்றுள்ளதாக மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்திய அமைதி காக்கும் படையினர் கடமையாற்றிய காலத்தில் யாழ்ப்பாணத்தில் 3 வைத்தியர்கள் உள்ளிட்ட 50 பேரும், வல்வெட்டித்துறையில் 60 சிவிலியன்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

காணாமற்போதல்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் ஆணைக்குழு 1990 ஆம் ஆண்டில் பதிவான காணாமற் போதல்கள் தொடர்பில் விசாரணை நடத்தவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்திய அமைதி காக்கும் படையினரும் மிலேச்சத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இந்திய அமைதி காக்கும் படையினரும் மிலேச்சத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் அமிர்தலிங்கத்தின் மகன் பகீரதன் அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் போன்றே இந்திய அமைதி காக்கும் படையினரும் குற்றச் செயல்களில் ஈடுபட்டனர். ஆயுத குழுக்களுக்கு இடையிலான மோதல்கள் காரணமாகவும் ஒருவரை ஒருவர் கொலை செய்து கொண்டனர்.

ஆயுத போராட்டத்துடன் தொடர்புடைய சகல தரப்பினரும் மனித வுரிமை மீறல்களில் ஈடுபட்டனர்.

ஜெனீவா ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிரான பொருளாதார தடை விதிக்கப்பட்டால் அதன் பாதிப்பை மக்களே எதிர்நோக்க நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



. மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகம் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினரின் ஏற்பாட்டில் சுவிஸ் பபிக் கோன் தமிழர் ஒன்றியத்தின் அனுசரணையில் மாணவர்களுக்கான கற்றல் ஊக்குவிப்புகள் வழங் கப்பட்டு வருகின்றன. இதன் ஒருஅங்கமாக கட்டுடை சைவ வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களில் தெரிவுசெய்யப்பட்ட ஒரு தொகுதியினருக்கு பாதணிகள் பாடசாலையில் வைத்து வழங்கப்பட்ட போது.. (படம்: மானிப்பாய் செய்தியாளர்)

# போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்

## சம்பந்தன் தெரிவிப்பு

இலங்கையில் போருக்கு பின்னர் உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த, போர்க்குற்றவாளிகள் கட்டாயம் தண்டிக்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அரசாங்கம் சகல சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய இறுதியான அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் குறிப்பிட்டார்.

அந்த தீர்வானது நல்லிணக்கத்தையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும். அத்துடன் போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் உறுதியளிக்கப்பட வேண்டும்.

சர்வதேச சமூகத்தின் அழுத்தங்கள் காரணமாகவே அரசாங்கம், தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்து அந்நாட்டின் உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் தென்னாபிரிக்கா, தனது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கு யோசனை முன்வைத்திருந்தது. எனினும் இலங்கை அரசாங்கம் அதனை நிராகரித்தது.

எவ்வாறாயினும் வெளியில் இருந்து வரும் அழுத்தங்கள் காரணமாக அந்த யோசனை குறித்து கவனம் செலுத்த அரசாங்கம் தற்போது தீர்மானித்துள்ளது.

அரசாங்கம் நீடித்த சமாதானத்தை உறுதிப்படுத்த முழுமையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதை உறுதிப்படுத்துவதுடன், போர் தொடர்பிலான விடயங்களிலும் பொறுப்புக் கூறும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதும் அவசியம் என்றும் சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## நீராடச் சென்றவர் நீரில் மூழ்கினார்

வத்தளை பிரித்தி புர கடலில் நீராடச் சென்ற இருவர் நீரில் முழ்கியுள்ளனர். இச்சம்பவத்தில் வத்தளை பகுதியில் வசித்த 20 வயதான யுவதியொருவரும் 13 வயதுடைய சிறுவனுமே காணாமற் போயுள்ளனர்.

கடந்த 23 ஆம் திகதி இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

காணாமற்போனவர்கள் இருவரும், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் எனவும் அவர்களைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

# புலிகளின் கோரிக்கையை தென்னாபிரிக்கா நிராகரிப்பு

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தை நிறுவுவதற்கு தென்னாபிரிக்க அரசாங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு மறுப்பு தெரிவித்ததாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் தென்னாபிரிக்காவுககான விஜயத்தை மேற்கொண்டிருந்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கததை தென்னாபிரிக்காவில் நிறுவுவதற்கு, உருத்திரகுமாரன் முன்னதாக தென்னாபிரிக்காவிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆனால் இதனை தென்னாபிரிக்கா ஏற்க மறுத்திருந்ததாக, தம்மிடம் குறிப்பிட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனால், ஆயுதங்களை கொண்டு பெறமுடியாமற் போன தமிழீழத்தை, புலம்பெயர்ந்தோரின் துணையுடன் வெளிநாடுகளில் பெற்றுக் கொள்வதற்கு உருத்திரகுமாரன் முயற்சிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

# நாட்டு மக்கள் தமது வாக்குகளை பயன்படுத்தத் தவறக்கூடாது

## ஜே.வி.பி. தெரிவிப்பு

நாட்டில் எதனை செய்ய வேண்டுமானாலும் மக்கள் தமது வாக்குகளை பயன்படுத்த வேண்டும் என ஜே.வி.பியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்யவும், அரசாங்கத்தை அமைக்கவும் நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவுசெய்யவும் மக்களின் வாக்குகள் தேவைப்படுகிறது.

மக்களின் வாக்குகளால் ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் வீட்டுககு அனுப்ப முடியும். இதனால் மக்கள் வாக்களிப்பதை தவிர்க்கக் கூடாது.

பலர் வாக்களிக்க கூடாது என எணணுகின்றனர். ஆனால் வாக்கு என்ற ஜனநாயக உரிமையை மக்கள் பயன்படுத்த வேண்டும்.

கடந்த பொதுத் தேர்தலிலும் மாகாண சபைத் தேர்தல்களிலும் அரசாங்கத்திற்கு வாக்களித்த மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

மாகாண சபைகள் மூலம் தமது தேவைகளை நிறைவேற்றி கொள்ளலாம் என எண்ணிய மக்கள் அரசாங்கத்திற்கு வாக்களித்தனர். அந்த நிறுவனங்கள் அதனை நிறைவேற்றாததால் மக்கள் வெறுப்படைந்துள்ளனர்.

தொழில் வாய்ப்பை பெறவும் தேர்தல் காலத்தில் மண்வெட்டி, தீப்பெட்டிகளுக்காக மக்கள் தமது வாக்குகளை வழங்கக்கூடாது.

மேல் மற்றும் தென் மாகாணங்களின் பதவிக்காலம் எதிர்வரும ஒக்டோபர் மாதமே முடிவடைகிறது.

ஆனால் மாகாண சபைகளை கலைத்து அரசாங்கம் பலவந்தமாக தேர்தலை நடத்துகிறது.

1994 ஆம் ஆண்டு முதல் 20 வருடங்களாக அரசாங்கத்தின் கீழ் இருந்து வந்த மாகாண சபைகளினால் மக்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை என ரில்வின் சில்வா மேலும் கூறினார். (அ-2)

# ராஜீவ் கொலையின் குற்றவாளிகள் யார்?

## வைகோவிடம் கேட்கிறார் ஞானதேசிகன்

ராஜீவ் கொலை கைதிகள் 7 பேரையும் குற்றவாளிகள் இல்லை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு கூறவில்லை என தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைக் கைதிகளை விடுதலை செய்யக்கூடாது என்பதை வலியுறுத்தி வள்ளுவர் கோட்டத்தில் காங்கிரஸ் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்து வைத்து பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

ராஜீவ் கொலை கைதிகளுக்காக குரல் கொடுக்கும் சில தலைவர்களை கேட்கிறேன், இவர்கள் கொலையாளிகள் இல்லை என்றால் உண்மையான குற்றவாளிகள் உங்களுக்கு தெரிந்து இருக்கும் அல்லவா? அவர்களைப் பற்றி மக்கள் மத்தியில் பகிரங்கமாக சொல்லுங்கள். பாக்கியநாதன், பத்மா, நளினி ஆகியோர் ராயப்பேட்டையில் இருந்தார்கள். பேரறிவாளனும், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்தான்.

ஆனால், தமிழ்நாட்டுக்கு எந்த சம்பந்தமும் இல்லாத சாந்தன், முருகன் உள்ளிட்டோருக்கும், ராஜீவ் கொலைக்கும் சம்பந்தம் இல்லை என்கிறீர்களே, அப்படியானால் ஏற்கனவே இவர்களைப் பற்றி வைகோ அறிந்து வைத்து இருக்கிறாரா?

பல நாடுகளில் பல தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அந்த நாடுகளில் எல்லாம் கொலையாளிகளுக்கு ஆதரவாக யாரும் குரல் கொடுப்பது இல்லை. ஆனால் கொலையாளிகளுக்காக கண்ணீர் சிந்துகிற அவல நிலையை இங்கு தான் பார்க்க முடிகிறது.

கொலையாளிகள் 7 பேரையும் விடுதலை செய்ய தமிழக அரசு எடுத்த முடிவை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே, தமிழக அரசு உச்ச நீதிமன்றம் முடிவு எடுக்கும் முன்பே தனது முடிவை தயவு செய்து மறு பரிசீலனை செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் அனைத்து தரப்பு மக்களின் அன்பையும் நீங்கள் பெறுவீர்கள் என தெரிவி த்துள்ளார். (அ-2)

## பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடத் தடை

அமரபுர நிக்காயவைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அமரபுர நிக்காயவைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் அனுமதியின்றி அரசியலில் அல்லது தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாதென்று நேற்று முன்தினம் பலப்பிட்டியில் நடைபெற்ற சங்க சம்மேளனக்கூட்டத்தில் தீர்மானிககப்பட்டுள்ளது.

இதனபடி, அரசியல் நடவடிக்கைகள் பொலிஸாருடன் மோதிக் கொள்ளல், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுதல் போன்றன தடை செய்யப்பட்டுள்ளன.

ஏனைய நிக்காயக்களைச் சேர்ந்த பௌத்த பிக்குகளுக்கு இந்த தடை உத்தரவு பொருந்தாது எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிடிவாதம் எங்களுடன் பிறந்தது; பிரச்சினைகள் பிசின் போன்றது!

3,12,21,30 போன்ற திகதிகளில் பிறந்தவர்கள் இந்த எண்ணின் ஆதிக்கத்தின் கீழ் வருகிறார்கள். பெயர் எண்ணில் 3 ஆம் எண் இருந்தால் கூட அதே பலன்கள் தான் இவர்களுக்கும்.

அமைதியான சுபாவம் கொண்ட இவர்கள் கொஞ்சம் கர்வம் பிடித்தவர்களாக இருப்பார்கள். யாராவது வாய் தவறி தப்பாக ஏதாவது பேசிவிட்டால் போதும் உடனே இவர்களது முகம் கருங்கிவிடும். முகத்தில் இருந்த சிரிப்பு மூன்று மைல்களுக்கு அப்பால் போய் முகாமிட்டு விடும். இந்த எண்காரர்கள் அடுத்தவர்களை பாராட்டி அதிகம் பேசமாட்டார்கள்.

இவர்கள் அடுத்தவர்களின் நம்பிக்கைக்கு உரியவர்களாக நடந்து கொள்வதால் இவர்களோடு இணைந்து தொழில் புரிவதற்கு பலரும் மகிழ்ச்சியோடு முன்வருவார்கள்.

இவர்களிடத்தில் பொறாமைக் குணம். குறிப்பாக பெண்களிடத்தில் கொஞ்சம் அதிகமாகவே இருக்கும்.

தங்களது கடமைகளை நிறைவேற்றுவதில் மிகுந்த அக்கறை காட்டுவதால் நம்பிக்கையும் பொறுப்பும் வாய்ந்த பதவி இவர்களைத் தேடி வரும்.

காதல் விவகாரங்களில் இவர்களின் அணுகுமுறை மிகவும் வித்தியாசமாகவே இருக்கும். இவர்களில் சிலர் காதலுக்காக உயிரை விடவும் தயாராகவே இருப்பார்கள். தங்களது காதல் நிறைவேறும் வரை காத்திருப்பார்கள். இதனால் அநேகமானவர்கள் தாங்கள் காதலித்தவர்களையே திருமணம் செய்து கொள்வதுண்டு. ஆனாலும் இவர்களது கல்யாணம் பெரும்பாலும் கலாட்டா கல்யாணமாகவே முடியும். காதலில் வெற்றி பெறுவதற்காக இவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராகவே இருப்பார்கள்.

3 ஆம் எண்காரர்கள் பொதுவாகவே அமைதியான தோற்றத் தைக் கொண்டவர்களாகவே இருப் பார்கள். எல்லோரிடமும் அன்பாகவே பேசுவார்கள். ஆனால் கோபம் வந்துவிட்டால் அப்பப்பா! குறிப்பாக பெண்கள் ருத்ர தாண்டவமே ஆடிவிடுவார்கள். திருமணமான இந்த எண்காரப் பெண்கள் தங்கள் கணவனை தங்களது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளவே அதிகம் விரும்புவார்கள்.

இதனால் தாம்பத்திய வாழ்வில் சில சமயம் பிரச்சினைகள் ஏற்படலாம். இந்த எண்காரர்கள் 7 ஆம், 8 ஆம் எண்காரர்களை கண்டிப்பாக திருமணம் செய்து கொள்ளவே கூடாது. அப்படி செய்து கொள்வதன் மூலம் பல பிரச்சினைகளுக்கு இவர்கள் முகங்கொடுக்க வேண்டியிருக்கும். சில சமயம் விவாகரத்துகள் கூட நடக்கலாம். அல்லது குடும்பத்தில் பொருளாதார பிரச்சினைகள் ஏற்படலாம். ஏற்கனவே இந்த எண்காரர்களைத் திருமணம் செய்து கொண்டவர்கள் தங்களது பிறந்த திகதிக்கு ஏற்ப நட்பான எண்களில் பெயரை வைத்துக் கொண்டு எண் ஜோதிட அட்டவணைப்படி உச்சரித்து எழுதி வந்தால் நல்ல பலனைப் பெறலாம்.

இந்த எண் காரர்களில் சிலர் குறுக்கு வழியில் போய் மற்றவர்களை எப்படி ஏமாற்றுவது என்றகுள்ள நரித் தந்திரம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். அதே போல் எவர் என்ன சொன்னாலும் அந்த விமர்சனங்களைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், வெட்கப்படாமல் அதே தவறை மீண்டும் செய்வார்கள்.

பொதுவாக இந்த எண்காரர்கள் பண்பாகவும் அன்பாகவும் பேசுவதால் பெரிய மனிதர்கள் பலரும் இவர்களுக்கு நண்பர்களாக இருப்பார்கள். அதே போல் பெரிய பதவிகளில் இருப்பவர்களிடம் இவர்களுக்கு அதிக செல்வாக்கு இருக்கும். பல சமயங்களில் அவர்களின் உதவிகளும் இவர்களுக்குக் கிடைக்கும். இவர்களின் கையில் பணம் இருந்தால் மகிழ்ச்சியாக இருப்பார்கள். இல்லையென்றால் மனம் சோர்ந்து போய் அமைதியை இழந்து மனம் தளர்ந்து விடுவார்கள். பிடிவாதத்தின் பிறப்பிடம் எதுவென்று கேட்டால் இந்த 3 ஆம் எண் காரர்களைப் பிடித்துக் காட்டிவிடலாம். அந்த அளவிற்கு பிடிவாதம் நிறைந்தவர்களாக இருப்பார்கள். குறிப்பாக காதல் விவகாரங்களில் இந்தக் காதல் விடயத்தில் ஆண், பெண் என்ற வித்தியாசமே இல்லாமல் கண்மூடித்தனமான காதலில் ஈடுபடுவார்கள். ஒரு சிலர் திருமணத்திற்கு முன்பே இந்த இன்பத்தை அனுபவித்து விடுவார்கள். இதனால் இவர்களில் அநேகமானவர்கள் திருமணத்திற்கு முன்பே அந்த புனிதத் தன்மையை இழந்திருப்பார்கள். தாய்க்குலமே தயவுசெய்து என்னைத் திட்டாதீர்கள்.

அடுத்தவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இவர்களிடம்நிறையவே இருக்கும். ஆனால் ஒருசிலர் அதில் தங்களுக்கும் ஒரு பங்கு கிடைக்க வேண்டும் என்று விரும்புவார்கள். 21 ஆம், 12 ஆம் திகதிகளில் பிறந்தவர்களிடம் இந்த எண்ணம் இருப்பதை நாம் அவதானிக்கலாம்.

எந்தவொரு விடயத்தையும் மனப்பாடம் செய்வது என்பது இவர்களுக்கு பெரிய கஷ்டமாகவே இருக்கும். எதுவுமே இவர்களுக்கு எளிதில் மனப்பாடம் ஆகாது. அதே நேரம் ஒருமுறை மனப்பாடம் ஆகிவிட்டால் எளிதில் மறக்கவே மாட்டார்கள். இந்த எண்காரர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள். ஆனாலும் பிறந்த மாத எண்ணில் 2 ஆம், 8ஆம், 7 ஆம் எண்கள் இருந்தால் 15 வயதிற்குப் பின்னர் கல்வியில் தடை ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

இந்த எண்காரர்கள் எதையுமே மூடிமறைத்துப் பேசமாட்டார்கள். அதேபோல் மூடி மறைத்துப் பேசுகிறவர்களைக் கண்டாலும் இவர்களுக்குப் பிடிக்காது. அதனால் இவர்களிடம் பழகுகிறவர்கள் தங்களுடைய பரம இரகசியங்களை கூட இவர்களிடம் சொல்லி விடுவார்கள். இவர்களுடன் பழகுவது என்பது எவருக்கும்மிக எளிதாகவே இருக்கும்.

இவர்களைப் பார்ப்பதற்கு ஆரோக்கியமானவர்களைப் போல் தோற்றமளித்தாலும் சளித்தொல்லை, மூட்டு வலி போன்றவற்றால் அவஸ்தைப்படுகிறவர்களாக இருப்பார்கள்.

நிர்வாக திறமையில் இந்த எண்காரர்கள் மிகவும் கெட்டிக்காரர்களாக இருப்பார்கள். அதே போல் இவர்கள் எங்கே இருந்தாலும் தங்களைத் தனியாக அடையாளம் காட்டிக் கொள்வதில் திறமை வாய்ந்தவர்களாக இருப்பார்கள். அதே போல் இவர்கள் இருக்கும் இடத்தில் ஒழுக்கமும் கட்டுப்பாடும் மிகுதியாகவே இருக்கும்.

இந்த எண்காரர்கள் சிலர் திருமணத்திற்கு முன்பு என்னதான் ஆட்டம் போட்டாலும் திருமணத்திற்குப் பின்பு துணைவியிடம் பெட்டிப் பாம்பாக அடங்கிப் போய்விடுவார் கள்.

இவர்கள் ஒரு காரியத்தில் ஈடுபட்டால் அதில் இலாபத்தை பெற வேண்டுமென்ற நோக்கமே மேலோங்கி இருக்கும். வந்தால் வரவு சென்றால் செலவு என்ற விளையாட்டெல்லாம் இவர்களிடம் இருக்காது.

பணம்தான் இந்த உலகத்தில் எல்லாம்என்றகொள்கையைகொண்டவர்கள். இவர்கள் பணத்தைக் கொண்டு தான் எல்லாவற்றையுமே மதிப்பிடுவார்கள். வாழ்க்கையில் உள்ள சுகபோகங்களை எல்லாம் அனுபவிக்க வேண்டுமென்ற ஆசையைக் கொண்டவர்களாக இருந்தாலும் அதற்காக தங்களிடம் உள்ள பணத்தையெல்லாம் கண்மூடித்தனமாக செலவு செய்ய மாட்டார்கள்.

கவர்ச்சிகரமாக வாழவே இவர்கள் மிகவும் ஆசைப்படுவார்கள். அதே போல் சில ஆண்கள் தாடி, மீசை வளர்ப்பதில் ஆர்வம் காட்டுவார்கள். கடினமான போகக்குடையவர் களைப் போல் இவர்கள் தோற்றமளித்தாலும் உண்மையிலேயே இவர்கள் இளகிய மனம் படைத்தவர்களாகத்தான் இருப்பார்கள். அடக்கம், பொறுமை, பெரியோர்களுக்கு கீழ்ப்படிதல் போன்ற குணங்கள் இவர்களிடம் நிறைய்வே காணப்படும்.

இவர்களில் சிலருக்கு குரு ஆதிக்கம் குறைந்திருக்கும். அப்படி இருந்தால் வாழ்வில் இவர்கள் சிறிது மந்தமாகவே இருப்பார்கள். சூதாடிகளாகவும் ஆடம்பரப் பிரியர்களாகவும் அளவுக்கு மிஞ்சிய செலவு செய்து கடனாளிகளாகவும் இருப்பார்கள்.

குரு ஆதிக்கம் விபரீதமாக இருந்தால் அதிகார வெறியை ஏற்படுத்திவிடும். இதனால் அறிவு மிகுந்திருந்தாலும் கருணை குறைவும் மதிப்பு குறைவும் ஏற்படும்.

இவர்களுக்கு தோல் சம்பந்தமான வியாதிகள் வருவதற்கு வாய்ப்புக்கள் அதிகம். இதனால் இவர்கள் நெல்லிக்கனியை சாப்பிட்டு வருவது நன்மை பயக்கும்.

விதிஎண்ணில் 7 ஆம்எண்ணோ, 8 ஆம் எண்ணோ இருந்தால் வாழ்க்கையில் மோசமான நிலையில் இருப்பார்கள். சிலசமயம் தற்கொலை செய்து கொள்ளக்கூடிய அளவிற்கு பிரச்சினைகளால் பின்னப்பட்டிருப்பார்கள்.

பெயர் எண்ணை அதிர்ஷ்டமான எண்ணுக்கு அழைத்து கொள்வதன் மூலம் சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம்.

# நல்ல பக்கத்தை புறந்தள்ளிவிட்டு குறைபாடுகளை தூக்கிப் பிடிக்கின்றனர்

## ஜனாதிபதி மஹிந்த கவலை



நட்பு நாடுகளுடனான எமது உறவுகளை சீர்குலைப்பதற்காக எதிர்க்கட்சியினர் மேற்கொள்ளும் பொய்ப்பிரசாரத்தையும் விமர்சனங்களையும் அந்த நாடுகள் நிராகரிக்க வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கேட்டுக்கொண்டார்.

நுரைச்சோலையில் பாலாவி-கற்பிட்டிக்கான வீதியை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்து உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தமதுரையில் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டு மக்களுக்கு செய்வதற்கும் சொல்வதற்கும் எதுவுமில்லாமல் வங்குரோத்து நிலையிலுள்ளோர் நட்பு நாடுகளுடன் விரோதத்தை ஏற்படுத்தும் வகையில் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். நட்பு நாடுகள் இத்தகைய செயற்பாடுகளை நிராகரிக்க வேண்டும்.

நான் பொதுவாக விவசாயிகளிடம் கேட்டுக்கொள்வது இரசாயன உரம் பாவிப்பதைக் கட்டுப்படுத்துங்கள் என்பதே. உலகில் நம் நாட்டில்தான் அதிகளவு இரசாயன உரம் பிரயோகிக்கப்படுவதாக சர்வதேச அறிக்கைகள் கூறுகின்றன. ஆரோக்கிய சமூகத்தை உருவாக்குவதைக் கருத்திற் கொண்டு நமது விவசாயிகள் அவதானமாக செயற்படுவது அவசியம்.

அவ்வாறு உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளுக்கும் அவற்றை ஏற்றுமதி செய்து இப்பகுதி மக்கள் நம்மை மென் மேலும் பொருளாதாரத்தில் முன்னேற்றிக்கொள்ள வேண்டும் என்பதே எமது விருப்பம்.

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டில் அனைத்துப் பிரதேசங்களிலும் தற்போது சுதந்திரமும் தொழில் செய்வதற்கான சிறந்த சூழலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடந்த காலங்களைப் போலன்றி குடும்பத்தோடு நிம்மதியாக எப்பகுதியிலும் எவரும் வாழ முடியும்.

எதிர்வரும் காலங்களில் மக்களின் ஆதரவு எமக்குக் கிடைப்பது உறுதி. இன, மத, குல, கட்சி பேதமின்றி அனைவருக்கும் அனைத்து உரிமைகள் சலுகைகளை சமமாக வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். அதனைத் தொடர்ந்தும் அரசாங்கம் முன்னெடுக்கும்.

அபிவிருத்தியில் நாம் ஒருபோதும் பாரபட்சம் காட்டுவதில்லை. எத்தகைய சேவைகளை நாட்டுக்கும் மக்களுக்கும் செய்கின்றபோதும் சில சக்திகள் எல்லாக் காலங்களிலும் அதனைக் குற்றம சாட்டுவதிலும் விமர்சிப்பதிலுமே குறியாகவுள்ளன.

எமது செயற்பாடுகளின் நல்ல பக்கத்தை புறந்தள்ளிவிட்டு குறைபாடுகளையே தூக்கிப் பிடித்து வருகின்றனர். எதிர்க்கட்சிக்குத் தற்போது செல்வதற்கும் சொல்வதற்கும் எதுவுமில்லாததால் இதனை தொழிலாகவே செய்கின்றனர்.

எமது நட்பு நாடுகளுடன் எம்மை விரோதிகளாக்கும் முயற்சியிலேயே இவர்கள் ஈடுபடுகின்றனர். இவர்களது பொய் பிரசாரங்களினால் எம்முடன் அத்தகைய நாடுகள் விரோதமாக செயற்பட முனைகின்றன.

எமது நட்பு நாடுகளிடம் நான் கேட்டுக்கொள்வதெல்லாம் உண்மை நிலையை அறிந்து கொள்ள வேணடும் என்பதுடன் அத்தகைய பொய்ப் பிரசாரங்கள் விமர்சனங்களை நிராகரிக்க வேண்டும் என்பதே.

நாட்டுக்கும் மக்களுக்கும் கிடைத்துள்ள நன்மைகளை மறைத்து விட்டு நாட்டை மோசமான மதிப்பீட்டுக்கு உள்ளாக்கும் செயல்களை நிறுத்த வேண்டும் எனவும் எதிர்க்கட்சியினரிடம் கேட்டுக் கொள்கிறேன்.

மக்கள் இவற்றை நம்பக் கூடாது. நாம் எப்போதும் உங்களுடன் உள்ளோம். பொய்ப்பிரசாரங்களை நம்ப வேண்டாம். இதுநமது தாய்நாடு. இந்த நாட்டை வளமானதாகக் கட்டியெழுப்புவதில் நாம் சகோதரர்களாக இணைந்து செயற்படுவோம்.

இஸ்லாம் கூறுவது போல் சமாதானம், சகவாழ்வு சகோதரத்துவத்துடன் நாம் நாட்டைக் கட்டியெழுப்புவோம எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தை பாதுகாக்க நான் தயாரில்லை-சஜித் எம்.பி.

(கொழும்பு)

யுத்த வீரர்களை பாதுகாப்பதற்கு தயார் என்ற போதிலும் அரசாங்கத்தை பாதுகாக்கத் தயாரில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து நாட்டை மீட்டெடுத்த படைவீரர்களை பாதுகாப்பதற்காக எதனையும் செய்யத் தயார்.

படைவீரர்களுக்கு எதிராக சர்வதேச சூழ்ச்சித் திட்டங்கள் தீட்டப்பட்டால் அதனை முறியடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எனினும் ஊழல் மோசடிகளில் ஈடுபடும் இந்த அரசாங்கத்திற்கு ஒட்சிசன் வழங்கத் தயாரில்லை.


ஹெரோயின் போதைப் பொருள் கடத்தல்களில் ஈடுபடுவோரை பாதுகாக்க வேண்டிய அவசியம் கிடையாது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை அமர்வுகளில் நிறைவேற்றப்படவுள்ள தீர்மானத்தை சந்தைப்படுத்தி அரசாங்கம் தேர்தலை வெற்றிகொள்ள முயற்சிக்கின்றது.

ஐக்கிய நாடுகள் காரியாலயத்திற்கு எதிரில் சாகும் வரையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய அமைச்சர் விமல் வீரவன்ச, இன்று அனைத்து கட்சிகளும் இணைந்து அமெரிக்காவின் தீர்மானத்திற்கு எதிராக கடிதம் எழுதுமாறு கோருவது நகைப்பிற்குரியது என்றார்.

வங்குரோத்து அடைந்த ஆளும் கட்சி அமைச்சர்கள் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை அமர்வுகள் தொடர்பில் பிழையான பிரசாரங்களை செய்து மக்களை ஏமாற்ற முயற்சிப்பதாக சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி குமாரசாமி சிவபாக்கியம்

காரைநகர் இடைப்பிட்டியைச் சேர்ந்த குமாரசாமி சிவபாக்கியம் கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (இந்தியா) புட்டபர்த்தியில் நடைபெறும்.



### மாரிமுத்து பொன்னையா

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து பொன்னையா கடந்த 22 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.



### இராசையா ஞானசுந்தரம்

வடமராட்சி கிழக்கு, உடுத்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டன் Walthamstow ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா ஞானசுந்தரம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.



### முருகன் இரத்தினம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்) கரவெட்டி கிழக்கு கரவெட்டியைப்பிறப்பிடமாகவும்மல்லாவி, சுதந்திரபுரம், இந்தியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் இரத்தினம் கடந்த 20 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று கரவெட்டி கிழக்கு சோனப்பு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

# காணாமற் போனோர் தொடர்பில் அக்கறையுடன் செயற்படுங்கள்

## ஜேர்மன் தூதுவரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சர்வதேசம் இலங்கை அரசினை தண்டிப்பதற்கான கால எல்லையை நீடித்துச் செல்வதனால் ஒவ்வொரு நாளும் தமிழர்களால் புதிய புதிய பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இம் முறையாவது சர்வதேசம் இலங்கை மீதான பிடியினை இறுக்க வேண்டும்.

காணாமற் போனோர் விடயத்தில் அனைத்துலகமும் அக்கறையுடன் செயற்படல் வேண்டுமென வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் மற்றும் வலி.வடக்கு மீள்குடியேற்றத் தலைவரும் பிரதேச சபையின் உபதலைவருமான எஸ்.சஜீவன் ஆகியோர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வருகை தந்த ஜேர்மன் நாட்டுத் தூதுவர் வைத்திய கலாநிதி ஜர்கன் மோஹோட்டிடம் கூறியுள்ளனர்.

ஜேர்மன் நாட்டுத்தூதுவரிடம் கூறியமை தொடர்பில் சஜீவன் தெரிவிக்கையில்,

இம்முறை ஜெனீவாவில் நடைபெறவுள்ள மனிதவுரிமை கூட்டத்தொடரில் இலங்கை அரசின் மீது சர்வதேசம் கடும் அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும்.

இலங்கை அரசை தண்டிப்பதற்கான காலத்தை சர்வதேசம் நீடித்துச் செல்வதனால் இங்குள்ள தமிழர்கள் ஒவ்வொரு நாளும் புதிய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

வடக்கில் உள்ள பல இடங்களில் பொதுமக்களின் காணிகளை இராணுவம் அபகரித்து வைத்துள்ளது. அம்மக்களை மீள்குடியமர விடாது தாம் நிலை கொண்டுள்ளனர்.

காணாமற் போனோர் விடயத்தில் அரசு எவ்வித நடவடிக்கையும் எடுப்பதாக தெரியவில்லை.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை செய்வதற்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் விசாரணையும் சர்வதேசத்தை ஏமாற்றும் ஒரு நாடகமேயாகும். தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ் வதற்கு சர்வதேசம் தான் வழி செய்ய வேண்டும்.

எமது காணிகளை பிடித்து வைத்துள்ள இராணுவம் எமது காணிகளை விட்டு வெளியேறுவதற்கு சர்வதேசம் வழி செய்ய வேண்டும்.

நடைபெறவுள்ள ஜெனீவா கூட்டத் தொடரிலும் இலங்கை அரசிற்கு சர்வதேசம் கால அவகாசம் வழங்காது தண்டிப்பதற்குரிய நடவடிக்கையெடுக்க வேண்டும் என வலியுறுத்தினோம் என்றார். (அ-4)

## அரச நாடக விழாவுக்கு விண்ணப்பம் கோரல்


(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ள அரச நாடக விழாவினை முன்னிட்டு, சிறுவர் நாடகம், குறு நாடகம் மற்றும் நெடும் நாடகப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ். பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான விண்ணப்பங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 15 ஆம் திகதி வரை யாழ்.பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம் என அவர் அறிவித்துள்ளார்.

இது குறித்த மேலதிக விபரங்களை பெற 021 222 2209 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி பெற்றுக் கொள்ளலாம். (அ-2)

# ஆஸி.ஜீலோங் நகரில் புலிக்கொடி ஏற்றப்பட்டது




அவுஸ்திரேலியாவில் ஜலோங் நகரில் அமைந்துள்ள தொழிற்சங்கக் கட்டடத்தில் நேற்று முன்தினம் புலிக்கொடி ஏற்றப்பட்டது.

விக்ரோறிய மாநிலத்தில் மெல்பேர்ணிலிருந்து 100 கிலோ மீற்றர்கள் தொலைவிலுள்ள ஜீலோங் நகரின் பழமையும் புகழும் வாய்ந்த தொழிற் சங்கக் கட்டடத்திலேயே இக் கொடி ஏற்றப்பட்டுள்ளது.

விக்ரோறிய மாநிலத்தில் கடந்த மூன்றாண்டுகளில் பல இடங்களில் இக் கொடி ஏற்றி வைக்கப்பட்டுள்ளன.

அவ்வகையில் ஜீலோங் நகரத்தின் தொழிற்சங்கக் கட்டடத்தில் ஏற்கனவே இருதடவைகள் கொடி ஏற்றி பறக்கவிடப்பட்டது. நேற்றுமுன் தினம் மூன்றாவது தடவையாக தமிழீழத் தேசியக்கொடி ஏற்றிவைக்கப்பட்டது.

புலிக்கொடி பற்றியும் தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றியும் விளக்கம் கொடுக்கப்பட்ட பின்னர், ஜீலோங் தொழிற்சங்கப் பிரதிநிதி ரிம் குடீன் புலிக் கொடியை ஏற்றினார். இந்நிகழ்வில் தமிழர்களுடன் பிறவின செயற் பாட்டாளர்களும் கலந்துகொண்டனர்.

கொடியேற்றல் நிகழ்வைத் தொடர்ந்து எதிர்வரும் ஐ.நா. மனிதவுரிமை கூட்டத்தொடரில் தமிழீழம் குறித்த பொதுவாக்கெடுப்பை நடத்தும் படியும் இலங்கை அரசாங்கம் மீது நியாயமான, நடுநிலையான விசாரணை நடத்தும்படியும் கோரிக்கைவிடப்பட்டது. தொடர்ந்து சனல்-4 இன் கொலைக்களம் ஆவணப் படம் காண்பிக்கப்பட்டது. (அ-2)

## மகா சிவராத்திரி

புங்குடுதீவு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை மாலை 6 மணி முதல் மகா சிவராத்திரிப் பெருவிழா நடைபெறவுள்ளது.

நான்கு சாமங்களிலும் விஷேட அபிஷேக திரவியங்களிலான அபிஷேக வழிபாடு இடம்பெற்று அதிகாலை 5 மணிக்கு அம்பாள் சமுத்திர தீர்த்தத்தில் தீர்த்தமாடும் திருக்காட்சி இடம்பெறும்.

இவ் சிவராத்திரியினையொட்டி சைவப் பெரு மக்களின் சிவராத்திரி வழிபாடு எனும் தலைப்பில் மதுர கவி காரை எம்.பி.அருளானந்தன் தெய்வீகப் பேருரையொன்றை ஆற்றுவார். (அ-2)

★ ★ ★

உரும்பிராய் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் மகா சிவராத்திரி அபிஷேகப் பெருவிழாவும், சமய அறிவுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் சிவனுக்குரியது சிவராத்திரி எனும் தலைப்பில் மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம் பெறவுள்ளது.

ஆலய அறங்காவலர் சிவத்திரு அருள்வாக்குச் சித்தர் நிர்ணயநாதன் தலைமையில் நடைபெறும். (அ-2)


## காணி/ வீடு விற்பனைக்கு

**கோண்டாவில்** (காணி/ வீடு விற்பனைக்கு)
கோண்டாவில் (வடக்கு) இல்9 பரப்பு 6.94 குளி காணி சகல வசதிகளுடன் கூடிய வீடு (பயன்தரு மரங்களுடன்) விற்பனைக்கு உண்டு. (A/003)

**யாழ்ப்பாணம்** (காணி விற்பனைக்கு)
யாழ்ப்பாணம் 4 ஆம் குறுக்குத் தெருவில் 3 பரப்பு 13 குளி காணி (கிணறு , பயன்தரு மரங்களுடன்) விற்பனைக்கு உண்டு. (A/004)

**கொடிகாமம்** (காணி விற்பனைக்கு)
கொடிகாமம் ஐயனார் கோவில் வீதியில் 14 பரப்பு காணி (தென்னை, மா, பனைகளுடன்) உடன் விற்பனைக்கு. (A/005)

**யாழ்ப்பாணம்** (காணி விற்பனைக்கு)
யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் (பருத்தித்துறை, நாவலர் வீதிக்கு சமீபமாக) 1 பரப்பு 7 குளி காணி உடன் விற்பனைக்கு. (A/006)

**கோப்பாய்** (காணி/ வீடு விற்பனைக்கு)
கோப்பாய் வைத்தியசாலைக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு 2 பரப்பு 16.5 குழி காணியுடன் (தென்னை, மா, பலா, தோடை என பயன் தரு மரங்களுடன்) உடன் விற்பனைக்கு உண்டு. (A/007)

**திருநெல்வேலி** (காணி/ வீடு விற்பனைக்கு)
திருநெல்வேலி மருத்துவ பீடத்திற்கு அண்மையில் 7 பரப்பு காணியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு (40 தென்னை, பனை பயன்தரு மரங்களுடன்) உடன் விற்பனைக்கு உண்டு (A/008)

றியல் எஸ்ரேற் இல. 50, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
(பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்திக்கும் நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கும் இடையில்) எனும் முகவரியில்


TP.No: 021 567 1543

பதிவுக் கட்டணம் ரூபா 1000 /-

அலுவலக நேரம் 8.30 - 12.30,
1.30- 5.00 மணிவரை
வெள்ளிக்கிழமை விடுமுறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு மாற்றீடாகாது !



போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் நட்டஈடு அவர்கள் எதிர்கொண்ட இழப்புகளுக்கு மாற்றீடாக அமையாது என்பதை யாழ்ப்பாணத்தில் வைத்து ஒப்புக்கொண்டார் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் பிரதி அமைச்சர் சந்திரசிறி முத்துக்குமாரன.

இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசிற்கு அமைவாக, வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.மாவட்ட செயலக கேட்போர்





கூடத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### வருத்தம்

தமிழ் மொழியில் என்னால் பேச முடியவில்லை. அதற்கான தகுதியும் என்னிடத்தில் இல்லை. நான் தயார்ப்படுத்தவும் இல்லை. அதற்காக உங்களிடம் நான் மன்னிப்பு கோருவதோடு வருத்தப்பட்டுக்கொள்கின்றேன் என்று கூறியவாறு தனது உரையினை ஆரம்பித்தார்.

### மொழியே காரணம்

இலங்கையில் கடந்த காலத்தில்



இடம்பெற்ற நீண்டகால யுத்தத்திற்கும் இனங்களுக்கிடையில் பிளவு ஏற்படவும் மொழிதான் முக்கிய காரணமாக அமைந்தது. மொழியை அடிப்படையாக கொண்டே இந்த நாட்டில் யுத்தம் இடம்பெற்றது. இதனால் பல பிரச்சினைகள் நமது நாட்டில் ஏற்பட்டுவிட்டது. எனவேதான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மொழிக்கும் சிங்கள மொழிக்கும் சம அந்தஸ்து கொடுக்கும் வகையில் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்.

அதேவேளை மொழிப்பிரச்சினையை தீர்த்து வைக்கும் நோக்குடன் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினை தனியாக உருவாக்கியுள்ளார்.

### குற்றம் சாட்டுவதை விடுங்கள்

கடந்த கால கசப்பான அனுபவங்களுக்கு ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவதை விட வேண்டும்.

ஒருவருக்கு ஒருவர் பகைமை உணர்வினை மறந்து ஒற்றுமையாகவும், அன்புடனும் வாழ பழகிக்கொள்ள வேண்டும்.

அன்பு தான் எல்லாவற்றிலும் உயர்வானது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

நாட்டிலுள்ள சகல இனங்களுக்கிடையிலும் ஒற்றுமையும் சமாதானமும் நல்லிணக்கமும் ஏற்பட வேண்டும்.

### வடக்கு மட்டுமல்ல

கடந்த காலப்போராட்டத்தினால் வடக்கு மக்கள் மட்டும் பாதிக்கப்படவில்லை. நாட்டிலுள்ள சகல பிரதேசங்களைச்சேர்ந்த சகல இன மக்களும் தான் பாதிக்கப்பட்டிருந்தனர்.

சகல பிரதேச மக்களும் அச்சத்துடன் தான் வாழ்ந்தனர். ஆனால் அந்த நிலை தற்போது முற்று முழுதாக மாற்றப்பட்டுள்ளது.

### இணக்கப்பாடு

அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதம் ஏந்தி போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை சேர்ந்த முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்துள்ளார் ஜனாதிபதி.

தமிழ் இளைஞர், யுவதிகளுடன் இணக்கப்பாட்டினை ஏற்படுத்தும் வகையிலும் சமூகத்தில் முன்னாள் போராளிகளை இணைத்து மறுவாழ்வு அளிப்பதிலும் எமது அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

### மாற்றீடாகாது

நீண்ட காலப் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் இவ்வாறான நட்டஈடு அவர்கள் எதிர்கொண்ட இழப்புகளுக்கு மாற்றீடாக அமையாது என்பதை நாம் ஒப்புக்கொள்கின்றோம்.

அதேவேளை ஏற்பட்ட இழப்புகளை நியாயப்படுத்தவும் நாம் விரும்பவில்லை. இருப்பினும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் [illegible] தாரத்தை முன்[illegible]வும் என்று எதிர்பார்க்கின்றோம்.

இதுமட்டுமின்றி வடக்கிற்கு ஒரு மாதிரியும் தெற்கிற்கு ஒரு மாதிரியும் நாம செயற்படுவதில்லை.

### வேகமாக வந்தேன்

இந்த நிகழ்வில் மேலும் உரையாற்றிய பிரதி அமைச்சர், அநுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இரண்டரை மணித்தியாலங்களுக்குள் தான் வந்ததாகவும் வீதிகள் எல்லாம் புனரமைக்கப்பட்டு காப்பெற் போடப்பட்டதே அதற்கு காரணம் என்றும் தெரிவித்த அவர், நான் ஏ-9 வீதியில் வேகமாக வந்ததற்காக நீங்களும் வேகமாக வாகனங்களில் ஓடித்திரிய வேண்டாம் என்றும் அறிவுரை வழங்கினார்.

அதேவேளை நாட்டிலுள்ள சகல இளைஞர்களையும் இணைத்து நலத்திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### சந்திரகுமார் எம்.பி.

போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்கும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவிக்கையில், புனர்வாழ்வு அதிகார சபையினால மேற்கொள்ளப்பட்டுவரும் இந்த நிதியுதவி வழங்கும் நிகழ்வு போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச்சேர்ந்தவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பெரு உதவியாக அமையும். போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவதில் காலதாமதமான போக்கினை இந்த அதிகாரி கொண்டிருந்தபோதும் தற்போது மக்களுக்கு உதவி வழங்க முன்வந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

### 1300 விண்ணப்பங்கள்

நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) முல்லைத்தீவு மாவட்டத்தில் 285 பேருக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. இன்று (நேற்று) யாழ்.மாவட்டத்தில் 200 பேருக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. யாழ்.மாவட்டத்தில் ஆயிரத்து 300 விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டது. அத்தோடு இன்னும் ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை இந்த வருட வரவு செலவுத திட்டத்தில் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவி வழங்க அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 12 ஆயிரம் பேர்

முன்னாள் போராளிகள் 12 ஆயிரம் பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதனை விட புனர்வாழ்வளித்து விடுதலை செய்யப்பட்டவர்களில் 30 வீதமானவர்களுக்கு குறைந்த வட்டியுடன் கடன் நிதியுதவியும் சுய தொழில் கடன் உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன என்றார்.

### சமரசிங்க உரை

புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் ஈ.ஏ.சமரசிங்க இந்த நிகழ்வில் உரையாற்றும் போது, யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் நிலையினை கருத்தில் கொண்டு அரசாங்கத்தினால் கடந்த 2011 ,2012, 2013 ஆம் ஆண்டுகளில் அதிகளவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட அதேவேளை இந்த வருடமும் அதிகளவான நிதி ஒதுக்கீடு செய்யபட்டுள்ளது. போரால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனில் அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளதன் வெளிப்பாடே இந்த நிதிவழங்கும் நிகழ்வு என்றும் அவர் தெரிவித்தார்.

### பரபரப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை இந்த நிகழ்வுக்கு அழைக்காதது ஏன் என்று கேள்வி எழுப்பிய முதியவரினால் நேற்றைய நிகழ்வில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் மற்றும் மாகாண சபையின் உறுப்பினர்களையும் ஏன் இந்த நிகழ்வுக்கு அழைக்கவில்லையெனவும் அந்த முதியவர் கேள்வியெழுப்பியிருந்தார்.

இதேவேளை நட்டஈடு வழங்குவதில் தன்னை புறக்கணித்து விட்டனர அரச அதிகாரிகள் என்று பிரதி அமைச்சரிடம் காரைநகரிலிருந்து வந்த முதியவர் ஒருவர் போட்டுக் கொடுத்ததோடு பிரதி அமைச்சர், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர், அரச அதிபர் ஆகியோரிடம் தனது நிலைப்பாட்டினையும் குறித்த முதியவர் வெளிப்படுத்தியிருந்தார்.

### நடைமுறைக்கு

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத்தொடர் எதிர்வரும் மார்ச்மாதம் ஜெனீவாவில் இடம் பெறவுள்ள நிலையில் கடந்த இரண்டு வருடங்களாக அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணைகளில் வலியுறுத்தப்பட்ட அதாவது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப படுத்துமாறு வலியுறுத்தப்பட்டதை கருத்தில் கொண்டு ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைவாக நாட்டில் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்க அரசாங்கம் புனர்வாழ்வு அதிகார சபையின் ஊடாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைவாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசேட ஆணைக்குழுவினர் வடக்கில் காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**எஸ்.ஆர்.கரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தட்டிக் கேட்க ஆள் இல்லாவிட்டால்
> தம்பி சண்டப்பிரசண்டன்.
> *~ தமிழ்ப் பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கிராமங்கள் தோறும் எழுச்சி இயக்கம் ஆரம்பிக்க வேண்டும்

இயக்கம் என்ற சொல்லை உச்சரிப்பதற்கே பயம்கொள்ளும் காலம் இது. அந்தளவிற்கு இயக்கம் என்ற சொற்பதம் இந்த நாட்டையே கலக்கியது.

ஒன்று இரண்டு அல்ல; எத்தனையோ இயக்கங்கள் இந்த மண்ணில் தோன்றி மறைந்தன.

சுருங்கக்கூறின் இயக்கர் காலத்தை விட இயக்க காலம் மிகவும் கடினமான காலமாக இருந்தது.

அதேநேரம் இயக்கங்களின் தோன்றல்கள் உள்ளூர் சண்டித்தனங்களுக்கும் கோஷ்டி சண்டியர்களுக்கும் இந்த மண்ணில் இருந்து பிரிதல் விடை கொடுத்தது.

இப்போது எல்லாம் போயகல, மீண்டும் பழைய சண்டித்தன கலாசாரங்களும் கோஷ்டி அமைப்புகளும் தலையெடுக்கலாயின.

இதற்கு மேலாக போதைவஸ்துப் பாவனை எங்கள் இளம் சமூகத்துக்கு பெரும் சவாலாக உள்ளது. அதிலும் குறிப்பாக பாடசாலை மாணவர்களிடையே போதைவஸ்து பயன்பாடு என்பது எங்கள் இனத்தின் மூலவேரை அறுக்கும் கொடுஞ்செயலாகும். இது ஒரு புறம் இருக்க,

கிராமங்களில் போதைப் பாவனையை ஊக்குவிக்கும் முயற்சிகள் தீவிரமாக நடந்து வருகின்றது என்பதை இவ்விடத்தில் சொல்லித்தானாக வேண்டும்.

கிராமத்து இளைஞர்களில் சிலர் சரியான வழிப்படுத்தலும் தொழில் முயற்சியும் இல்லாத நிலையில், போதைக்கு அடிமையாகும் பேராபத்துக்கு மெல்லமெல்ல நெருங்குகின்றனர்.

எனவே இத்தகைய கொடுமைகளில் இருந்து எங்கள் இளம் சமூகத்தைப் பாதுகாக்க வேண்டும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பதும் எங்களின் உரிமை விவகாரம் என்பதும் ஒரு பக்கத்தில் நடந்து கொண்டிருக்க, மறுபக்கத்தில் எங்கள் இனத்தின் எழுச்சிக்கும் பொருளாதார உயர்வுக்கும் அபிவிருத்திக் குறிகாட்டிகளின் மேன்மைக்கும் பண்பாட்டு விழுமியங்களின் இருப்புக்குமான பாடுபடுதல் என்பது நடந்தாகவேண்டும்.

எங்களின் பிரச்சினைக்கான தீர்வு என்பது என்றோ ஒருநாள் எங்கள் கைகளில் கிடைத்தே ஆகும் என்பதில் மாற்றுக் கருத்துக்கிடமில்லை.

அதேசமயம் அவ்வாறான உரிமை எங்கள் கைகளில் கிடைக்கும் போது நாங்கள் எங்கள் பண்பாட்டை, ஒழுக்கத்தை, இன உணர்வை, மண்பற்றை இழந்தவர்களாக மாறி இருப்போமாயின் பெற்ற உரிமையால் எந்தப் பயனும் கிடைக்கமாட்டாது.

பாரதப்போர் ஆரம்பமாகப் போகிறது. கௌரவர் பக்கத்தில் துரியோதனனின் தந்தை கண்பார்வை இழந்த நிலையில் அமர்ந்திருக்கின்றார். அவ்விடத்திற்கு வேதவியாசர் வருகிறார். திருதராட்டிரனைப் பார்த்து, நடக்கப்போகும் குருஷேத்திரப் போரை பார்ப்பதற்கு உனக்கு கண்பார்வையை தரலாம் என்கிறார்.

திருதராட்டிரனோ, சுவாமி! இக் கொடும் போரைப் பார்க்க எனக்குக் கண்பார்வை வேண்டாம் என்றார்.

திருதராட்டிரனுக்கு கண்பார்வை இல்லாததன் காரணமாக பாண்டு ஆட்சியை எடுத்துக் கொண்டதும் அதன் வழி ஆட்சி உரிமைப் பிரச்சினை ஏற்பட்டதும் தெரிந்ததே.

ஆக, திருதராட்டிரனுக்குக் கண்பார்வை இருந்திருந்தால் பாரதப் போருக்கே இடமில்லை. நிலைமை இதுவாக இருக்கும் போது, குருஷேத்திரப் போரைப் பார்ப்பதற்கு கண்பார்வை கொடுத்தால் யார்தான் அதை ஏற்றுக் கொள்வார்?

இதுபோலவே, தமிழர்கள் நீண்டகாலம் போராடி உரிமையைப் பெறும்போது தமிழ் இனத்தின் அடையாளம் இல்லாது போயிருந்தால் கிடைத்த உரிமை தேவையற்றதாகிப் போகுமல்லவா?

எனவேதான் எங்கள் இனத்தைக் காப்பாற்ற-இளம் சமூகத்தை வழிப்படுத்த-போதைப் பாவனையை ஒழிக்க- களவு, கொள்ளை, சண்டித்தனம் என்ற நட்டாமுட்டித்தனங்களை வேரறுக்க கிராமங்கள் தோறும் எழுச்சி இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

# அரச சேவையை மக்களுக்கு நெருக்கமானதாக மாற்றியமைத்தது தற்போதைய அரசாங்கமே

## அமைச்சர் பஷில் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுமக்களிடமிருந்து தூரப் படுத்தப்பட்டிருந்த அரச சேவையை மக்களுக்கு மிகவும் நெருக்கமானதாக மாற்றியமைத்தது தற்போதைய அரசாங்கமே என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஏற்கெனவே இருந்த அரசாங்கம் அரச சேவையை கீழ் மட்டத்தில் வைத்திருந்ததால் அரச சேவை பொது மக்களிடமிருந்து தூரப்படுத்தப்பட்டிருந்தது.

தற்போதைய அரசாங்கம் அரச சேவையை வலுப்படுத்தி மேம்படுத்துவதற்காக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதால் சிறந்தமுறையில் மக்கள் சேவையை வழங்க முடிந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

குளியாப்பிட்டியவில் நடைபெற்று வரும் 8-வது தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சியை பார்வையிட வருகை தந்த அமைச்சர் பஷில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் பல்வேறு வேலைத் திட்டங்களையும் ஆரம்பித்து வைத்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இவ்வாண்டு முதல் மக்கள் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்காக நடமாடும் சேவைகளை ஆரம்பித்து வைத்தோம்.

இதன் மூலம் மக்கள் எதிர்நோக்கும் 11 இலட்சத்து 45,931 பிரச்சினைகள் இந்த நடமாடும் சேவை வேலைத் திட்டத்தின் போது முன்வைக்கப்பட்டன.

இவற்றில் 80 வீதமான பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில இந்த பிரச்சினைகளை தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சியுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சில பிரச்சினைகள் சட்டத்துடன் தொடர்புபட்டு காணப்படுவதால் அவற்றை சட்ட விதிமுறைகளுக்கு அமைய தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (அ-2)

## சிவராத்திரி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய மகாசிவராத்திரி உற்சவம் நாளை வியாழக் கிழமை மாலை 4.30 மணி தொடக்கம் நான்கு சாமமும் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

மறுநாள் வெள்ளிக்கிழமை அதிகாலை திருவூஞ்சல் உற்சவத்தைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வந்து ஆலய பித்தர் கேணியில் தீர்த்த உற்சவம் இடம்பெறும்.

இதன்போது அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நாடகம், வில்லுப்பாட்டு ஆகிய கலை நிகழ்வுகள் நடைபெறும். (அ-2)

## வள்ளியம்மை திருமண படலம்

(பருத்தித்துறை)

கரவெட்டி கிழக்கு கிழவித் தோட்டம் விக்ன விநாயகர் ஆலயத்தில் இன்று புதன்கிழமை காலை 7.30 முதல் பிற்பகல் 2.30 வரை வள்ளி யம்மை திருமணபடலம் படிப்பு நடைபெறவுள்ளது.

இதைத் தொடர்ந்து சுவாமி வீதி வலம் இடம்பெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (அ-9-10)

## ஓய்வூதிய நம்பிக்கை நிதிய நிர்வாக தெரிவு

(கரவெட்டி)

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரிவின் 6 ஆம் ஆண்டுப் பொதுக்கூட்டம் கடந்த 18 ஆம் திகதி கரவெட்டி பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் வீ.எஸ். வீரசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் சிவஸ்ரீ, சிறப்பு விருந்தினர்களாக பிரதேச செயலக கணக்காளர் திருமதி எம்.வசந்தமலர், யாழ்.மாவட்ட ப.சே.ஓ.ந. நிதியத்தின் தலைவர் ஸ்ரீ.சக்திவேல், பொருளாளர் எஸ்.கணேசலிங் கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதன்போது 2014ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக சபை தெரிவு இடம் பெற்றது.

தலைவராக ஓய்வுபெற்ற தபாலதிபர் வீ.எஸ்.வீரசிங்கம், செயலாளராக ஓய்வுபெற்ற ஆசிரியர் சி.க.லோகநாதன், பொருளாளராக பட்டய அளவையாளர் க.தா.சிறீஸ்கந்தசிங்கம் தெரிவாகினர்.

மேலும் நிர்வாக சபை அங்கத்தவர்களாக சிவசிதம்பரம், சிவப்பிரகாசம், செவந்திநாதர், உமாபதி கயிலாயநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதாக செயலாளர் அறிவித்துள்ளார். (அ-2)

## நாடக செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டு கழகத்தினால் க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான நாடகமும் அரங்கியக்குமான வழிகாட்டல் செயலமர்வு இன்று 26-ம் திகதியிலிருந்து அடுத்த மாதம் 1-ம் திகதி வரை ஐந்து நாட்கள் யாழ்.முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் பி.ப 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வு இலவசமாக நடைபெறுவதனால் அனைத்து மாணவர்களையும் கலந்து பயன்பெறுமாறு பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் செயலாளர் திரு.தயாநிதி அவர்கள் தெரிவித்தார். (செ)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை ஆலய முன்றலில் பாடசாலை அதிபர் திருமதி கு.அசோக்குமார் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் சங்கம நிறுவன இயக்குநர் அருட்தந்தை எஸ்.அந்தோனிமுத்து, யாழ்.கல்வி வலய ஆரம்பக்கல்வி, சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி ந.அகிலதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக யா/புத்தூர் மெ.மி.த.க பாடசாலை அதிபரும் பழைய மாணவருமான பொ.வரதகுலசிங்கம் கலந்து கொள்வார். (அ-2)

## மகா சிவராத்திரி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயிசேவா நிலையத்தின் ஏற்பாட்டில் மகா சிவராத்திரி நாளை வியாழக்கிழமை மாலை 5.55 மணிக்கு கொடியேற்றத்துடன் மேற்படி நிலையத்தில் ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெறும்.

✦✦✦✦✦✦✦

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கமானது மகா சிவராத்திரி விரத நாளில் நந்திக்கொடியினை ஏற்றி வழிபடுமாறு கேட்டுள்ளது.

இதற்கமைய சிவராத்திரி விரத நன்னாளில் ஆலயங்கள், அறநெறிப் பாடசாலைகள், வீடுகள்தோறும் நந்தி பொறித்த சைவர்களின் நந்திக்கொடியை ஏற்றி வழிபடுமாறு சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (அ-2)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### கடவுளை அடைய மூன்று வழிகள்



✦ வாழ்வு என்னும் கடலில் வேகமாக முன்னேற விரும்பினால் செய்ய வேண்டியது ஒன்றே. உங்கள் மனப் படகின் பாயை விரித்து விடுங்கள். ஆண்டவனுடைய அருட்காற்று இரவுபகலாக உங்களின் தலைக்கு மேல் வீசும்.

✦ இறைவனிடம் தன் மனதை ஒப்படைத்தவன் தீய எண்ணம் படைத்தவர்களுடன் இருந்தாலும் எந்தவிதமான தீமையையும் அடையமாட்டான்.

✦ மனிதன் இறைவனை எங்கு தேடியும் காணாமல் அலைகிறான். அதை அறிந்து கொள்ளாது அவன் உலகெல்லாம் தேடி அலைந்து திரிகிறான். அவன் தேடும் இறைவன் அவன் உள்ளத்திலேயே வீற்றிருப்பதை உணராமல் தவிக்கிறான்.

✦ வேக வைத்த நெல்லை பூமியில் விதைத்தால் அது முளைப்பதில்லை. அதுபோல, உண்மை ஞானம் என்னும் நெருப்பினில் புடமிட்ட உயிர்கள் மீண்டும் மண்ணுலகம் வருவதில்லை. ஆனால், அஞ்ஞானம் கொண்டு அலையும் உயிர்கள் மீண்டும் மீண்டும் பிறவி எடுக்கின்றன.

✦ இல்லறத்தில் இருப்போர் உயிர்களிடத்தில் அன்பு, எளியவர்களுக்குச் சேவை, கடவுளின் திருநாமத்தில் பக்தி இவற்றை தவறாது பின்பற்றி வந்தாலே கடவுளை அடைய முடியும்.

✦ தன் உண்மைத் தன்மையை மறைத்து வெறும் வேஷம் போடுபவனும் எதிலும் தன்னை மட்டுமே முன்னிறுத்தி சுயலாப நோக்கத்தோடு செயல் புரிபவனும், பிறருக்கு அநீதி இழைப்பவனும், ஒழுக்கநெறி தவறுபவனும் என்றைக்கும் கடவுளை அடைய முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மல்லாகம் நியூ வாரியஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய மின்னொளியிலான கரப்பந்தாட்ட போட்டி அண்மையில் இடம்பெற்றது. இப் போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று சம்பியனானது. இப் போட்டியில் இரண்டாமிடத்தினை பெற்ற புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகத்தை படத்தில் காணலாம்.

# அடுத்த சுற்றுக்கு தெரிவானது பருத்தித்துறை லீக் அணி



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் சிரேஷ்ட லீக் அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்ட இரண்டாம் சுற்று போட்டியில் முல்லைதீவு லீக் அணியை வீழ்த்தியது பருத்தித்துறை லீக் அணி.


இமையாணன் மத்திய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் முதல் பாதியில் பருத்தித்துறை லீக் வீரன் காண்டீபன் 23 ஆவது நிமிடத்தில் முதலாவது கோலை போட ஆட்டம் விறுவிறுப்படைந்தது. இருப்பினும் அதன் பின் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய முல்லைதீவு லீக் அணி கோல் போடும் சந்தர்ப்பங்கள் பலவற்றை தவறவிட்டது.


1:0 என்ற கோல் அடிப்படையில் முதல் பாதி ஆட்டம் நிறைவடைந்த நிலையில் இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானது. ஆட்டம் ஆரம்பமானது முதலே பருத்தித்துறை லீக் அணி வேகமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இதன் பலனாக ஆட்டத்தின் 47,53ஆவது நிமிடங்களில் பருத்தித்துறை லீக்கின் முன்னணி வீரன் பிறேம்குமார் அடுத்தடுத்து இரு கோல்களை அடிக்க, ஆட்டம் பருத்தித்துறை லீக்கின் கைகளில் வந்தது.

இருப்பினும் சளைக்காமல் ஆடிய முல்லைதீவு அணி ஆட்டத்தின் 57 ஆவது நிமிடத்தில் அவ்வணிவீரன் பகீரதனின் சிறப்பான ஆட்டதின் மூலம் ஒரு கோலை போட்டது. ஆட்டநேர முடிவில் 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டி அடுத்த சுற்றுக்கு தெரிவானது பருத்தித்துறை லீக் அணி. (அ-23)

# வீரர்களின் போர்

## கோலாகலமாக இன்று ஆரம்பம்





தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மோதும் இவ் வீரர்களின் போர் இன்று தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

ரசிகர்களையும் இரு பாடசாலை மாணவர்களையும் பழைய மாணவர்களையும் இப் போட்டிகள் உற்சாகப்படுத்தும் என்றால் மிகையில்லை.

இரு அணிகளையும் பொறுத்தவரை யார வெல்வது என்ற மிகக்கடுமையான போட்டி உள்ளது.

இடம்பெற்று நிறைவடைந்த 13 போட்டிகளிலும் இரு அணிகளும் தலா 3 போட்டிகளில் வெற்றியீட்டியிருக்கின்றன. எஞ்சிய போட்டிகள் யாவுமே சமநிலையில் நிறைவுற்றிருப்பதால் எந்த அணி முதன்மையானது என்பதை நிரூபிக்க இப் போட்டியில் வெற்றி பெறுவது இரு அணிகளுக்கும் அவசியமானது.

சொந்த மைதானத்தில் களமிறங்கும் மகாஜனாக் கல்லூரிக்கு வாய்ப்புக்கள் அதிகமிருப்பதாக கூறப்படுகின்றது.

போட்டிகளை நடத்தும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியைப் பொறுத்தவரை சகல துறைகளிலும் அண்மைக்காலமாக ஜொலிக்கின்றது. யூனியன் கல்லூரியையும், ஸ்ரான்லிக் கல்லூரியை இனிங்சினாலும் வென்றுள்ளது. கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் மானிப்பாய் இந்துக் கல்லூரியுடனான போட்டியை சமபபடுத்தியுள்ளது. பலம் பொருந்திய அணிகளான யாழ்.இந்துக் கல்லூரியுடனும், சென் ஜோன்ஸ் கல்லூரியுடனும் போட்டியை இழந்துள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியைப் பொறுத்தவரை சொந்த மைதானம் இல்லாமை பாதகமானதே.

யாழ்ப்பாணக் கல்லூரியை இனிங்சால் வென்ற உற்சாகத்தோடு இப் போட்டியில் களம் காண்கின்றனர். விளையாடிய கொக்குவில் இந்துவுடனும், யாழ் மத்தியுடனும், ஒரு நாள் போட்டியொன்றில் சென்.ஜோன்ஸ் கல்லூரியிடமும் போட்டியை இழந்துள்ளனர்.

சொந்த மைதானம் என்பதால் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கு சாதகமாக இருக்கின்றபோதிலும் அவற்றையெல்லாம் முறியடிக்க சுன்னாகம ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிடம் திட்டங்கள் இல்லாமல இருக்காது. வெற்றிக்காக அணியினை ஒன்று திரட்டி போராடப் போவதாக இரு அணித்தலைவர்களும தெரிவித்தனர். மிக நீண்ட காலமாக முடிவில்லாது தொடரும் போட்டிகளுள் இப் போட்டி முடிவொன்றினைத் தரும் என எதிர்பார்க்கலாம்.(க-23)

## கும்பளை பாரதி வி.கழகத்தின் மின்னொளியிலான தாச்சி

அளவெட்டி கிழக்கு கும்பளை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் மின்னொளியிலான தாச்சிப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

24 அணிகள் பங்குகொள்ளும் இச்சுற்றுப் போட்டிகள் அளவெட்டி கிழக்கு கும்பளை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகி இடம்பெறுகின்றன.


கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டிகளில் சாந்தை விநாயகர் அணியும் புதுமடம் வைகறை அணியும் மோதின. இதில் 5:5 பழங்கள் அடிப்படையில் போட்டி சமநிலையில் நிறைவுற்றது. தொடர்ந்து வழங்கப்பட்ட 5 நிமிடங்களில் சாந்தை விநாயகர் அணி வெற்றி பெற்று இறுதிக்கு தகுதி பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற 2 ஆவது அரையிறுதிப் போட்டியில் புதுமடம் வைகறை அணியும், பண்டத்தரிப்பு அறிவொளி அணியும் மோதின. இதில் 7:6 பழங்கள் அடிப்படையில் பண்டத்தரிப்பு அறிவொளி அணி வெற்றி பெற்று இறுதிக்கு தெரிவானது. (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## லிவிங்ரன் அதிரடி

# வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணம்; பற்றீசியன்ஸ் காலிறுதிக்கு தெரிவு



வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 9 ஆவது ஆண்பாக நடத்தும் ஐம்பது பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் 109 ஆவது போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் பற்றீசியன்ஸ் அணி, யூனியன்ஸ் அணியை 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யூனியன்ஸ் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. 36.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 258 ஓட்டங்களைப் பெற்றது. ஜான்சன் 82, ரகுபதி 63, தயாளன் 36, ஆகீசன் 27 ஓட்டங்களைப் பெற்றனர். பற்றீசியன்ஸ் அணியைச் சேர்ந்த பத்மமுரளி 5, நோபேட் 2, அஜித் 2, லிவிங்ரன் 1 இலக்கினைக் கைப்பற்றினர்.

259 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய பற்றீ சியன்ஸ் அணி 39.2 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 261 ஓட்டங் களைப் பெற்றனர். லிவிங்ரன் ஆட்டமிழக்காது 62, மனோச், கிளிங்ரன் தலா 43, முரளி 23 ஓட்டங்களைப் பெற்றனர். யூனியன்ஸ் அணியை சேர்ந்த பிரசாந்த் 3, கலில், அருண், தயாளன், ஜான்சன் தலா ஒரு இலக்குகளை கைப்பற்றினர்.

2014ஆம் ஆண்டு சிறந்த அணி தெரிவு நிகழ்வுக்கு பற்றீசியன்ஸ் அணி 8.91 புள்ளிகளையும் யூனியன்ஸ் அணி 3.28 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர். இப்போட்டியில் வெற்றி பெற்ற பற்றீசியன்ஸ் அணி திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணியுடன் காலிறுதிப் போட்டியில் கலந்து கொள்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)





யாழ்.இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலையில் இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் இடைவேளை உடற்பயிற்சி கண்காட்சியையும் வெற்றியீட்டிய இல்லத்துக்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.கல்வி வலய பிரதி கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன் உட்பட விருந்தினர்கள் கேடயம் வழங்கி வைப்பதையும் அருகில் அதிபர் அ.ஆரியவதனி நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.குமாரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி

**திரிமனே சதம்**

# லசித் மலிங்க விக்கெட் வேட்டை பாகிஸ்தானை வென்றது இலங்கை



இலங்கையின் வேகப் புயல் லசித் மலிங்கவின் அபார பந்துவீச்சினால் பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஆசிய கிண்ணப் போட்டித் தொடரின் முதல்போட்டியில் இலங்கை அணி 12 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

5 அணிகள் பங்கேற்கும் 12-வது ஆசிய கிண்ணப் போட்டிகள் பங்களா தேஷில் நடைபெற்று வருகிறது.

இதன் ஆரம்ப போட்டியில் இலங்கை - பாகிஸ்தான் அணிகள் நேற்று பதுல்லவில் பலப்பரீட்சை நடத்தின.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இதன்படிமுதலில்துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணிக்கு குசல் பெரேரா - லஹிரு திரிமன்ன ஜோடி ஆரம்பத்தை வழங்கினர்.

இருவரும் இணைந்து முதலாவது விக்கெட்டுக்காக 28 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த வேளை, குசல்பெரேரா 14 ஓட்டங்களுடன் உமர் குல்லின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

தொடர்ந்து களமிறங்கிய சங்கக்கார, களத்தில் நின்ற திரிமன்னவுடன் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி நிலைத்து நின்று ஆடி ஓட்டங்களை சேர்த்ததால் இலங்கை அணியின் ஓட்ட எண்ணிக்கை வெகுவாக உயர்ந்தது.

இந்த ஜோடி தமக்கிடையில் 2-வது விக்கெட்டுக்காக 161 ஓட்டங்களை பகிர்ந்திருந்தவேளை சங்கக்கார 65 பந்துகளில் 67 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த திரிமன்ன அணியின் ஓட்ட எண்ணிக்கை 198ஐ எட்டியபோது ஒருநாள் போட்டிகளில் தனது 2-வது சதத்தை பதிவு செய்தார். எனினும் அவர் அணி 204 ஓட்டங்களை எட்டியபோது 102 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய வீரர்களில் அணித் தலைவர் மத்யூஸ் சிறப்பாக ஆடி ஓட்டங்களை எடுக்க இலங்கை அணி 50 ஓவர்களின் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 296 ஓட்டங்கள் என்ற சிறப்பான மொத்த ஓட்ட எண்ணிக்கையைப் பதிவு செய்தது.

களத்தில் அணித் தலைவர் மத்யூஸ் (55), சண்டிமல் (19) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக உமர் குல், சஹிட் அப்ரிடி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

50 ஓவர்களில் 297 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு சர்ஜில் கான் - அகமட் ஷெசாட் இணை ஆரம்பத்தை வழங்கியது.

இவர்கள் இருவரும் தமக்கிடையில் 28 ஓட்டங்களை பகிர்ந்திருந்த வேளை சர்ஜில் கான் 26 ஓட்டங்களுடன் லக்மலின் பந்தில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய ஹபீஸ், களத்திலிருந்த ஷெசாட்டுடன் இணைந்தார்.

இவர்கள் இருவரும் இணைந்து 2-வது விக்கெட்டுக்காக 49 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த வேளையில் ஷெசாட் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பாகிஸ்தான் அணி ஒருகட்டத்தில் 23.3 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 121 ஓட்டங்களுடன் காணப்பட்டது.

எனினும் 5-வது விக்கெட்டுக்காக இணைந்த உமர் அக்மல் - மிஸ்பா உல் ஹக் ஜோடி சிறப்பாக ஆடி தமக்கிடையில் 121 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்திருந்த போது, உமர் அக்மல் அணியின் ஓட்ட எண்ணிக்கை 242 ஓட்டங்களை எட்டியபோது 74 ஓட்டங்களுடன் லக்மலின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அவர் ஆட்டமிழந்து அணி மேலதிகமாக 12 ஓட்டங்களை கடக்கும்போது, இலங்கை அணியின் வேகப் புயல் மலிங்க பாகிஸ்தான் அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார்.

சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் (73), அதிரடி வீரர் அப்ரிடி (04) ஆகியோரை வெளியேற்றி போட்டியை இலங்கை பக்கம் திருப்பினார்.

பின்வரிசை வீரர்களில் பிலவால் பற்றி அதிரடியாக ஓட்டங்களை (18) எடுத்தபோதும் பாகிஸ்தான் அணியால் வெற்றியிலக்கை நெருங்க முடியவில்லை.

இறுதியில் பாகிஸ்தான் அணி 48.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 284 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் லசித் மலிங்க 52 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், லக்மால் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை அணியின் வெற்றிக்கு காரண கர்த்தவாக விளங்கிய லசித் மலிங்க தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் இலங்கை அணி 4 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டது.

இப்போட்டித் தொடரின் 2-வது போட்டி இன்று பங்களாதேஷ் - இந்திய அணிகளுக்கு இடையில் இதே மைதானத்தில் இலங்கை நேரப்படி பி.ப 1.30க்கு ஆரம்பமாகிறது. (க)

## நவநீதம்...

குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் போராளிகள் மற்றும் கைதிகளை நடத்துதல், சிறுபான்மை சமூகத்தினர் மற்றும் மதவழிபாட்டுத் தளங்கள் மீதான தாக்குதல்கள், கருத்து சுதந்திரத்தை முடக்கும் வகையிலான நடவடிக்கைகள், உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை அமுல்படுத்தாமை, வடக்கு கிழக்கு பெண்களின் பாதுகாப்பு நிலைமை, வடக்கின் இராணுவ மயமாக்கல், இராணுவ மயப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் போன்ற விடயங்கள் தொடர்பில் நவநீதம் பிள்ளை கவனம் செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிபுணர் குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையிலும் இந்த விடயங்கள் பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## பாணின் நிறையில்...

செய்யப்பட்ட பாணின் நிறைகள் (அனுமதியளிக்கப்பட்ட பாணின் நிறை 400 கிராம்) குறைவாகக் காணப்பட்டமை தொடர்பில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் கண்டுபிடிக்கப்பட்டது.

அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட குறித்த இரு விற்பனை நிலையங்களுக்கும் எதிராக மல்லாகம் மற்றும் பருத்தித்துறை நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாணின் நிறை குறைவு சம்பந்தமாக யாழ்.மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கத்துடன் விரைவில் கலந்துரையாடவுள்ளோம். இவ்வாறு பாணின் நிறை குறைவாக தயாரித்து விற்பனை செய்யும் வெதுப்பகங்களுக்கு எதிராக எதிர்காலத்தில் கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் தெரிவித்தார்.

அதேவேளை, யாழ்.மாவட்டத்திலுள்ள உணவகங்களில் உணவுகளின் விலையினை விலைப்பட்டியலில் காட்சிப்படுத்துமாறும் அறிவுறுத்தியுள்ளோம். இவ்வாறு காட்சிப்படுத்தாத உணவகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அதிகாரி மேலும் தெரிவித்தார். (செ-11)

## வடக்கு மக்களுக்கான...

கொண்டிருந்தார்கள்.

அவர்களின் வீடுகள் மீளநிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்டன. இதுவரையில் கிடைக்கப்பெற்ற நிதியைக் கொண்டு அங்கு 20000 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் 63 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கு 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவையாக உள்ள போதும், அந்த நிதியை பெற்றுக் கொள்வதில் சிக்கல்கள் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

## நீதி கேட்கும் வாய்ப்...

கம் வகிக்கும் நாடுகள் மேற்கொள்ள வேண்டுமென்றும், குறிப்பாக இன அழிப்பு போர் குற்றங்கள், மனித உரிமைகளுக்கு எதிரான குற்றங்கள் பற்றி விசாரிக்க வேண்டுமென்றும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

டெசோ அமைப்பின் சார்பிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் சர்வதேச விசாரணை வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாகவே வலியுறுத்தப்பட்டு வருகிறது.

டெசோ அமைப்பில் இதுகுறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களை நேரில் கொடுத்து, அதன் முக்கியத்துவத்தை விளக்கியிருக்கிறார்கள்.

அண்மையில் திருச்சியில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் பத்தாவது மாநில மாநாட்டில் சர்வதேச விசாரணை குறித்து தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஈழத் தமிழர்களுக்கு நீதியும் நியாயமும் கேட்டு சர்வதேச அளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பயணம் கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாக நீண்டு வளர்ந்து கொண்டே இருக்கிறது.

உலகில் உள்ள பல்வேறு தேசிய இனங்களுக்கு நீதியும் நியாயமும் கிடைத்திருக்கும் வேளையில், ஈழத் தமிழர்களுக்கான நீதி கிடைக்காமல் இருப்பது உலக சரித்திரத்தின் சோகமாகவே கருதப்படுகிறது.

உலகெங்கிலும் வாழும் தமிழ் மக்கள் ஈழத் தமிழர்களுக்கு நீதியும் நியாயமும் விரைவில் கிடைத்திட சுதந்திரமான, நம்பகத் தன்மை வாய்ந்த சர்வதேச விசாரணை ஒன்றை ஏற்படுத்திட அவர்கள் வாழும் நாடுகளின அரசை வற்புறுத்திட இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன் என்றுள்ளது. (செ-11)

## தனி ஈழம் அமைக்க...

சர்வதேச விதிமுறைகளை மீறி போர்க் குற்றங்கள் நிகழ்த்தியவர்களை, இனப்படுகொலை செய்தவர்களை சர்வதேச நீதிமன்றம் முன் நிறுத்தி தண்டனை பெற்றுத்தரவும்,

இலங்கை வாழ் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையை வலியுறுத்தவும்,

தனி ஈழம் அமைந்திட இலங்கை வாழ் தமிழர்கள் மற்றும் உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் இடம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களிடையே பொது வாக்கெடுப்பு நடத்தவும் அதிமுக உறுதிபூண்டுள்ளது.

**02.தமிழக மீனவர் நலன்**

சட்டவிரோதமாக அப்பாவி தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவதை நிறுத்துமாறு இலங்கை அரசை வலியுறுத்தவும்,

தமிழக மீனவர்களின் நலன்களைக்காக்கும் வகையில், இலங்கை மற்றும் இந்திய மீனவர்களுக்கிடையேயான பேச்சுவார்த்தையை நடத்துவதற்குரிய சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்கவும் தேவையான நடவடிக்கைகளை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எடுக்கும்.

ஆழ்கடல் மீன்பிடிப்பு, மீன்பிடி பிரச்சினைக்கு ஒரு தீர்வாக அமையும் என்பதால், ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்கும் வகையில், ஆழ்கடல் மீன்பிடி படகுகள் வாங்குவதற்கு மத்திய அரசு மூலம் முழு மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**03.கச்சதீவு மீட்பு**

தமிழக மீனவர்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில், கசசதீவினை திரும்பப் பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் எடுக்குமென அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## அனைத்துலக விசார...

யடைந்ததுள்ள நிலையில், சுதந்திரமான அனைத்துலக விசாரணைக்கான பொறிமுறைக்கு பரிந்துரை செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகள் சில முன்னேற்றம் கண்டிருப்பதனை ஒத்துக் கொள்வதாகவும், எனினும் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பில் சுதந்திரமான மற்றும் நம்பகமான விசாரணைகள் உறுதி செய்ய முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைச்சபையின் ஆணையாளர் அலுவலகம் பரிந்துரைத்த சிறப்பு பொறிமுறைகள் ஊடான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு இலங்கை உரிய பதிலளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, வெளிவந்துள்ள புதிய ஆதாரங்கள் ஆயுத மோதல்களின் இறுதி கட்டங்களில் நடந்த நிகழ்வுகளை வெளிப்படையாக தெரிவிக்கிறது எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தப் பின்னணியில், சுதந்திரமான அனைத்துலக விசாரணைப் பொறிமுறைக்கு ஐ.நா. மனித உரிமைச்சபை ஆணையாளர் அலுவலகம் பரிந்துரைப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையானது வரும் மனித உரிமைச்சபைக் கூட்டத்தொடரில் இலங்கை விவகாரத்தில் வலுவான அனைத்துலக விசாரணை நடத்த கோரும் தீர்மானத்துக்கு வழிகோல வேண்டுமென சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிளவை ...

விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர்மேலும தெரிவிக்கையில்,

இலங்கை அரசாங்கத்தின் மீது சர்வதேச நாடுகளின் தேவையற்ற தலையீடுகள் அதிகரித்து வருகின்றது. எமது நாட்டின் மீது தேவையற்ற சர்வதேச நாடுகளின் தலையீடுகளை தடுக்க நமக்குள் ஒற்றுமை வேண்டும்.

இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேணடும் என்ற போர்வையில்மேலைத்தேய நாடுகள் இங்குள்ள இனங்களுக்கிடையில் பிளவினையும், பிரிவினையையும், கடந்தகால கசப்பான உணர்வையும் ஏற்படுத்தும் சதி முயற்சியில் ஈடுபட்டுள்ளன இதனை அனைத்து இன மக்களும் புரிந்துகொள்ளவேண்டும்.

நமக்குள் ஏற்படும் பிரச்சினைகளுக்கு நாமே தீர்வு காண வேண்டும். வெளியிலிருந்து வரும் அச்சுறுத்தல்களை அப்போது தான் நாம் தடுக்க முடியும் என்றும் பிரதி அமைச்சர் அறிவுரை வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் ஈ.ஏ.சமரசிங்க, யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் மற்றும் பலர்கலந்து கொண்டனர்

இந்த நிகழ்வில்யாழ் மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட 250 இற்கும் மேற்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டது. (செ-6)

## துணை உயர்ஸ்...

த்துள்ள நிலையில், தொடர்ந்து அங்குள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகத்தின் பாதுகாப்பும் கேள்விக்குறியாகி இருக்கிறது.

இந்த நிலையில் அதனை மூடிவிடுவதற்கு முன்னதாக அரசாங்கம் தீர்மானித் திருந்த போதும், உள்நாட்டில் எதிர்ப்புகள் வெளியாகியதைத் தொடர்ந்து அந்த தர்மானம் ஒத்திவைகக்கப்பட்டுள்ளது.

(செ-11)

# அமெரிக்க தீர்மா...

செய்தியாளர்களிடம் பேசியபோது இவ்வாறு அவர் கூறினார்.

ஐ.நா. தீர்மான பிரச்சினையை தமிழக கட்சிகள் அரசியலாக்கக் கூடாது என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மேலும், ராஜிவ் காந்தி கொலை வழக்கில் 7 பேரை விடுதலை செய்ய வலியுறுத்துபவர்கள் தீவிரவாதத்தை ஆதரிப்பவர்கள் என்றார்.

இதேவேளை ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில்அடுத்த மாதம் நடக்கும் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா வலுவான தீர்மானத்தை கொண்டு வர இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# போர்க்குற்ற காணொளி...

அத்துடன், பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் காட்சிகள் இடம் பெற்றுள்ளதாகவும், அதை திரையரங்குகளில் காண்பிக்க அனுமதிக்க முடியாது என்றும் இந்திய தணிக்கைச்சபை கூறியிருந்தது.

இந்தநிலையில், திரையரங்குகளில் காண்பிக்கத் தடைவிதிக்கப்பட்ட, இந்தியா, நேபாளம், மலேசியா ஆகிய நாடுகளில், இந்த ஆவணப்படத்தை இணையத்தளத்தில் கட்டணமின்றிப் பார்க்கும் வசதியை ஏற்படுத்த கெலும் மக்ரே முடிவு செய்தார்.

இதன்படி நேற்று முன்தினம் முதல், இந்த ஆவணப்படம் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இதனை இலங்கையிலும் கட்டணமின்றிப் பார்வையிடலாம்.

94 நிமிடங்களைக் கொண்ட இந்த ஆவணப்படத்தில், போரில் உயிர்தப்பியவர்களின் சாட்சியங்கள், இறுதிக்கட்டப் போரில் ஏற்பட்ட அழிவுகள், அங்கிருந்த ஐ.நா பணியாளர்களின் செவ்விகள், இலங்கைப் படைகளின் போர்க்குற்றங்களை வெளிப்படுத்தும் காட்சிகள், அவை தொடர்பான, தடயவியல் நிபுணர்களின் கருத்துகள் போன்றன இடம்பெற்றுள்ளன.

வட இந்தியாவில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்த ஆவணப் படத்தின் ஹிந்தி மொழியாக்கப் பதிப்பும் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(செ-11)





## சீரடி சாயி பாபாவின் சிவராத்திரி தின வீதி உலா (27-02-2014)

1-ம் சாமம் - மாலை 5.30 ற்கு
2-ம் சாமம் - இரவு 7 மணி
3-ம் சாமம் - நள்ளிரவு 12 மணி
4-ம் சாமம் - அதிகாலை 4 மணி

+ இரவு 7.30ற்கு வசந்தமண்டப பூசை
+ இரவு 8 மணிக்கு பவனி ஆலயத்திலிருந்து ஆரம்பம்

(ஆலயம் - கைலாய பிள்ளையார் வீதி    கோவில் வீதி
செட்டித்தெரு ஒழுங்கை - செட்டித்தெரு    பருத்தித்துறை வீதி
நல்லூர் குறுக்குவீதி    நாவலர் வீதி ஊடாக ஆலயம்)

**நள்ளிரவு 12 மணிக்கு** - லிங்ஹோற்பவ காலம்
பக்தர்கள் 108 குடம் நீர் தமது கரங்களாலேயே அபிஷேகம் செய்யலாம்.
**அதிகாலை 5.30 ற்கு** முன்னதாக தீர்த்தமும் கொடியிறக்கமும் இடம்பெறும்.

*அனைவரும் வருக! பாபா அருள் பெற!*

சீரடி சாயி மந்திர்
314, நாவலர் வீதி, நல்லூர்.    - ஆலயத்தினர் -
யாழ்ப்பாணம்.    தொ.பே :0777222568, 0213211605
(5664)



## பதவி வெற்றிடங்கள்

எமது பல்தேசிய கம்பனியில் பல்வேறுபட்ட பதவி வெற்றிடங்கள் உள்ளன. பணி புரிய ஆர்வமுள்ளவர்கள் இன்றே அழையுங்கள்.

- Supervisor (மேற்பார்வையாளர்)
- Ass.Manager (துணை முகாமையாளர்)
- Store keeper (களஞ்சியப்படுத்துனர்)
- Manager (முகாமையாளர்) (5691)

- அடிப்படை சம்பளம் வழங்கப்படும்
- வயதெல்லை (18-35)

தொடர்புகளுக்கு:-0775566226, 0772302795



## நெல்லியடியில்...

கணினி உலகில் சிறுவர்களுக்கான அரியசந்தர்ப்பம்

GLOBAL METRO CAMPUS

01.03.2014இல் மாலுசந்தியில் ஆரம்பிக்கப்படவுள்ள சிறுவர்களுக்கான கணினி கற்கைநெறிக்கான பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.(E-Kids learning 04 வயது தொடக்கம் 14 வயதுக்குட்பட்டவர்களுக்கானது)

இக் கற்கைநெறியுடன் அனைத்து வயதினர்களுக்குமான
Spoken English with Grammar, சிங்களம், Music, ORGAN (INSTRUMENTAL)

ஆகிய கற்கை நெறிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.
கீழ்க்காணும் கிளைகளிலும் இக் கற்கைநெறிகளானது ஆரம்பிக்கப்படவுள்ளன.
உடுப்பிட்டி, புலோலி, பருத்தித்துறை, தம்பசிட்டி.
மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்பட உள்ளமையினால் உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்.
**(ரீசேட், புத்தகங்கள், புத்தகப்பை என்பன இலவசம்)**
(சு-6590)

GLOBAL METRO CAMPUS
No-169, Main Street, Malusanthy
T.P: 021 3200 500, 0766 838 717, 072 5959 590
Email: campus global@yahoo.com



## தற்போது யாழ் நகரில்...




இலங்கையில் BCAS CAMPUS மாத்திரமே வழங்கும்

# CAD & BS With MEP

Computer Aided Design & Building Studies
Mechanical Electrical & plumbing

மிக வேகமாக வளர்ந்து வரும் உலகளாவிய கட்டட நிர்மாணத்துறையில் கணணி பட வரைஞர்களுக்கும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்குமான வேலை வாய்ப்புக்கள் நிறைந்து காணப்படுகின்றன. கணணி முறைப் படம் வரைதலில் சிறப்புத் தேர்ச்சியும் (Expert knowledge in CAD) கட்டட நிர்மாணத் தொழில் நுட்பங்கள் தொடர்பான அடிப்படை அறிவும் கொண்டோர்களுக்கான ஏராளமான தொழில் வாய்ப்புக்கள் மத்திய கிழக்கிலும் ஏனைய நாடுகளிலும் காணப்படுகின்றன. அதேவேளை கூடுதல் வருமானமும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

இலங்கையில் கடந்த 14 வருடங்களுக்கும் மேலாக உயர்கல்வி வாய்ப்புக்களையும் தொழிற் பயிற்சிப் பாடநெறிகளையும் வழங்கிவரும் முன்னணி நிறுவனமான BCAS CAMPUS மாத்திரமே வழங்கும் CAD & BS பாடநெறி உடனடித் தொழில் வாய்ப்பை உத்தரவாதப்படுத்தும் மேற்குறிக்கப்பட் திறன்களைப் பெற்றுத் தருவதோடு சர்வதேச அங்கீகாரம் கொண்ட இரட்டைத் தகைமைகளையும் பெற்றுத் தருகிறது. CAD & BS பாடநெறியினைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் அனைவரும் உடனடித் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள அதே வேளை பெரும்பான்மையானவர்கள் BCAS CAMPUS இன் உதவியுடன் மத்திய கிழக்கில் CAD Draughtsman, Construction Supervisor, Junior Quantity Surveyors, Land Surveying Assistant ஆகிய தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர்....

**Duration : 6 Month**
பாடநெறி முடிவில் இரட்டைத் தகைமைகள்
- Professional Diploma in CAD
- Certificate in Building Studies.

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

*Building Careers - Transforming Lives*

www.bcas.lk | ISO 9001:2008 CERTIFIED | 15 Years

www.MacroAdz.com (C-6592)

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar



**முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனமான திசைகாட்டியின்**

## துன்னாலைப் பிரதேச இலவச அறநெறிப் பாடசாலை

# ஆரம்ப விழா அழைப்பு

பிரதம விருந்தினர் :
உயர்திரு. **அன்னலிங்கம் பிரேம்சங்கர்** அவர்கள்
(மேல் நீதிமன்ற நீதிபதி)
தலைவர்:
திரு. **எஸ். சிவகணேசன்**
(இணைத்தலைவர் துன்னாலைப் பிரதேச கல்வி, சமய அபிவிருத்தி மன்றம்.)
ஆசிகள் : **நல்லை ஆதின முதல்வர்**
சிறப்பு விருந்தினர் :
Dr. T. **கலாமணி**
(தலைவர், திசைகாட்டி கலை இலக்கிய மன்றம்)
காலம் : 03.03.2014 பி.ப. 3 மணி
இடம் : யா/ துன்னாலை வடக்கு மெ.மி.த. பாடசாலை மண்டபம்.

*தங்கள் வாழ்த்தும், வரவும் அவசியமானதே...*

அழைப்போர்: திசைகாட்டியின் துன்னாலை பிரதேச கல்வி, சமய அபிவிருத்தி மன்றம்.
தவிர்க்க முடியாத காரணங்களால் ஆரம்ப விழா திகதி மாற்றமடைந்தது.
Ms. V. இந்துஜா (பொது முகாமையாளர்)
**(கௌரவ இயக்குநர் சபைக்கட்டளைப்படி)**

***திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்***
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016



(C-6597)





**உயர்ந்த சம்பளத்துடன் வேலை வாய்ப்பு அதிகமுள்ள தகவல் தொழில் நுட்ப பட்டப்படிப்பு.(கொழும்பு பல்கலைக்கழகம்)**

**+Industrial Certifications[Comp. Engineering-USA, CCNA,JAVA,WEB]**

க.பொ.த உயர்தரம் பயின்றோர் நேரடியாகவும் ஏனையோர் கொழும்பு பல்கலைக்கழக அடிப்படைக்கணினிப்பயிற்சியொன்றை பூர்த்தி செய்வதன் மூலமும் பயிலமுடியும்.
கற்கை நெறியைப்பூர்த்தி செய்தோருக்கு வெளிநாடுகளில் மேற்படிப்பு, தொழில்வாய்ப்பு.
புலமைப்பரிசிலிற்கு Type <name>BE & send to **0772395895** மேலதிக விபரங்களிற்கு
(யாழ் பல்கலைக்கழகதிற்க்கு அருகாமையில்.)
MCS கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து விருது பெற்ற நிறுவனம்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org